



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீறு பூத்த நெருப்பு

சிறுகதைத் தொகுதி

முகில்வண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீறு பூத்த நெருப்பு

சிறுகதைத் தொகுதி


முகில்வண்ணன்



கலாபூசணம்

**வே. சண்முகநாதன்**



மணிமணி பிரசுரம்

நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு-01.

கல்முனை. இலங்கை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறு பூத்த நெருப்பு

**Neeru Pooththa Neruppu**

Author's 16th publication

© 2016, Author.

**Author:**
**Mukilvannan**
Kalabhushanam V. Shanmuganathan

**ISBN:** 978 - 955 - 54011 - 9 - 7

| | |
|---|---|
| ஆசிரியர்: | முகில்வண்ணன்<br>கலாபூசணம் வே. சண்முகநாதன் |
| முதல் பதிப்பு: | 2047 மார்கழி [2016 திசம்பர்] |
| அட்டை ISBN: | 978-955-54011-9-7 |
| முன்னட்டை, கணினி நெறியாள்கை: | சு. உமாச்சந்திரன் |
| அச்சகம்: | A. J. பிரிண்டர்ஸ்<br>தெஹிவளை. |
| பக்கங்கள் | xii + 113 |
| விலை: | ரூபா. |
| வெளியீடு: | கலைமணி பிரசுரம்.<br>கல்முனை, இலங்கை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | | |
| | முன்னுரை | | |
| | அணிந்துரை | | |
| 01. | நீறு பூத்த நெருப்பு | சுதந்திரன் | 13 |
| 02. | மன்னிக்க வேண்டுகிறேன் | சுடர் | 22 |
| 03. | வரட்டும் அவர்...! | ராதா | 29 |
| 04. | இனியும் வாழ்வதா? | ராதா | 38 |
| 05. | நினைக்கத் தெரிந்த மனம் | ராதா | 46 |
| 06. | அவமானம் | ராதா | 55 |
| 07. | எனக்காக வாழண்ணா! | ராதா | 63 |
| 08. | சபதம் | மித்திரன் | 69 |
| 09. | பைத்தியம் | ராதா | 74 |
| 10. | ஏழையின் நெஞ்சம் | ராதா | 82 |
| 11. | நீ இல்லாத உலகத்திலே...! | ராதா | 89 |
| 12. | இனியும் ஏது இன்பம்? | ராதா | 95 |
| 13. | இலட்சியப்பாதை | மித்திரன் | 101 |
| 14. | புனர்வாழ்வு | ராதா | 110 |
| 15. | உயர்ந்த உள்ளம் | மித்திரன் | 118 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

*'நீறு பூத்த நெருப்பு'* என்னும் இச்சிறுகதைத் தொகுதி பதினாறாவது வெளியீடாக இருந்த போதும், இது சிறுகதைத் தொகுதிகளில் மூன்றாவதாகும். ஏற்கனவே *அவள் ஒரு தமிழ்ப் பெண்* மற்றும் *இனியும் நான் இராமன் தான்* என்னும் இரு சிறு கதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

முதலாவது இந்தியாவில் அச்சுவாகனமேறி பிரான்ஸில் வெளிவந்தது. இரண்டாவது நூலும் இந்தியாவிலே செம்மொழி மாநாட்டின் போது வெளியிடப்பட்டு முழுவதும் விற்றுத் தீர்ந்த வரலாற்றைக் கொண்டது. அது மட்டுமின்றி கல்முனையில் அது வெளியிடப்பட்ட போதும் அனைத்தும் விற்றுத் தீர்ந்த பெருமையைக் கொண்டது.

இப்போது வெளிவரும் இந்நூல் முகில்வண்ணனது ஆரம்ப காலக் கதைகள் எனக் கூறப்படுகிறது. ஆரம்பகாலக் கதைகளில் இன்னுமொரு பகுதி சிங்களக் கதாபாத்திரங்களை வைத்து எழுதிய கதைகள் அடங்கியது. அதுவும் பின்னர் வெளிவர இருக்கிறது.

இவை மட்டுமின்றி இன்னும் பல சிறுகதைத் தொகுதிகள் வெளியிடும் அளவுக்கு அவர் எழுதியிருப்பதை அறியும் போது வியப்பாக இருக்கிறது. அரச உத்தியோகம் பார்த்துக் கொண்டு நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்றிக் கொண்டு இவற்றை எல்லாம் எப்படி எழுத முடிந்தது? என்று எண்ணும் போது வியக்காமல் இருக்க முடியவில்லை.

அவர் கொண்டிருந்த விடாமுயற்சி தான் இவற்றுக் கெல்லாம் காரணம் எனலாம். எழுதியது மட்டுமின்றி இப்போது அவற்றை வெளியிடும் அவரது முயற்சிக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டியது கடனாகும். இது அவரது எழுத்துப் பணிக்கு முடி சூட்டுவதாக அமையும்.

கண்மணி பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை...

நான் ஆரம்ப காலத்தில் எழுதிய சிறுகதைகள் சில இப்போது 3ஆவது தொகுதியாக வெளிவருகின்றது. இதற்கு முன்னர் பிற்காலத்தில் நான் எழுதிய சிறுகதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவையாவன, *'அவள் ஒரு தமிழ்ப் பெண்'*, *'இனியும் நான் இராமன் தான்'* என்பனவாகும். பிற்காலத்தில் எழுதிய சிறுகதைகளை முதலில் வெளிக் கொண்டு வந்ததன் மூலம் நான் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளன் என்று பிறர் இனங்காணக் கூடியதாகவும், நல்ல பெயரை எடுக்கக் கூடியதாகவும் இருந்தது.

ஆரம்பகால சிறுகதைகள் 1966இல் இருந்து ஆரம்பமானது. இக்கதைகள் எழுதிய போது முகில்வண்ணன் யாரென்பது கூட பல எழுத்தாளர்களுக்கும் தெரியாதிருந்தது. அப்போது நான் ஊரில் இருக்கவும் இல்லை. தொழில் நிமித்தம் வெளியூர்களில் இருந்தேன். ஒரு முறை நான் ஊருக்கு வந்திருந்த போது, நான் இவ்வாறு நிறையக் கதைகள் எழுதியிருப்பதை அறிந்த எழுத்தாளர் அமரர். சண்முகம் சிவலிங்கம் (சசி) அவர்கள் வீட்டுக்கு வந்து எனது கதைகளைப் படிப்பதற்காக வாங்கிச் சென்றார்.

அப்போது அவர் கூறினார், *"ஒரு சிலர் 2, 3 கதைகளை எழுதிவிட்டு கோழிபோல் கொக்கரித்துக் கொண்டு திரியும் போது, நீங்கள் இவ்வளவையும் எழுதிவிட்டு ஆமை போல் அமைதியாக இருக்கிறீர்கள்"* என்றார். அத்துடன் நிற்காமல் சில கதைகளைத் தெரிந்தெடுத்து இவற்றை ஒரு நூலாக வெளியிடுங்கள் என்று அப்போதே கூறினார். அத்துடன் கதை நூலுக்கான தலைப்பையும் குறித்துத் தந்தார். அவர் தந்த தலைப்புக்களில் ஒன்றுதான் இந்த **நீறுபூத்த நெருப்பு** ஆகும். அவரது இன்னுமொரு தலைப்பிலும் வேறொரு தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவர இருக்கிறது. நான் எழுதிய சிறுகதைகள் நிறையவே இருக்கின்றபடியால் இன்னும் சில நூல்களை வெளியிடலாம் என்று முயற்சிக்கின்றேன். அதில் ஒன்று தான் இந்நூல்.

நூல் வெளியீடு பற்றிப் பலரும் பயங்காட்டியதால் நானும் அம்முயற்சியில் அப்போது ஈடுபடவில்லை. பின்னர் ஒரு முயற்சியில் ஈடுபட்டு கையைச் சுட்டுக் கொண்டேன். இப்போது மகன்மார் இதில் ஆர்வம் காட்டி செயற்பட்டு வருகின்றார்கள்.

ஆரம்ப காலக் கதைகள் நிறையவே இருப்பதால் அதனை இரு தொகுதிகளாகப் போட எண்ணியுள்ளேன். அதில் ஒரு தொகுதி தான் இந்த ***நீறு பூத்த நெருப்பு***. ஆரம்பகாலத்தில் அதிகமான சிறுகதைகள் ராதாவிலே வெளிவந்திருக்கின்றன. நான் என்ன எழுதினாலும் வெளிவந்த ஒரு பொற்காலம் அது எனலாம்.

1961இல் தினகரனில் ஒரு கட்டுரை மூலமும் பின்னர் ஒரு கவிதை மூலமும் ***முகில்வண்ணன்*** என்னும் பெயரில் அறிமுகமாகிய நான் எனது முதல் சிறுகதையை ராதாவிலே எழுதினேன். இது 1966 ஜனவரியில் வெளிவந்தது. அதன் பின்னர் நாவல், சிறுவர் நவீனம், கட்டுரைகள், கவிதைகள் என்று எல்லாம் எழுதினேன்.

ஓர் எழுத்தாளனாக வருவதென்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. அதற்கு நிறைய வாசிக்க வேண்டும். அயராத உழைப்பும் தீவிர முயற்சியும் வேண்டும். இது நான் கண்ட அனுபவமாகும். நான் நிறையவே வாசித்துள்ளேன். இப்போதும் அந்தப் பழக்கம் உள்ளது. அவ்வாறு வாசிக்கும் போது அதிலிருந்து வேறொரு கரு நமக்கு உருவாகலாம். நான் ஒரு கதையை எழுதி ஒரு பத்திரிகைக்கு அனுப்பி அது வெளிவரவில்லை என்றால் சோர்ந்து போய் விடுவதில்லை. அது வெளிவரும் வரை மீண்டும் மீண்டும் எழுதி வேறு வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்தான் இப்போது ஒரே முறையில் எழுதி அனுப்பியதும் கதைகள் பிரசுரமாகுவது.

முதல் இரு சிறுகதைத் தொகுதிகளையும் படித்த வாசகர்களுக்கு இத்தொகுதி சற்று வித்தியாசமாகத் தோன்றலாம். இதன் மூலம் எனது ஆரம்பகால எழுத்துநடை எவ்வாறு இருந்தது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். எனது ஆரம்பகால எழுத்துக்களை ஆவணப்படுத்தவும் இச்சிறுகதைத் தொகுதி உதவும் என்று கருதுகின்றேன்.

சிறுகதைகள் மட்டுமல்ல நாவலும் எழுதுவதற்கு நிறைய மனிதர்களுடன் பழகி அவர்களுடைய குணங்களைப் புரிந்து கொள்ள வேண்டி இருந்தது. இதற்கு எனது வேலை பெரும் உதவி செய்தது எனலாம். நான் இலங்கையின் பல பாகங்களிலும் வேலை செய்திருக்கிறேன். சிங்களவர்களுடனும் அதிகம் பழகி இருக்கிறேன். அவர்கள் பற்றியும் நிறையக் கதைகள் எழுதி இருக்கிறேன். அவை அடுத்த தொகுதியில் அதிகமாக இடம் பெறுகின்றன. நான் பழகுபவர்களிடம் காணப்படும் விசேஷ குணங்கள் ஏதாவது ஒரு கதையில் இடம் பெற்றிருக்கும்.

இக்கதைகளில் வரும் முடிவு ஒரே மாதிரியாக சில கதைகளில் இருப்பதை நீங்கள் காணலாம். ஆனால் கரு வித்தியாசமாக இருப்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

இக்கதைகளை வெளியிட்ட ராதா, சுடர், சுதந்திரன், மித்திரன் ஆகிய பத்திரிகைகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை வெளியிடும் பதிப்பகத்திற்கும், அணிந்துரை வழங்கிய விபுலமாமணி வி. ரி. சகாதேவராஜா (A.D.E.) அவர்கட்கும் அட்டைப் படத் தயாரிப்பாளருக்கும், ஒப்பு நோக்காளருக்கும் இவ்வெளியீட்டில் மறைமுகமாக நின்று உதவிய அனைவருக்கும். என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்வண்ணன்
''கலாபூசணம்''
வே.சண்முகநாதன்

''இலக்கிய பவன்''
நெசவு நிலைய வீதி,
பாண்டிருப்பு 01.
கல்முனை. இலங்கை.

தொலைபேசி: +94 67 2229948
கை. பேசி: +94 77 6078786

மின்னஞ்சல்: info@shanmukil.com
shanmukil@yahoo.com

இணையத்தளம்: www.shanmukil.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆழமான நதி!

நாடறிந்த காத்திரமான படைப்பாளி கலாபூசணம் வித்தகர் முகில்வண்ணன் தனது 16ஆவது படைப்பான ***'நீறு பூத்த நெருப்பு'*** எனும் மூன்றாவது சிறுகதைத் தொகுதியை பிரசவித்துள்ளார்.

நீறு பூத்த நெருப்பு, இக்கதை சுதந்திரனில் வெளிவந்தது. இத்தொகுதியில் உள்ள ஏனைய கதைகள் மித்திரனிலும் ராதாவிலும் சுடரிலும் வெளிவந்தவை. மொத்தமாக 15 கதைகள் இக்கதைத் தொகுதியில் அடங்கியுள்ளன.

ஈழத்து தமிழ் எழுத்தாளர் வரிசையில் முகில்வண்ணனின் நாமம் இடையீடின்றி நீங்காது நிலைபெற்ற பெயராகும்.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகநாதன் எனும் முகில்வண்ணன் ஒரு பொறியியலாளரா வார். அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் அச்சங்கத்தின் கண்ணிய மிக்க ஒரு தனாதிகாரி என்ற அடிப்படையில் அவரை நன்கறிவேன். அவரது கொள்கைகள் குணங்கள் தனித்துவ மானவை.

55ஆண்டுகளுக்கு மேலாக அமைதியாக இருந்து காத்திரமான பல இலக்கியப் படைப்புகளை தமிழ் சிங்கள இலக்கிய உலகிற்கு வழங்கியுள்ளார். கட்டுரை கவிதை சிறுகதை நாவல் சிறுவர் இலக்கியம் மெல்லிசை என பல்பரிமாண ஆளுமை கொண்ட அவர் ***ஓர் ஆழமான நதி*** எனலாம்.

அவர் ஒரு பொறியியலாளன் என்பதற்கு அப்பால் நல்ல சமுக சேவையாளனாக நனிசிறந்த ஆன்மீகவாதியாக தங்க விழாக் கண்ட இலக்கியவாதியாக சமூகத்தில் வலம்வந்து கொண்டிருக்கின்றார்.

காலத்தை வெல்லும் அவரது படைப்புகளான ஆனந்தக் கண்ணீர், அவள் ஒரு தமிழ்ப்பெண், இனியும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன்தான், செல்லக்கிளி, முருகனருள், பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம், எழுத்துலகில் 50 ஆண்டுகள், பாவைநோன்பு, பொங்கல் கவிதைகள், பளிங்குமாளிகை, சிங்கராஜா, ஒரு தேடல், கட்டுரைக் களஞ்சியம் ஆகிய 13 காத்திரமான நூல்களை தமிழ்கூறுநல்லுலகிற்கு அளித்த வித்தகர் முகில்வண்ணன் *நீறுபூத்தநெருப்பு* எனும் சிறுகதைத் தொகுதியை 16ஆவது படைப்பாக சமகாலத்தில் முன்வைக் கின்றார்.

அண்மையில் கல்முனை உவெஸ்லிக் கல்லூரியில் நடைபெற்ற அவரது மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவை நெறிப்படுத்தி தொகுத்தளித்தவன் என்ற வகையில் முகில்வண்ணன் ***ஓர் ஆழமான நதி*** என்று கூறுவேன்.

முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் அன்று, 'மேற்றிசைச் செல்வங்களான அறிவுப் பொக்கிசத்தை கீழ்த் திசைக்குப் பரப்ப பிறமொழிநல்அறிவு சாஸ்திர நூல்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்' என்றார்.

வித்தகர் முகில்வண்ணன் இன்று தமிழ்மொழியிலான திருவாசகம், கந்தசஸ்டி போன்ற நல்ல பல நூல்களை மொழிபெயர்ப்புச் செய்து சிங்களமொழியில் படைத்துள்ளார். அதற்காக அண்மையில் யாழ்ப்பாணத்தில் இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாட்டில் வைத்து முகில்வண்ணன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை கீழ்த்திசை மண்ணுக்கும் எமக்கும் பெருமை சேர்த்துள்ளது எனலாம்.

எழுத்துலகில் முகில்வண்ணனின் நாமம் ஒருபோதும் அழியாது அவரது நூல்கள் சாகாவரம் பெற்றவை. அவரது மேலும் பல படைப்புகளை தமிழ் இலக்கிய உலகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வாழ்த்துக்கள்.

விபுலமாமணி வி. ரி. சகாதேவராஜா (A.D.E.)

விபுலானந்த வீதி,
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுதந்திரன்**
17 ஏப்ரல் 1967

## 01 நீறு பூத்த நெருப்பு

ஆங்கிலப் படம் ஒன்றைப் பார்த்துவிட்டு ஹற்றன் புகையிரத நிலையத்தில் கொழும்பு புகையிரதத்தின் வரவை நோக்கி உட்கார்ந்திருந்தேன். அங்கு அப்போதிருந்த குளிரினால் எனது உடம்பு சில்லென்று குளிர்ந்து கொண்டிருந்தது. அதை எதிர்க்க ஆரம்பமானது போல் உடம்பினுள்ளே நெருப்பின் அனல் உருவாகிக் கொண்டிருந்தது.

குளிரை எதிர்க்கத்தான் அது உருவாகிக் கொண்டிருக்கிறது என்று வெளிப்படையாகக் கூறினாலும் அதற்கு இன்னொரு காரணமும் இருக்கத்தான் செய்தது. அது தான் நான் பார்த்த சினிமாப் படம்.

இரவு 10.30 இக்குத் தான் புகையிரதம் புறப்படும் என்றிருந்தது. மாலையே அங்கு வந்து சேர்ந்துவிட்ட நான், நேரத்தைக் கழிப்பதற்காக சுற்றும் முற்றும் பார்த்தபடி நடந்து கொண்டிருந்த போது எதிர்ப்பட்ட தியேட்டரின் உள்ளே நுழைந்து விட்டேன். அறிவிப்புப் பலகையைப் பார்த்ததும் இத்தனை காலமும் பார்க்காத இப்படிப்பட்ட ஒரு படத்தை இன்று கட்டாயம் பார்க்கத்தான் வேண்டும் என்று என் உள்ளம் துடித்தது. அந்தத் துடிப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லவே வீசிய குளிர் காற்று இதமாகத்தான் இருந்தது.

''இரவில் அழகிகள்'' என்ற அந்தப் படத்தை பார்த்து உணர்ச்சி வேகத்தில் உருகியழிந்து கொண்டிருந்தேன். படம் முடிந்ததும் எனக்கு தியேட்டரை விட்டு வெளியேறவே மனம் வரவில்லை. கண்களிலும் ஒருவித மயக்கம். அக்காட்சி களை மறையாமலே வைத்திருக்க வேண்டும் என்றொரு எண்ணம். இந்த எண்ணம் கலைந்து விடாமல் மெல்லவே நடந்து வந்து பிரயாணச் சீட்டுடன் வெளியே போடப்பட்டிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்திருந்தேன்.

வேறொரு நேரமாக இருந்தால் எத்தனையோ காட்சிகளை இரசித்துக் கொண்டிருப்பேன். ஆனால் இன்று உணர்ச்சிகளின் உத்வேகத்தில் உடம்பு சூடேறிக் கொண்டிருக்க எண்ணங் களையே எரிபொருளாக்கிக் கொண்டிருந்தேன்.

புகையிரதம் வந்து சேர்ந்தது. ஏறி அமர்ந்து கொண்டேன். அவ்வளவு நெருக்கம் இல்லை. நானிருந்த பெட்டியில் ஏதோ இரண்டொருவர் மட்டும் தான். நான் தனிமையில் இருந்தேன். கடந்த கால எண்ணங்களை அசை போட தனிமை தானே சிறந் தது. நான் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டேன். பக்கவாட்டுக்கு ஆடியபடி புகையிரதம் மெல்ல மெல்ல ஊர்ந் தது. அதே போல் என் எண்ணங்களும் தோன்றின.

''காலம் ரெம்பக் கெட்டுப் போச்சு இந்தக் காலத்துப் பிள்ளைகள் என்ன பிள்ளைகளாகவா இருக்குதுகள்..? பார்த்தாச் சிறிசு தான்... செய்யிறத பாத்தாத் தான் தெரியும் அவங்கட மேதாவிலாசம்... பிஞ்சில பழுத்திடுதுகள். காலம் கலி காலம் அல்லவா..?'' என்று அடிக்கடி பலர் சிலரைப் பற்றிக் குறைகூறக் கேட்டிருக்கிறேன். ஊரிலுள்ள இளைஞர்கள் காதலிக்கிறார்கள் மற்ற மற்ற விடயங்களில் ஈடுபடுகிறார்கள் என்று அறிந்தவர்களில் இப்படிக் கதைகாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம்

'பையனைப் பார் எவ்வளவு சாதுவானவன்... நடந்து போற வழியில் புல்லும் சாகாது. தருமர் இப்படித்தான் இருந்தவரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ? பெண்புரசைகளை நிமிர்ந்தும் பார்த்திருக்க மாட்டான். ஏன் ஆம்பிள்ளையளக் கூடத்தான். இந்தக் காலத்துப் பொம்பிளப் பிள்ளைகள் கூட கட்டாக் காலிகளாகத் திரியக்க இப்படி ஒரு பொடியன் எப்படி வளர்ந்தானோ தெரியல்ல. கோயில் குளத்துக்குப் போறதும், தேவாரம் பாடுவதும் தான் பொடியனுக்கு வேலை. படிச்சித்து இப்படித் திரியிறான். நல்லதொரு வேலை கிடைச்சிர வேணும்' என்று என்னைப் பற்றியும் கதைக்கத் தான் செய்தார்கள். அது சில வேளை என் காதுகளுக்கு எட்டவும் செய்தது.

அத்தனைக்கும் அவர்களது அசையாத நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானவனாகவே வாழ்ந்தேன். ஊரே என்னைப் போற்றியது என்ற பெருமையில் நான் ஆழ்ந்து கொண்டிருந்தேன். மற்றவர்கள் இப்படிக் கதைப்பதை சிலர் வந்து என்னிடம் கூறக் கேட்டிருக்கிறேன். அவர்கள் நம்பிக்கையை அழித்து விடாமல் பார்க்க வேண்டும் என்று தான் நானும் வாழ்ந்தேன்.

எனக்கு வேலை கிடைத்த போது தான்... எங்கள் குடும்பம் என்ன? ஊரே மகிழ்ந்தது. என்று கூறலாம். இந்த நேரத்தில் எனக்குக் கல்யாணப் பேச்சு ஆரம்பமானது.

''பொடியனுக்கு எப்படியும் வேலைக்குப் போறதுக்கு முன்ன ஒரு கால்கட்டைப் போட்டு விட வேணும் புள்ள. இவன் அடக்கமாகவும் அமைதியாகவும் இருக்கிறதப் பார்த்தா வலைவீசிப் புடிச்சிருவாளுகள்.. நம்மட ஊர்ல இப்படி எத்தின பேர் போன போன இடத்தில அகப்பட்டுத்தாங்க தெரியும் தானே'' என்றார் உறவினர் ஒருவர்.

''ஓமண்ண அதத்தான் நானும் யோசிக்கிறன். இவன் எங்காவது வெளியிடத்தில போற வாற நேரத்தில நாலைந்து பேர் இவனுக்குப் போட்டி போடுவாளுகள் என்டுதான் சாதகத்திலும் இருக்கிறது'' என்றா அம்மா.

''அப்ப நானென்னத்தைச் சொல்ற? உனக்குத் தெரியும் தானே'' என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணே எனக்குப் பாலிப்போடியார்ர பொட்டையில தான் ஒரு கண்.. அவள் தான் இவனுக்கு ஏத்தவள்.. அத ஒருக்கா கேட்டுப் பாக்கிறியா?''

''ஓ... அதுக்கென்ன? அவளுக்கென்ன குறைச்சல்? கறுப்பி என்டாலும் நல்ல அழகிதானே! வயல்பூமியும், வீடுவளவும் நகை நட்டும் இருக்கி.. பாலிப்போடி செத்தபிறகு சொத்தெல் லாம் அவளுக்குத் தானே! நீயும் சரியான ஆளத்தான் பாத்து வைச்சிருக்கிறாய் உண்ட மகனுக்கு. புடிச்சது புளியங் கொம்பு தான் விட்டிடாத வாறன்''

இப்படி அவர்கள் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்ட நான், அம்மாவிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். ''எனக்கு இப்ப இதெல்லாம் தேவல்ல. நேரம் வாறபோது நானே சொல்றன். இந்தக் கதையை இனிமேல் கதைக்க வேணாம்'' என்று. மிகக் கண்டிப்பாகச் சொல்லி அம்மாவின் பேச்சு வார்த்தையை அடக்கிவிட்டுத்தான் வேலைக்கு வந்தேன்.

ஹற்றனில் இருந்து இருபத்தி நாலு மைல்களுக்கப்பால் இருந்தது நான் வேலை செய்ய வந்த இடம். சிறிய கிராமம் தான் என்றாலும் நல்ல குளிரான, மன அமைதிக்கு அழகான இடமாக இருந்தது. தங்குவதற்கு வெளியே பெரிய ஹொட்டலோ வேறு இடங்களோ இல்லை. ஒரு சிங்கள வீடுதான் வீடு என்று சொல்லக் கூடிய மாதிரி இருந்தது. அங்குதான் எவரோ எல்லாம் எனக்குத் தெரியாதவர்கள் எல்லாம் பேசி ஒரு அறையை எடுத்துத் தந்தனர். அங்கேயே சாப்பாட்டையும் வைத்துக் கொண்டேன். அன்புக்கு இலக்கணமாக இருந்தது அந்தக் குடும்பம். எல்லோரும் என்னுடன் சகஜமாகத்தான் பழகினார்கள். ஆனால் எனக்குத்தான் கஷ்டமாக இருந்தது. காரணம் அவர்களுடன் பழகுமளவுக்கு எனக்குச் சிங்களம் தெரியாது.

சிறிய கிராமம் தான் என்றாலும் நல்ல மரங்களுக்குப் பெயர் போன இடம். கள்ள மரங்கள் வெட்டி விற்பவர்களை தடுப்பதற்கும் பிடிப்பதற்கும் தான் நான் அங்கு வந்திருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் கிராமத்தின் அழகான சூழ்நிலை என் மனதில் என்னவெற்றை எல்லாமோ வளர்த்துக் கொண்டிருந்தது.

அழகு... சூழ்நிலை என்று மட்டும் சொன்னால் உங்களுக்குப் புரியாது. உண்மையை மனந்திறந்தே சொல்ல வேண்டும். அப்போது தான் புரியும். அது தான் அக்கிராமத்தில் நிறைந் திருக்கும் பெண்கள். ஆமாம் நிறைந்திருக்கும் பெண்கள் தான். அங்கே அதிகமாக ஆண்களைக் காண முடியாது. இருப்பவர்களும் வேலைக்காக வெளியிடம் சென்றிருப்பார்கள். பாதைகளில் நடந்து செல்லும் போது எப்பக்கமும் வயது வந்த பெண்களைத் தான் காணலாம். அவர்களோ பார்த்தவுடன் சிரிப்பார்கள் கதைப்பார்கள். ''மாத்தயா'' என்ற மதிப்பு வேறு. ஒற்றையடிப் பாதையின் ஓரங்களில் காட்டின் நடுவே சிறு சிறு குடிசைகள். நான் எங்காவது செல்லும் போது அவர்கள் அழைத்து என்னை இருக்க வைத்து தேனீர் தந்து கதைப்பார்கள். அவர்கள் ஐந்து நிமிடமளவு கதைத்த பின்பு தான் நான் ஏதொ ஒன்றிரண்டு சொற்கள் பேசுவேன். பெண்கள் என்ற கூச்சம் ஒரு பக்கம், சிங்களம் வராதது மறுபக்கம்.

என்னிடம் கதைப்பதில் தனி இன்பம் கண்டார்கள் என்று தான் கூறவேண்டும். ஏனெனில் எல்லாப் பெண்களும் அப்படித்தான் என் வரவையே எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பது போல் இருப்பார்கள். ஆனால் நானோ அவர்களுக்கிடையில் பெரும் சங்கடப் படுவேன். நான் இதுவரை வாழ்ந்து வந்த வாழ்க்கைக்கு எதிராகத் திடீரென என்னை நானே எப்படி மாற்றிக் கொள்ள முடியும்.

இதைவிடப் பெரிய சங்கடம் குளிப்புத் தான். அந்த அருவியில் உள்ளதோ ஒரே ஒரு இறங்கு துறை. அதில் தான் குளிப்பதும் குடிப்பதற்கு தண்ணீர் எடுப்பதும். அக்கிராமப் பெண்களை எப்போதும் அங்கே காணலாம். குளிக்கச் செல்லும் போது அங்கே அவர்களைக் கண்டால் தூரத்திலேயே திரும்பிவிடுவேன். இப்படி இரண்டு மூன்று நாட்கள் திரும்பி வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் மாத்தயா குளிக்காமல் திரும்பி வருகிறீர்கள்?'' என்று கேட்டாள் எங்கள் வீட்டுப் பெண் சுது மெனிக்கா. அவளது பெயர் மெனிக்கா. அவள் வெள்ளை நிறமாக இருப்பதால் நான் சுது மெனிக்கா என்று அழைப்பது வழக்கம்.

''பெண்கள் கூட்டமக இருக்கிறது! எப்படிக் குளிப்பது?'' என்று கேட்டேன்.

''கொல்'' எனச் சிரித்தாள் அவள்,

''நானும் வருகிறேன் வாங்க'' என்று கூறிவிட்டு என்னுடன் புறப்பட்டு விட்டாள். வயது வந்த பெண்தான் என்றாலும் அப்படிச் சொல்ல முடியாது.

அவர்களுடன் குளிக்க எனக்குத் தான் வெட்கமாக இருந்ததே தவிர அவர்களுக்கு இந்த அச்சம்.. மடம்.. நாணம்.. பயிர்ப்பு.. என்றெல்லாம் சொல்கிறார்களே அதொன்றும் இல்லை.

இவைகள் எல்லாம் வந்த புதிதில்தான். ஒரு வருடம் ஓடியே மறைந்தது. நானும் இதற்கெல்லாம் பழக்கப் பட்டு விட்டேன். இப்போது எனக்கு எல்லாம் சாதரணமாகிவிட்டது. நானும் எல்லோருடனும் கதைக்கப் பழகக் கற்றுக் கொண்டேன்.

என்னையறியாமல் பால் உணர்ச்சி என்ற கொடியின் விதை என்னுள் ஊன்றப் பட்டு அது வளர்ந்து கொடியாக என்னுடல் எங்கும் பரந்து நின்றது. இப்போது தான் அதை உணர்ந்தேன் இதுவரை அது என்னுள் நீறு பூத்த நெருப்பாக இருந்தது. இப்போது சூழ்நிலை என்ற காற்று வீசி அதைத் தணலாக்கிவிட்டது. இப்போது என்னுள்ளத்தில் தணல் கனன்று கொண்டிருந்தது. என்னால் முடிந்தவரை அதை அடக்கிக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் சூழ்நிலைகள் விடுவதாக இல்லை.

பல மாதங்கள் கடந்திருக்கும். ஒரு நாள் மதிய நேரம் அருவியோரமாக சிறிது தள்ளி நடந்து வந்து கொண்டிருந்தேன். அருவியின் அருகே ஒரு பெண் நின்று கொண்டிருந்த நிலை... என் கால்கள் தடைப்பட்டு நின்றது. அவள் நிர்வாண அழகையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் என்னைக் காணவில்லை. இப்பார்வை விருந்து என் உணர்ச்சித் தீ-க்கு எண்ணெய் வார்ப்பது போன்றிருந்தது. அவள் ஆடை மாற்றிச் செல்லும் வரை பார்த்திருந்தேன். அவள் சென்று விட்டாள் ஆனால் என்னால் அசைய முடியவில்லை. உடம்பு என்னவோ போல் இருந்தது. சிறிது நேரத்தின் பின் வீடு வந்து சேர்ந்தேன்.

மதியம் சாப்பிடக் கூட மனம் வரவில்லை. படுத்துக் கொண்டிருந்தேன். வீட்டுக்காரியும் பிள்ளைகளும் விறகு வெட்டப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

''மாத்தயா எங்காவது செல்வதென்றால் கதவைச் சும்மா சாத்திவிட்டுப் போங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றனர்.

எங்கும் செல்ல முடியாமல் நான் தவித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் மழையும் ஆரம்பித்து விட்டது. உடம்பில் உள்ளே தணல் வெளியே மழையின் குளிர். இரண்டுக்கும் இடையில் நடுங்கிக் கொண்டிருந்தேன். சுது மெனிக்கா பாடசாலையில் இருந்து மழையில் நனைந்த வாறு ஓடி வந்து சேர்ந்தாள்.

அவள் வந்த பிறகு மிகவும் சொற்ப நேரமே என்னால் தனித்திருக்க முடிந்தது. எனது அறையை விட்டு வெளியேறி அவளுடைய அறை வாசலில். நின்றேன். ஆடை மாற்றிக் கொண்டிருந்தாள். பாடசாலை உடுப்புகளைக் களைந்துவிட்டு உள் உடுப்புக்களுடன் நின்றிருந்தாள். என்னைக் கண்டதும் அப்படியே அதிர்ச்சியில் சிலையாகி விட்டாள். அவள் கத்தவோ வேறொரு ஆடையை எடுத்து மறைக்கவோ முயற்சிக்க வில்லை. என் கண்களில் நிரம்பி வழிந்த உணர்ச்சித் தீயை அவள் பார்த்திருக்க வேண்டும். நான் அவளை நோக்கி மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தேன். அவளை அணைத்தேன்...

''மா..த்..த..யா..'' என்றாள்.

என் அணைப்பில் என்ன நடந்ததோ தெரியவில்லை. அவளும் என்னை இறுக அணைத்துக் கொண்டாள். சிறிது நேரத்தில் மயங்கியும் விட்டாள். பக்கத்தில் கிடந்த கட்டிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடத்தினேன்...

எல்லாம் முடிந்து வெளியேறினேன். அப்போதும் என் உடல் சூடு தணியவில்லலை. 'பாவம் அவள் மதியம் சாப்பிட வில்லை' என்று எண்ணிக் கொண்டு மீண்டும் வந்து பார்த்தேன். அவள் அப்படியே படுத்துக் கொண்டிருந்தாள். என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை...

புகையிரதம் எத்தனையோ நிலையங்களில் நின்று நின்று சென்று கொண்டிருந்தது. நெடுந்தொலைப் பயணம் போல் வெகு சாதாரணமாகச் சென்று கொண்டிருந்தது. எழுந்து உட்கார்ந்தேன். எதிரே இருந்த ஆசனத்தில். ஒரு சோடி இருந்தது. தோட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றாலும் அவள் அழகு...? வெற்றிலை மென்று கொண்டிருந்தாள். அவள் இதழ்களைப் பார்க்கும் போது எனக்கு என்னவோ போலிருந்தது. அந்த மயக்கத்துடன் இருந்த நான் அவளைப் பார்த்தேன், அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனோ தூங்கி வழிந்து கொண்டிருந்தான்.

சுது மெனிக்கா மீண்டும் பழையபடி பழக சில நாட்கள் எடுத்தது. என்றாலும் முன்னைவிட அன்பாகவே பழகினாள்.

இப்போது தான் நான் மற்றவர்களைப் பற்றி பிழை கூறுவது தவறானது, சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் மனிதனைத் தவறு செய்யத் தூண்டுகின்றன என்று உணர்ந்து கொண்டேன். அதுவும் இளமையில் இத்தவறு செய்பவர்களை எந்த வகையிலும் குறை கூறமுடியாது. ஆனாலும் தடுக்க விரும்பினால் வெள்ளம் வருமுன் தடுக்க வேண்டும். இளமையை என்றும் கட்டுப் படுத்திக் கொண்டிருக்க முடியாது. இது மிகவும் கஷ்டமானது மட்டுமல்ல எல்லோராலும் அதில் வெற்றியும் பெற முடியாததும் கூட. இயற்கையின் வழியில் அனுபவித்துத் தான் அதை வெல்ல வேண்டும். நீறு பூத்த நெருப்புக் கூட காற்று வந் தால் சுவாலை விட்டு எரிவது போல் எவ்வளவு தான் கட்டுப் படுத்திக் கொண்டாலும், சந்தர்ப்பம் வரும் போது அப்படிக் கட்டுப்படுத்திக் கொண்டவர்கள் மிருகமாகவே மாறிவிடுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். பாலுணர்ச்சியை இயற்கையின் வழியிலே விட்டு வெல்வது தான் உண்மையான நிலையான வெற்றியாகும். இதனால்தான் அன்றைய நம் ஞானிகள் இல்லறத்தின் பின் துறவறம் பூண்டார்களோ என்னவோ?

இரண்டு வருடங்கள் முடிவடைய இருந்தன. எனக்கு மாறுதல் கிடைத்திருந்தது. இதைப் பார்க்கும் போது இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது.. சுது மெனிக்கேவிடம் கூறினேன்.

அவள் சிரித்துக் கொண்டே ''எனக்கென்ன நீங்கள் போனால்...?'' என்று கேட்டாள். ''உண்மையாகத் தான் நான் உன்னை விட்டுப் பிரியப் போகிறேன்'' என்றேன்.

''நல்லது போய் வாருங்கள்'' என்று வணங்கினாள். அவள் கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் வழிந்தது. அது என்னை மன்னித்து விடுவது போன்றிருந்தது நான் விடுவிடு வென்று வெளியேறினேன்.

நீறு பூத்த நெருப்பாக வந்த நான் எரியும் சுவாலையாக வெளியேறிக் கொண்டிருந்தேன். என்ன மனிதர்கள் எப்படி எல்லாம் வாழ்கிறார்கள்?

கொழும்பு புகையிரத நிலையத்தில் அடுத்த நாள் காலையில் இறங்கியிருந்தேன். அடுத்த புகையிரதம் வரும் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

நீறு நீங்கிய நெருப்பாகி விட்டேன் இதனால் ஏதும் கேடு விளைய முன் அம்மாவின் விருப்பப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற திட்டம் என்னுள் உருவாகிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்

மாத சஞ்சிகை

## 02 மன்னிக்க வேண்டுகிறேன்!

அன்புள்ள குமாருக்கு,

அத்தனை கடிதமும் கிடைத்தது. மௌனமாக இருந்தேன். காரணம், என் மௌனம் என் மீது கோபமேற்படுத்தி என்னை மறந்து விட வைக்கும் என்று.. அதையும் மீறி தாங்கள் எழுதிய, கடைசியாக எனக்குக் கிடைத்த கடிதம் கண்டு என் உள்ளம் பட்ட பாட்டை எப்படி என்னால் எழுதமுடியும்?

நான் ஒரு பெண். அதுவும் இன்னொருவரின் உடமை; இன்னொருவரின் உடமையாகிவிட்ட இந்தப் பாவிக்காக எதற்கும் சித்தமாகி விட்டீர்களே! இந்தக் கடிதத்தை கண்ட பின்னராவது நீங்கள் மாறவேண்டும்.

அத்தனை காலமும் என் உள்ளத்தை மறைத்துப் பழகினேன். உண்மைதான். இனியும் மறைக்க முடியாமல் இதனை எழுதுகிறேன்.

நான், பல்கலைக்கழகத்தில் புகமுன்னரே எனக்கொரு காதலன் இருந்தார். ஆனாலும் அதிலும் கட்டுப்பாடு. காதலை அறிந்த எனது காதலனின் பெற்றோர் தடை விதித்தனர். பலரின் முயற்சியால் ஒரு முடிவு ஏற்பட்டது. நான் பல்கலைக்கழகம் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்று வருமட்டும் நாங்கள் சந்திக்கக் கூடாது; கதைக்கக் கூடாது. ஏன்? கடிதமே எழுதக்கூடாது. வெளிவந்த பின்தான் திருமணம் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. எனது காதல் நிறைவேற வேண்டி அதற்குக் கட்டுப்பட்டேன்.

ஆமாம்! அவர்கள் நினைத்திருக்க வேண்டும். இப்படியான கட்டுப்பாட்டால் பல்கலைக்கழகத்தில் ஆண்களுடன் பழகுவதால் தங்கள் மகளை மறந்து விடலாம் என்று.

அந்த நிலையில் தான் தங்களைக் கண்டேன். தங்கள் சலனமற்ற பார்வையைக் கண்டேன். எத்தனையோ ஏக்கப் பார்வைகளுக்கு மத்தியில் தங்கள் பார்வை எனக்கு நிம்மதியைத் தந்தது. எத்தனையோ இளைஞர்கள் என்னை தங்கள் காதலியாக்க முயற்சித்தார்கள். அப்பப்பா... அவர்களின் ஏக்கப் பார்வையும் பேச்சும் அம்பு போல மொய்த்த அத்தனை கண்களின் பார்வையையும் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இதற்கு நான் ஏற்படுத்திக் கொண்ட முடிவு.

ஆமாம் அவர்களிடம் எல்லாம் இருந்து தப்புவதற்காக உங்களைக் கருவியாகப் பாவித்துக் கொண்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்.

தங்கள் அடக்கமும் அன்பையும் கண்டு தங்களை நம்பி இதில் இறங்கினேன். ஆமாம்! அதன் பின்னர் தான் "அப்பாடா.." என்று நிம்மதியாக இருக்க முடிந்தது.

அம்பு தைத்து இறந்து கிடக்கும் மான் மீது எந்த வேடனும் மீண்டும் அம்பு எய்வதில்லையே! உங்கள் அன்பு என் மீது தைத்து விட்டதாகக் காட்டித் தப்பித்துக்கொண்டேன்.

"குமார் நீ அதிஷ்டக் காரண்டா! சசி இஸ் ஏ சுவீற் கேள்" என்று உங்களையும் சிலர் என் முன்னாலேயே பாராட்டினார்கள்.

இப்படி இருக்கும் போது தான் நீங்கள் அந்தப் படத்தை வரைந்தீர்கள். எத்தனை பொருத்தமாக நான் எண்ணியதை நீங்கள் வரைந்தீர்கள் என்று வியந்து அதைப் பெற்று பத்திரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினேன். ஆனால் அந்த அம்பு தைத்து விழுந்து கிடக்கும் மானுக்கு நீங்கள் கூறிய விளக்கம் என்னை என்னவோ செய்தது. இருந்தாலும் உண்மையை எப்படிச் சொல்வேன்?

உண்மையை நான் கூறி விட்டால்...?

நீங்கள் மனமுடைந்து, என்னை விட்டு விலகிவிடுவீர்கள். எனக்கு அரண் இல்லாது போய்விடும். அப்போது என் கதி..?

அதை நினைத்துத்தான் உண்மையை மறைத்தேன். ஆனால் முடிவில் தங்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தரப் போகின்றேன் என்பதை நான் உண்மையிலே எண்ணிப் பார்க்கவில்லை. என்னளவில்தான் நான் எண்ணினேனே தவிர உங்களைப் பற்றியல்ல...

உங்கள் மீது நான் கொண்ட அன்பை அன்பாகவே வைத்திருக்க நினைத்தேன். அதைக் காதலாகத் தாங்கள் கூறும் போதுதான் நான் கண்கலங்கி நின்றேன். அதைவிட என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. தங்கள் அன்புக்கு நான் எந்தக் கைமாறும் செய்யமுடியாமல் போய்விடுமே என்று ஏங்கினேன். அதுதான் உங்களைக் காணும் போதெல்லாம் 'கண்டோஸ்' சொக்லேற் தந்தேன். இதையெல்லாம் நீங்கள் எங்கே அறியப் போகிறீர்கள்.

உங்களோடு நெருங்கிப் பழகுவதாக மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ள விரும்பினேனே தவிர உண்மையில் நெருங்கிப் பழகாததினால் தான் அவ்வப்போது உங்கள் விருப்பத்திற்குச் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக்கழித்தேன். நான் ஒரு பெண். அதுவும் இன்னொருவரின் உடமை அதைப் பாதுகாக்கவே உங்கள் துணையை நாடினேன். அதை அடகு வைக்க விரும்பவில்லை. ஆனால் அது உங்கள் உடமையா கலாம் என்ற எண்ணத்தை நினைக்க வைத்ததுதான் நான் செய்த துரோகம். அதைச் செய்யாமல் என்னால் தங்களை துணையாக வைத்திருக்க முடியாது என்று கருதியதுதான் காரணம்.

பெரும் இக்கட்டான சூழ்நிலை இரண்டில் தங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பட்டுத் தப்பியிருக்கின்றேன். தங்கள் வேண்டுகோளை எத்தனையோ முறை தட்டிக் கழித்துக் கொண்டு வந்தேன். ஆனால் அன்று நீங்கள் கேட்ட போதும் 'முடியாது' என்று கூறினேன் ஆனால் நீங்கள் கூறிய சொற்கள் உங்கள் மீது எனக்கு அனுதாபத்தை ஏற்படுத்தியது.

''என்ன சசி! நீ இப்படியே எல்லாவற்றையும் தட்டிக் கழித்துக் கொண்டு செல்கிறாய். எனக்குத் தெரியும்.. எனக்கு வெட்கம் அதிகம் என்று.. ஆனால் எனது 'போய்' பிரண்ட்ஸ் மட்டுமல்ல இப்போது 'கேள்சும்' என்னைப் பகிடி பண்ணத் தொடங்கி விட்டார்கள்'' என்றீர்கள்.

''..குமார்...'' என்ற என்னால் எதுவும் பேசமுடியவில்லை.

''சசி எப்படியும் நாளை விடுமுறை தினத்தில் நாம் இருவரும் பூங்காவுக்குச் செல்லவேண்டும். கட்டாயம் நீ வரவேண்டும்'' என்று கூறிவிட்டு சென்றுவிட்டீர்கள்.

என்னால் இதை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. உங்களை ஏமாற்றவும் விருப்பம் இல்லாமல் இருந்தது. யோசித் ததில் மற்றத் தோழர்கள் போல் நீங்களும் நடக்காமல் இருப்பதற்கு நானே காரணம் என்று விளங்கியது. உங்களுக்கு இந்தக் காதல் நாடகத்தில் வெறுப்பு ஏற்படலாம் என்று கருதியே தங்களுடன் வந் தேன்.

ஆனால், அப்பப்பா.. அங்கு கண்ட காட்சிகள் என் கண்களைக் கூசவைத்தது. நான் கண்களைப் பொத்தினேன்.

''சசி! இது இங்கு சகஜமான காட்சிகள் நாமும் இப்படி ஒரு பக்கமாக அமருவோம்'' என்றீர்கள்.

''குமார் உண்மையான காதலுக்கு இந்த உணர்ச்சி ஓட்டம் தேவையா? நான்கு சுவர்களுக்குள் நடக்க வேண்டியதை மேடையேற்றும் இவர்கள் என்ன பிறவிகளோ?'' என்றேன்.

''சசி...'' என்று கூறிக் கொண்டு என் கையைப் பற்றியதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஏக்கப் பார்வையையும் கண்டபோது நான் பதறிப் போனேன்.

''குமார் எனக்கு வயிற்றைப் புரட்டுகிறது தயவுசெய்து சுற்றிப் பார்த்துவிட்டு போவோம் என்றேன்'' நீங்களும் அதற்கு சம்மதித்த போது மகிழ்ந்தேன். ஆனால் சுற்றியும் பார்க்க முடிந்ததா? என்ன கண்றாவிக் காட்சிகள். கண்ணை மூடிக் கொண்டல்லவா நடக்கவேண்டியிருந்தது?

எப்படியோ அன்று மறு பிறப்புப் பிறந்து திரும்பி வந்தேன். என்பதை நீங்கள் அறியவில்லை.

ஆனால் அது உங்களுக்கு திருப்தியளிக்கவில்லை, என்பதை அன்றே அறிந்தேன். ஆனால் அதற்குமேல் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. அன்றே நீங்கள் ''அப்படியானால் ஒரு படத்திற்குப் போவோம்'' என்றீர்கள்.

''எனக்கு இன்று மனம் சரியில்லை. வேறொரு நாள் செல்வோம்'' என்று தட்டிக் கழித்தேன்.

ஆனால், அதன் பிறகு நீங்கள் அடிக்கடி படத்துக்குச் செல்ல அழைத்தீர்கள். ஒரு நாள் தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டபோது உங்களுடன் வந்தேன்.

படமாளிகையினுள் அமர்ந்ததும் எனது இதயம் 'பக்பக்' என்று அடித்தது. எனது தோளுக்கு மேலால் கைபோட்டதும்,

''குமார்..'' என்று உறுக்கினேன்.. என்று நினைக்கிறேன்.

''என்ன சசி இது...? என் கைபடவே விடமாட்டாய் போல இருக்கிறதே..'' என்ற போது அந்த இருட்டிலும் உங்களைப் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது. என்ன சொல்வேன்.

''அதோ பின்னால் இருவர் இருக்கிறார்களே! அவர்கள் எங்கள் ஊர் ஆக்கள். அவர்கள் என்னைக் கண்டால் வீட்டுக்குப் போய் இல்லாததும் பொல்லாததுமாகக் கூறிவிடுவார்கள். அவர்களைக் கண்டு நான் நெருப்பின்மேல் இருக்கிறதுபோல் இருக்கிறேன்'' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் யாரும் இல்லை. அப்படி ஒரு பொய்யைச் சொல்லித் தப்பிக் கொண்டேன். ஆனால், உண்மையில் நெருப்பின் மேல் நான் இருந்ததை நீங்களும் அறிந்து இருப்பீர்கள்.

அன்று இடைவேளையின் போது 'ஐஸ்சொக்' டிரிங்ஸ் எல்லாவற்றிக்கும் நானே பணம் கொடுத்தேன். என் தெரியுமா? நீங்கள் எதிர்பார்த்து வந்தது கிடைக்காத போது தங்களை மேலும் செலவு செய்யவிடுவது நீயாயமில்லை என்றுதான்.

வெளியே வந்ததும் ''என்ன சசி பெரும் பயந்தாங் கொள்ளியைப் போல் இருக்கிறாய்? எப்படி உன்னை மாற்றி எடுக்கப் போகிறேனோ?'' என்றீர்கள்.

''குமார் நீங்கள் கவலைப் படவேண்டாம் காலம் வரும் போது அந்தப் பிரச்சினை உங்களுக்கும் இருக்காது...'' என்றேன் இப்போது அது விளங்கும் என்று எண்ணுகின்றேன்.

இந்த இரண்டு கட்டங்களும் என் வாழ்கையில் என்றும் மறக்க முடியாததுதான். இதை எனது காதலரிடமும் கூறினேன். அவரும் உங்கள் மீது அனுதாபம் கொண்டு கதைத்தார். அவரின் அனுமதியுடன் தான் இதை எழுதுகின்றேன்.

என்றாலும் ஒரு உண்மையைச் சொல்லத்தான் வேண்டும் மற்றவர்களுக்காக அடிக்கடி தங்களைச் சந்தித்தேன். ஆனால் சில காலத்தில் நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உங்களைச் சந்திக்காமல் இருக்க முடியவில்லை. பழக்கம் பெரிது என்பார்களே! அதற்கு நானும் அடிமையானேன். அதைவிட அங்கு இருக்கும் வரை மகிழ்ச்சியை, நம்பிக்கையைத் தளர விடக்கூடாது என்று கருதினேன். அதைவிட வேறொன்று மில்லை...

என்மீது பாயவிருந்த அம்புகளிலிருந்து தப்ப நான் செய்த ஏற்பாடு, தங்கள் மீது வேலாகப் பாய்ந்து வேதனையைத் தருகின்றது, என்பதை அறிந்து வருந்துகின்றேன். இப்போதாவது உண்மையைச் சொல்லிவிட்டேன் என்று அமைதியடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியாவது தாங்கள் நிம்மதியாகத் தங்கள் வாழ்வை அமைத்து விடுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

உங்கள் அன்புக்கு பாத்திரமானவள் என்ற முறையில் கேட்டுக்கொள்கின்றேன். என்னை மன்னித்து விடுங்கள். எனக்குத் தெரியும் நிச்சயம் நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என்று..

இப்படிக்கு

தங்களன்புள்ள

சசிரேகா

பி.கு. விரைவில் எமது திருமண அழைப்பிதழ் அனுப்பி வைப்பேன். கட்டாயம் வரவேண்டும். -சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
பெப்ரவரி 1968

## 03 வரட்டும் அவர்...

மதியவன் மறைந்து கொண்டிருந்தான். அந்த மாலை வேளையில் இயற்கை அன்னை உலகை மஞ்சள் வெயிலால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். எங்கும் பறவைகள் கீச்சிடும் சப்தம். அந்தச் சப்தத்தில் காலையில் இருந்த ஓங்காரம் இல்லை. இனிமையும் அமைதியும் நிறைந்திருந்தது. வயிறார உண்டபின் பசி நீங்கி, தங்கள் இல்லம் நோக்கிப் பறக்கும் பறவைகளின் ஒலி தான் அது.

பெரிய வீதியால் பட்டியை நோக்கிச் செல்லும் பசுக் கூட்டம் கன்றுகளை நினைத்து எழுப்பும் ஒலியும் அவற்றிடையே மேய்ப்பனின் கூச்சலும் கேட்டது. சித்ராவின் ஒழுங்கையால் செல்லும் ஆடுகளின் கிண்கிணி ஓசை, அவற்றின் கனைப்பு இவையெல்லாம் போர் முடிந்து வெற்றிக் களிப்புடன் ஊர் திரும்பும் சேனைகளின் கலகலப்புப் போன்றிருந்தது. ''பாண்டி மாநகர்'' (பாண்டிருப்பு) இவ்வித மகிழ்ச்சிச் சோபையில் ஆழ்ந்திருந்தது என்று தான் கூற வேண்டும்.

சித்ராவின் காதுகள் இவற்றை எல்லாம் மறந்து இருந்தன. சித்ரா வீட்டு வாசலில் கதவு நிலையோடு சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் முற்றத்தில் இருந்த கிணற்று வேலியில் குத்திட்டு நின்றன. அதில் அவள் கண்ட காட்சி அவளை இந்த உலகத்தில் இருந்தே கொண்டு சென்று விட்டது. வேலியில் ஒரு நிழற்படம் அவளுக்குக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. வீட்டுக்குப் பின்புறம் பக்கத்தில் இருக்கும் ஒரு தென்னை மர வட்டில் காகக் கூடொன்று இருந்தது. அவற்றில் வசிக்கும் ஒரு ஜோடி ஒரு ஓலை மட்டையில் உட்கார்ந்து கொண்டு, இன்பக் கதைகள் பேசி சேட்டைகள் செய்து கொண்டிருந்தன. மஞ்சள் வெயிலால் அவற்றின் நிழல் வேலியின் மேல் விழுந்து கொண்டிருந்தது. அதையே சித்ரா பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கன்னத்தில் விழுந்து தெறித்தது. அதை ஆரம்ப மணியாகக் கொண்டு உள் மனத்திரை மெல்ல விரிந்தது. அதில் எழுத்துக்கள் இல்லாமலே படம் ஓட ஆரம்பித்தது.

*****

அன்றொரு நாள் ஊரார் கதைப்பதாக பக்கத்து வீட்டுக்காரர் கூறியதைக் கேட்டதும் ''அண்ணன் வரட்டும் சொல்ல வேண்டும்'' என்று காத்திருந்தாள் சித்ரா.

சந்திரனும் சேகரும் நெருங்கிய நண்பர்கள். ஒன்றாகப் படித்தவர்கள் படிப்பை முடித்து விட்டு ஒன்றாகவே திரிந் தார்கள். தினமும் பேப்பர்களில் வரும் வேலை விளம்பரங்கள் 'கசட்' விளம்பரங்கள்- இவற்றைப் பார்ப்பது, அவற்றிற்கு விண்ணப்பிப்பது, காலையில் வாசிக சாலைக்கும் மாலையில் கடற்கரைக்கும் செல்வது, இதுதான் அவர்களுடைய வழக்கமான வேலைகள். சந்திரன் தான் சித்ராவின் அண்ணன்.

அன்றும் வழக்கம் போல் கடற்கரைக்குச் செல்ல வந்தார்கள். சந்திரன் தன் வீட்டில் ஏதோ புத்தகம் ஒன்றை எடுக்க வந்தான். சேகர் வெளியே நின்று கொண்டிருந்தான்.

அண்ணனைக் கண்டதும் பொறுமை இழந்த சித்ரா, ''அண்ணா நீ அவரோட சுற்றித் திரிவது, அவரை மாப்பிள்ளை ஆக்கத் தானாம் என்று, ஊரார்கள் கதைக்கிறார்களாம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டு அக்கா சொன்னா'' என்று கூறினாள்.

''அடடே... அப்படியா...? சேகரை வரச் சொல்லு பிள்ள...'' என்றான் சந்திரன். அவளே வந்து வெளியில் நின்றிருந்த சேகரை அண்ணா வரச் சொன்னதாக அழைத்தாள்.

முற்றத்தில் கதிரைகள் போடப்பட்டன. இருவரும் அமர்ந்து கொண்டனர். இதைக் கேட்டதும் சேகருக்கும் சிரிப்புத்தான் வந்தது.

''மீசை முளைக்காத பிள்ளைகளுக் கெல்லாம் கல்யாணம் தான் கட்டி வைக்கப் பார்க்குது இந்த ஊர்ச்சனங்கள். இதுகளுக்கு வேற வேலையே இல்லைப் போலிருக்கு'' என்றார் சித்ராவின் தாயார்.

அன்று கடற்கரைக்குச் செல்லாமல் அங்கேயே இருந்து கதைத்து விட்டுச் சென்று விட்டார்கள். மீசை முளைத்திருந் தாலும் வயது குறைவு தான். ஆனால் சித்ரா 'பெரியவளாகி' இருந்தாளே. அதனால் தான் ஊர் இப்படிப் பேசிற்று.

நாள்கள் நகர்ந்தன. இப்போது மாலை வேளைகளில் சில நாட்களில் கடற்கரைக்குச் செல்லாமல் வீட்டிலே இருந்து கதைப்பார்கள். அப்போது சித்ரா தமிழிலும் கணக்கிலும் சந்தேகங்களை சந்திரனிடம் கேட்பாள்.

''இதிலெல்லாம் புலி அவர்தான் அவரிடமே கேள்'' என்று விட்டு விடுவான் சந்திரன்.

அந்த வருடம் ஜனவரியில் சந்திரனுக்கு திருகோணமலையில் ஒரு வேலை கிடைத்தது. அவன் வேலைக்குச் செல்லும் போது, ''நான் இல்லாவிட்டாலும் பரவாயில்லை அடிக்கடி வந்து தங்கச்சிக்குக் கொஞ்சம் பாடம் சொல்லிக் கொடு. அவள் இந்த வருடம் சோதனை எடுக்க இருக்கிறாள்'' என்று அவளுக்கு முன்னே வைத்துக் கூறினான் சந்திரன்.

''நீ இல்லாமல் நான் எங்கே வரப் போகிறேன்? உன்னோடே வரும் போதே இப்படிக் கதைச்சால், தனியாக வந்தால் நல்லாத் தான் இருக்கும்'' என்றான் சேகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பேடா... பைத்தியம் மாதிரிக் கதைக்காதே ஊரைப்பற்றி யார் கவலைப்பட்டாங்க. அது என்ன கதைச்சாலும் நமக்கென்ன?'' என்றான் சந்திரன்.

சேகருக்கும் தனியே இருந்து பழக்கமில்லை. மாலை வேளைகளில் பொழுது போவதே கஷ்டமாக இருந்தது. அப்படிக் கூறினாலும் அடிக்கடி என்ன தினமும் அங்கு வந்து சென்றான்.

*****

அவன் ஏதாவது பிழைகளைச் சுட்டிக் காட்டும் போது, சித்ரா நாக்கை முன்னால் நீட்டிக் கடிப்பாள். ஒரு நாள் அவன் இதைக் கண்டித்தான்.

''இதென்ன இது உடும்பு மாதிரி நாக்கை நீட்டுறது கூடாத பழக்கம்'' என்றான்.

அன்றோடு விட்டு விட்டாள். சில நாட்களின் பின் கேட்டான் ''இப்போதும் அப்படிச் செய்யிறது தானா?'' என்று.

''இல்லை'' என்று அவள் தலையை ஆட்ட அவன் மகிழ்ந்தான்.

இன்னுமொரு நாள், அவள் நகம் வளர்த்துக் கூராக விட்டிருப்பதைப் பார்த்ததும், ''ஏன் பேய் மாதிரி நகம் எல்லாம் வளர்ந்திருக்கிறது? வெட்டத் தெரியாதா? வீட்டில் வேலை ஒன்றும் செய்யிறது இல்லப் போல.. ஏன் அம்மா தானா எல்லாம்? சும்மா இருக்கிற நேரத்தில கூடமாட உதவி செய்யலாமே? எங்க பிளேட் இதை வெட்ட என்று சொல்லிக் கொண்டே எதேச்சையாக அவள் கையைப் பிடித்தான். அவள் சிரித்தபடியே நாணித் தலை குனிந்தாள்.

''நான் நாளைக்கு வெட்டுறன்'' என்றதும் விட்டு விட்டான். அவன் சொல்லில் ஏதோ மந்திர சக்தி இருக்கிறது போலிருந்தது அவளுக்கு. அவன் எதைச் சொன்னாலும் உடனே செய்து விடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கலக் குருவி இரண்டு வீட்டினுள் கூடு கட்டி இருந்தது. மாலை நேரம் வீடு வந்தவை இவன் முன்னே இருப்பதைப் பார்த்ததும் உள்ளே செல்ல முடியாமல் அங்குமிங்கும் பறந்தபடி சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

மேசையின் மூலையில் ஆளுக்கு ஒரு பக்கமாக உட்கார்ந்து இருப்பார்கள். கால்களை நீட்டும் போது எதேச்சையாக படுவதுண்டு. பட்டதும் இருவரும் உடனே இழுத்துக் கொள்வார்கள். பழக்கம் தொடர்ந்தது. கால்கள் பின்னிக் கொண்டிருக்கும் நிலைக்கு வந்தன. அதே போல் அவர்கள் உள்ளமும் அவர்களை அறியாமலே பின்னிக் கொண்டன.

ஒரு நாள் சேகர் வந்து போது அவள் வீட்டில் இல்லை. அவன் கதிரையில் அமர்ந்து ஏதோ புத்தகத்தைப் பிரட்டிக் கொண்டிருந்தான். பக்கத்து வீட்டுக்குச் சென்றவள் மெல்லவே வந்து பின்புறமாக நின்று அவன் கண்களைப் பொத்தினாள். அவன் சிரித்துக் கொண்டே அவள் கைகளைப் பற்றினான்.

''யாரென்று நினைத்தீங்க...?'' என்றாள் சித்ரா.

''....''

''ஏன் நீங்க வரும் போது நான் இல்லாததால் கோபமா?'' என்றாள் மீண்டும்.

அவன் கதிரையில் சாய்ந்து கொண்டு அவனது நெஞ்சுக்கு மேலால் அவள் கரங்களைத் தாழ்த்தினாள். அவன் முகத்துக்குப் பக்கமாக அவள் முகமும் வந்தது. இருவரும் பார்த்துச் சிரித்தனர். அவர்கள் பேசவில்லை. கண்கள் பேசிற்று.

இன்னுமொரு நாள் பாடம் ஆரம்பமாகுமுன் ''எனக்கு இது வேண்டும்'' என்றான் இதழ்களைக் காட்டி.

அவள் தலையை ஆட்டினாள். முகத்தில் இனந் தெரியாத ஒரு பூரிப்பு. அதைப் பெறப்போகும் போது அவளுடைய தாய் வந்து விட்டார்.

''என்ன பிள்ள இது ஒரே சிரிப்பும் கதையுமாகத் தான் இருக்குது படிப்பைக் காணல்ல... நானும் பார்த்துத் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறன்...'' என்றார்.

பாடம் முடிந்து அவன் திரும்பிய போது அவளும் கூடவே ஒழுங்கை வரை வந்தாள். இருட்டாக இருந்தது. ஒழுங்கையில் இருவரும் நின்றிருந்தனர். இருவர் கண்களும் கலங்கியது. அவளை அணைத்து மாலையில் கேட்டதைப் பெற்றுக் கொண்டான்.

''உங்கட அம்மாவிடம் விசயத்தைச் சொல்லு இல்லாவிட்டால் பின்னர் பெரும் பூகம்பமே வெடிக்கும்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

சித்ராவுக்கு அன்று இரவு சாப்பிடக் கூட மனம் வரவில்லை. 'அவர் இருக்கும் போதே அம்மா இப்படிச் சொல்லிப் போட்டாவே' என்று எண்ணவே அவள் கண்கள் கலங்கின.

*****

இப்போதும் அவள் கண்கள் கலங்கி கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. மாலை நேர மஞ்சள் வெயில் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டிருந்தது. காகங்களையும் காணவில்லை. வெளியில் ஒளி குறைய அவள் மனத்திரை பிரகாசித்தது. வெளியே காட்சிகள் மறைய உள்ளே விளக்கமாகத் தெரிந்தன.

கண்கள் கலங்கிய படியே தாயிடம் கூறினாள்.

''ஊர் கதைச்சது உண்மையாகப் போயிடும் போல இருக்கே. வீட்டுக்கு வந்து போய் இருந்தவனை மாப்பிள்ளையாக்கிப் போட்டம் என்று எங்களை ஊர் தூற்றப் போகுதே!'' என்றாள் தாய்.

''ஊர் அப்படிக் கதைச்சதால தானம்மா நான் இவரைப் பற்றி எண்ணின நான். இல்லாவிட்டால் இவரைப் பற்றி நினைச்சதும் இல்லை''

''கொண்ணன் அறிஞ்சால் உன்னைக் கொண்டு போடுவான்''

''அண்ணன் ஒண்டும் சொல்ல மாட்டார். எனக்குத் தெரியும். அண்ணனுக்கு அவரைப் பற்றித் தெரியும் தானே? அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர் என்று தானே கூடப் பழகித் திரிகிறார்''

''நீ நல்ல துணிஞ்ச கொட்டன். எனக்குத் தெரியாது கொண்ணனிட்ட சொல்லித் தப்பினாச் சரிதான்'' என்றாள் தாய்.

இதன் பிறகு இருவரும் சந்தோசமாகப் பழகினார்கள். இதைக் கேட்ட சேகரின் மலர்ந்த முகம், இப்போதும் அவள் கண்முன்னே தோன்றுகிறது.

இன்னுமொரு நாள் இரவாகிய போது வீட்டுக்குள் ஒரு லாம்பை ஏற்றிவிட்டு, மண்டபத்துக்கு ஒரு லாம்பைக் கொண்டு வந்தாள்.

''ஏன் லாம்பு நாங்கள் இரண்டு பேரும் தனியே இருக்கிறம் என்று மற்றவர்களுக்குக் காட்டவா?'' என்ற கூறிக் கொண்டே லாம்பை ஊதி அணைத்து விட்டான்.

சிறிது நேரத்தில் கடைக்குச் சென்றிருந்த அவளுடைய தாய் வரும் போதே ''என்ன பிள்ள மண்டபத்துக்க லாம்பைக் காணல்ல?'' என்று கேட்டா.

இருவரும் வேறாகி அமர்ந்து கொண்டனர்.

''லாம்புக்க எண்ணல்லம்மா... நீங்க வருமட்டும் தான் பார்த்துக் கொண்டு இருக்கிறன். நீங்க போனா போன இடம் தானா?'' என்று சமாளித்து விட்டு லாம்பை ஏற்றினாள்.

மாதங்கள் பல நகர்ந்தன...

சேகர் சென்று வந்திருந்த ஒரு நேர்முகப் பரீட்சையின் முடிவு வந்திருந்தது. பயிற்சிக்கு அழைத்திருந்தார்கள். சித்ராவிடம் விடை பெற்றான். அவள் அழுதாள்.

''என்ன சித்ரா இது? சிறு குழந்தை போல. உன்னை விட்டே பிரிந்து விடுவத போல அழுகிறாய்... அடிக்கடி வருவன், கடிதமும் போடலாம் தானே... ஏன் கலங்குகிறாய்?'' என்றான்.

அன்று அழுதது போதாது என்று இன்றும் அழுகிறாள். இப்போது சேகர் சென்று ஆறு மாதமாகி விட்டது. அவளுடைய அண்ணனும் சம்மதம் தந்து விட்டான். அவன் மட்டும்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாதம் மட்டும் கடிதம் போட்டான். பின்னர் மறந்து விட்டான். ஊருக்கும் வருவதும் இல்லை. அவர் கதைத்ததை, நடந்து கொண்ட விதங்களை இதற்குள் மறந்து விட்டாரா? என்று அடிக்கடி நினைப்பாள்.

அவன் நினைவு தந்த வேதனையால், அவளால் படிக்கவும் முடியவில்லை. அடிக்கடி பித்துப் பிடித்தவள் போல் இருந்து, சிந்திப்பதும் அழுவதும் அவளுக்கு வழக்கமாகி விட்டது. சேகர் இப்படி நடந்து கொள்வதை அவளால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஆனால் அழ மட்டும் முடிகிறது.

''என்ன பிள்ள சொல்லச் சொல்லக் கேட்கிறாய் இல்ல. எப்பவும் இப்படி இருந்தா இதற்கு ஒரு முடிவு இல்லையா? வீட்டுக்குள் விளக்குக் கூட வைக்காமல் இருக்கிறாயே?'' என்று கேட்டபடி வந்தா வெளியே சென்று வந்த தாய்.

கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள் சித்ரா.

'இந்தா தம்பி கடிதம் போட்டிருக்கு... நீ காலையில அக்கா வீட்டுக்கு போய் இருந்த போது வந்தது'' என்று கூறிய படி கொடுத்தார் தாயார்.

அவள் கண்கள் ஒளியில்லாமல் இருந்து ஒளியைப் பெற்றது போல் இருந்தது. இதயம் படபடத்தது. ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று.

''இது அவர் போட்ட கடிதமம்மா'' என்று கூறிவிட்டுப் பிரித்தாள்.

*அன்பின் சித்ரா,*

*இத்தனை நாளும் கடிதம் போடாததற்கு முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். உண்மையான காரணத்தை அறிந்தால் என்னை நீ மன்னிப்பாய் என்று நம்புகிறேன். இத்தனை நாளும் உனக்கு வேதனை தந்து வருத்தி விட்டேன். அது தான் என் கவலை. எனக்கு மட்டும் அந்த வேதனை இல்லாமல் இல்லை. கட்டுப் படுத்திக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். காரணம் பயிற்சி வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும் என்று. இப்போது வந்து விட்டேன். பயிற்சி முடிந்து விட்டது. நாளை லீவில் அங்கு வருகிறேன். எல்லாம் நேரில் கதைக்கலாம். என்னால் எழுத முடியவில்லை. அவ்வளவு இருக்கிறது கதைக்க.

அன்பு முத்தங்களிட்டு முடிக்கிறேன்.

இப்படிக்கு

உன் அத்தான்.

''வரட்டும் அவர்...'' என்று எண்ணிக் கொண்டாள். வேதனை தீருமட்டும் அவர் நெஞ்சில் சாய்ந்து கொண்டு, அவர் அணைப்பில் இருந்து கொண்டு அழவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. ஆனால் இப்போது வழிந்தது ஆனந்தக் கண்ணீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
செப்டம்பர் 1966

## 04 இனியும் வாழ்வதா..?

''கல்முனை சவக்காலையில் யாரோ ஒருவன் தூக்கிலிட்டு இறந்து விட்டான்'' என்ற செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. பிணம் இன்னும் தொங்கிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியைக் கேட்டவுடன் கமெராவைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்.

கூட்டத்தை முண்டியடித்துக் கொண்டு முன்னேறினேன். வந்த வேகத்தில் ஒரு படம் எடுத்தேன். என்னையறியாமல் என் கண்கள் கலங்கின. எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. யாரோ எவனோ செத்துத் தூங்குகிறான் அவனைப் படம் பிடிப்போம், புதினமும் பார்ப்போம் என்று ஓடி வந்த நான் கலங்கி நின்றேன்.

அவன் யாருமல்ல, என் நெருங்கிய நண்பன் குமார்தான். நேற்று மாலை அவனைக் கடற் கரையில் சந்தித்தேன். இவ்வளவு விரைவாக அவன் சொன்னதைச் செயலாற்றுவான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

''என்ன குமார் நீ எப்போதும் இப்படிச் சிறு குழந்தை போல் அழுது கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் என்னாவது? வாழ வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் வயது, வரும் துன்பங்களை எல்லாம் எதிர்த்து முன்னேற வேண்டாமா?'' என்று நேற்றுத் தான் கேட்டேன்.

சோகம் கலந்த சிரிப்போடு என்னைப் பார்த்தான் குமார். இளம் வயதிலே காதலித்து, அவளுடைய தாய் தந்தையரின் எதிர்ப்புக்களிடையே திருமணமும் செய்தான். அவள் ஒரு குழந்தைக்குத் தாயாக இருந்த அன்றுதான் காலன் அவளை அவனிடமிருந்து பிரித்து எடுத்து விட்டான். அன்று முதல் இவன் ஒரு பைத்தியமாக-ஒரு நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறான். ஊண், உறக்கம், உடை பற்றிக் கவலைப் படாமல் வீட்டுக்கும் ஒழுங்காகச் செல்லாமல் வீதிகளில் அலைந்து திரிந்தான்.

''சந்திரா, என் நிலைமை உனக்கு எங்கே புரியப் போகிறது? புண் இருப்பவனுக்குத் தானே வருத்தம் தெரியும்?''

''எனக்கு முற்றாகத் தெரியாவிட்டாலும் ஓரளவு புரிந்திருக்கிறேன் குமார். நீ அன்று அடைந்த அதிர்ச்சியும் மயக்கமும் என்னையும் அதிர்ச்சியடைய வைத்தது'' என்றேன்.

*****

அன்ற மாலை ஆறு மணியிருக்கும், குமார் அவசர அவசரமாக வீதியில் வந்தான். ''என்ன குமார்?'' என்றேன்.

'விஜி தாயாகப் போகிறாள், அந்த வேதனையில் அவஸ்தைப் படுகிறாள், நீ சும்மா தானே நிற்கிறாய்? வா போய் வருவோம்'' என்று என்னையும் இழுத்துக் கொண்டு சென்றான். தானும் ஒரு குழந்தைக்குத் தகப்பன் ஆகப் போகிறான் என்றோ என்னவோ அவன் முகத்திலும் மகிழ்ச்சியின் பூரிப்பைக் கண்டேன்.

மருத்துவமனையை அடைந்ததும் ஒரு பெண் அழும் குரல்தான் கேட்டது. விஜிக்குத் தான் சிகிச்சை நடைபெறுகிறது என்பதை அறிந்ததும் குமாரும் அழத் தொடங்கி விட்டான்.

''சந்திரா, அவள் இதற்குத் தான் அடிக்கடி பயந்து கொண்டிருந்தாள். இந்த வேளையிலும் நானும் அவளருகில் இருக்க வேண்டும் என்பாள். இவ்வளவு வேதனை என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பயந்தது சரிதான்'' என்று கூறிவிட்டுச் சிறு குழந்தை போல் அவனும் அழுதான்.

''குமார் நீ அழுவதைப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்யப் போகிறார்கள். வா சிறிது நேரம் வெளியே சென்று வருவோம்'' என்றேன்.

அப்போது, ''அத்தான்! அத்தான்!'' என்ற குரல் மெல்லவே அடங்கிவிட்டது.

இவனோ சுவரில் தலையை அடித்துக் கொண்டு ''விஜி'' என்று அலறிக் கொண்டிருந்தான். இவனைப் பிடித்து வைத்துக் கொள்வதற்கு எனக்குப் பெரும் பாடாகப் போய்விட்டது.

சிறிது நேரத்தில் வெளியே வந்தார் டாக்டர். 'விஜி' என்று சொல்லிக் கொண்டே உள்ளே செல்ல முயன்ற குமாரைப் பிடித்து நிறுத்தினார். ''ஆண்கள் உள்ளே போகக் கூடாது'' என்றார்.

''இல்லை டாக்டர் நான் அவளை உடனடியாகப் பார்க்க வேண்டும்' என்றான்.

நான், ''சுகப் பிரவசமா டாக்டர்?'' என்றேன்.

''எனக்குக் குழந்தை வேண்டாம் டாக்டர் அவள்தான் வேண்டும்'' என்று கத்தினான் குமார்.

''என்னைப் பார்க்காமல் அவளுக்கு நித்திரை வராது டாக்டர்'' என்றவன் டாக்டரையும் மீறி உள்ளே நுழைந்தான். டாக்டர் கண்கலங்க நடந்தார். உள்ளே சென்றவன்,

''விஜி...'' என்று ஓலமிட்டான். அவ்வளவுதான் மயக்க மடைந்து விழுந்து விட்டான். தூக்கி வந்து வெளியில் ஒரு வாங்கில் கிடத்தினேன். அவன் போட்ட சத்தம் கேட்டு மருத்துவமனையில் இருந்த சுகவாசிகள் நோயாளிகள் எல்லோருமே கூடிவிட்டார்கள். மயக்கத்தைத் தெளிவித்துக் கொண்டு இரவு பன்னிரெண்டு மணியளவில் அவனைப் பெரும் சங்கடப் பட்டு வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா.. அம்மா... விஜி.. என்னை விட்டுப் போய் விட்டாள் அம்மா..'' என்று தன் தாயிடம் கூறிக் கொண்டு குழந்தை போல் கேவிக் கேவி அழுதான். தாயும் அழ, அக்கம் பக்கத்து வீட்டாரும் கூட, ஒரே அழுகை மயமாகிவிட்டது. எனக்கும் அன்று நித்திரை இல்லை.

''இவர்களுக்குள் இத்தனை பிணைப்பா?'' என்று நான் அன்று வியந்தது இன்னும் நீங்க வில்லை.

வேலையற்றிருந்த நான் அவனுக்கு ஆறுதல் கூறுவதையே வேலையாகக் கொண்டிருந்தேன். இப்படியான சந்தர்ப்பங்களில் அவன் அடிக்கடி சொல்லுவான்.

''சந்திரா, நாங்கள் எப்படி ஒருவரை ஒருவர் நேசித்தோம் என்பதை நீ அறியமாட்டாய். எப்படி வாழ்ந்தோம் என்றும் அறியமாட்டாய். அவள் இல்லாத உலகத்தில் இனி எனக்கு வாழ்வில்லையடா''

ஒரு நாள் தாய் தந்தையரை எதிர்த்து அவள் என்னுடன் வரப் போவதாகச் சொன்னாள். நான் சொன்னேன், ''விஜி நாம் தாய் தந்தையரின் விருப்பமில்லாமல் கல்யாணம் செய்து கொண்டால் பெரும் துன்பங்களை எல்லாம் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். தாய் தந்தையரின் விருப்பப் படி நீ மணந்து கொண்டால் அவர்கள் விருப்பப்படி உனக்கென அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் செல்வங்களை எல்லாம் அனுபவிக்கலாம். நானோ ஏழை. எடுக்கும் சம்பளத்துடன் அம்மாவையும் கவனித்து நமது குடும்பத்தையும் பார்க்க வேண்டும். அதனால் மிகவும் கஷ்டமாக இருக்கும்'' என்றேன்.

அதற்கு அவள் இலக்கியப் பாடல் ஒன்றைக் கூறிவிட்டுச் சொன்னாள். ''அத்தான் பணம் படைத்த ஒருவனை மணந்து விருப்பமில்லாமல் வாழ்வதிலும் பார்க்க மனம் விரும்பிய ஒருவரை மணந்து, விறகு பொறுக்கி எடுத்து, கிரை பிடுங்கி உப்பில்லாமல் கடைந்து சாப்பிட்டு, தெருக்களில் படுத்துத் திரிந்தாலும் அது போல் இன்பம் ஏதும் இல்லையத்தான். இதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்தால் எவ்வளவோ இன்பமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வாழ்க்கை ஊரெங்கும் மலரும்'' என்று கூறினாள்.

நான் எத்தனையோ நாள் வேலைக்கரைச்சலால் மதியச் சாப்பாட்டிற்கு வரமுடியாமல் இருப்பேன். அப்போதெல்லாம் அவளும் பட்டினி கிடப்பாள். ஒரு நேரம் சாப்பிடா விட்டால் அவளுக்கு எழும்பி நடக்க முடியாத பலவீனமாக இருக்கும். அம்மா என்ன சொன்னாலும் கேட்க மாட்டாளாம். அம்மாவை எந்த வேலையும் செய்ய விடமாட்டாளாம். அப்படிப்பட்ட வளடா...''

கடந்த சித்திரை வருடப் பிறப்பு வந்த போது அம்மா என்னிடம் கூறினார், ''அவள் வந்து ஒரு வருடமாகிறதல்லவா அவளுக்கு என்ன உடுப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறாய்? அவள் கொண்டு வந்த உடுப்புகளைத் தானே உடுத்து வருகிறாள். வருஷத்துக்காவது அவளுக்கு என்ன கடன் பட்டாவது உடுப்பெடுத்துக் கொடு'' என்று. இதை அவள் கேட்டிருக் கிறாள். நான் அவளிடம் சென்றதும்,

''அத்தான் ஏன் உங்களுக்கு இந்தக் கவலை? எதற்காக எனக்கு உடுப்பு? இருப்பதே போதும். இன்னும் எத்தனை வருடங்கள் வாழப்போகிறோம், அப்போதெல்லாம் உடுப்பெடுத்து உடுக்கலாம். ஆனால், உங்கள் அம்மாவுக்குத் தான் நாங்கள் உடுப்பெடுத்துக் கொடுக்க வேண்டும். மாமி தான் இன்னும் கொஞ்ச நாள்ல வாழ்க்கையை முடித்துக் கொள்ளப் போறவ அவ துன்பப் படாமல் இருக்க வேண்டும். அவவைத் தான் நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும். உங்கள் நிலை எனக்குத் தெரியும் நீங்க கவலைப்பட வேண்டாம்...'' என்றாள்.

அப்படியானால் இரண்டு பேருக்கும் உடுப்பெடுத்துக் கொடுக்க வேண்டியதில்லை. என்றாலும் அப்படி எடுத்துக் கொடுப்பதென்றாலும் கையில் ஒன்றுமில்லை என்று உள்ளூர நான் மனம் வருந்திக் கொண்டிருந்தேன். ஒரு நாள் நான் வேலையில் இருந்து வந்ததும் வழக்கம் போலப் புறப்பட்டோம் கடற்கரைக்குச் செல்ல வென்று. விஜி, தான் சேர்த்து வைத்திருந் தது என்று சொல்லி நூற்றி நாற்பத்தி எட்டு ரூபாய்க் காசைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தாள். ''வாருங்கள் அத்தான் மாமிக்கு உடுப்பு எடுத்து வருவோம்'' என்றாள். என் கண்கள் கலங்கி விட்டது.

என் கண்களைத் துடைத்து விட்டு எனக்கு ஆறுதல் கூறிச் சென்று உடுப்பெடுத்தாள். மிகுதிக் காசில் அவளுக்கு ஏதும் எடுக்க நினைக்காமல் எனக்கு ஏதாவது வேண்டவே யோசித்தாள். நானோ அவளுக்கு ஒரு ரவிக்கை துண்டை எடுக்க முயற்சிக்க, ''உங்களுக்கில்லாமல் எனக்கெதுக்கத்தான்?'' என்று தடுத்து விட்டாள்.

அம்மா அந்தப் புடவையை தான் உடுக்க மாட்டேன் என்றதும் அழுது அடம் பிடித்து உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கிவிட்டாள். அம்மா சம்மதம் கூறிய பிறகு தான் சாப்பிட்டாள்.

என்னவென்று நான் உனக்கு அவளைப் பற்றிச் சொல்வேன்? சொன்னாலும் உனக்கெங்கே விளங்கப் போகிறது? நீ காதலித்திருக்க வேண்டும் அல்லது கல்யாணம் முடித்திருக்க வேண்டும். எனக்காக உள்ளத்தையும் உடலையும் உயிரையும் தந்து விட்டுச் சென்று விட்டாள்'' இப்படிக் கூறி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அழுவான்.

இரண்டு மூன்று நாட்கள் நான் அக்கா வீட்டுக்குச் சென்று விட்டு நேற்று மாலை வந்த போது அவனைக் காண வேண்டும் என்று சென்றேன். அவன் வெளியே சென்றிருக்கிறான் என்று அறிந்ததும் கடற்கரைக்கு வந்த நான் அங்கு சந்தித்தேன். அப்போது தான் கூறினான். ''சந்திரா என் நிலைமை உனக்கு எங்கே புரியப் போகிறது?''

''குமார், பிறந்தவர்களெல்லாம் இறந்துதானாக வேண்டும் இது இயற்கை. இதை மீற முடியுமா?''

''அது எப்போதும் வருமென்று நாம் எதிர்பார்த்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு இனிமேல் நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டியது தான். அவளைப் போலச் சிறந்த பெண்கள் இன்னும் இந்த நாட்டில் இருக்கத் தான் செய்கிறார்கள் குமார். மனதைத் திடப்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டால் காலம் உன் கவலையை மாற்றும்'' என்றேன் நான்.

''இனியும் நான் வாழ்வதா? அது அவளோடு முடிந்து விட்ட கதை சந்திரா. என் உடல் வாழ்க்கையும் இன்றோ நாளையோ முடிந்து விடும். அப்போது தான் உணர்வாய்'' என்றான்.

''நீ விரும்பியவாறெல்லாம் நடக்காது குமார். அதற்குக் காலமும் நேரமும் வரவேண்டும்''

''எல்லாம் நம் கையில் தான் இருக்கிறது. நாம் நினைத்தால் சரியாகிவிடும்'' என்று கூறிவிட்டு எழுந்தான்.

நானும் எழுந்து அவன் வீடுவரை சென்று விட்டு வந்தேன். இன்று அவன் எங்கேயோ... நான் இங்கே...

பொலீஸார் பிணத்தை கீழே இறக்கிப் பரிசோதித்துப் பார்த்த பின்னர் டாக்டரிடம் ஒப்படைத்தனர்.

''என். சந்திரன் என்பது யார்?'' என்று பொலீஸார் கேட்டனர். நான் என் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு சென்றேன். எனக்கொரு கடிதம் இருந்தது.

*அன்பின் சந்திரா,*

*நீ என்னை வாழ வைக்க எடுத்த முயற்சிகள் எல்லாம் வீணாகிவிட்டது என்று கலங்காதே. அவளில்லாமல் இனிமேல் என்னால் வாழ முடியாது. அதனால் நான் இவ்வுலகை விட்டுச் செல்கிறேன்.*

*நிறைகுடம் நீர் கொள்ளாது என்பதை அறிவாய். இனி மேலும் என்னால் வாழ முடியாது என்ற எண்ணம் என் மனதை நிறைத்துக் கொண்டதனால் தான் உன்னுடைய புத்திமதிகளை என்னால் ஏற்க முடியவில்லை.*

*உனக்கு இன்னுமொரு கடமையைத் தந்து விட்டுச் செல்கிறேன். அம்மாவை அனாதையாக்கி விட்டு, விட்டுச் செல்கிறேன். இதுவரை நான் வாழ்ந்தது அம்மாவுக்காகத் தான். ஆனால் மேலும் என்னால் வாழ முடியவில்லை. இனிமேல் நீ தான் அம்மாவுக்கு மகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இந்த நிலையில் நீ எனக்காகச் சொன்ன ஆறுதல் மொழிகளை நினைத்துப் பார். வருகிறேன்.*

*இவ்வண்ணம்*

*உன்னைப் பிரிந்துவிட்ட நண்பன்,*

*குமார்.*

இதைப் படித்ததும் எனக்கு வாய் விட்டு அழ வேண்டும் போன்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா

செப்டம்பர் 1968

## 05 நினைக்கத் தெரிந்த மனம்

எதை நாம் மறக்க வேண்டும் என்று முயற்சிக்கிறோமோ அதையே நாம் மறக்க முடியாது. நாம் என்றுமே மறக்க முடியாதவாறு அது நம் மனதில் பதிந்து விடுகிறது- இது தான் மனோதத்துவமாம்.

என்ன தத்துவமாக இருந்தாலும் அது என் வாழ்க்கையில் ஒட்டிக் கொண்டது. நான் எவ்வளவு தூரம் அவளையும் அவளுடன் பழகிய நிகழ்ச்சிகளையும் மறக்க முயற்சிக்கின்றேனோ அவை அவ்வளவுக்கு பசுமையாக என் உள்ளத்தில் தோன்றிக் கொண்டே இருக்கிறது. அவளை மறந்து வாழவேண்டும் என்று துடிக்கிறேன், ஆனால் அவள் நினைவுகள் என் மனதில் தோன்றி என்னை அணுவணுவாகச் சித்திரவதை செய்கின்றன.

நேற்று நடந்தது போல் அவையெல்லாம் நிழற் படம் போல் தெரிகிறது. ஆனால் இவை நடந்து, அவள் என்னை விட்டுப் பிரிந்து மூன்று வருடமாகிறது. ஆமாம்! இந்த சித்திரை வருடப் பிறப்பில் மூன்று வருடங்கள் முடிந்து நான்கா வது வருடம் ஆரம்பமாகிறது.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கல்விப் பொதுத் தராதர வகுப்பில் இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் தமிழாசிரியர் படிப்பித்துக் கொண்டிருந்தார். அவருக்கு பாடத்திட்டத்துக்கு அமைவாகப் படிப்பிக்கத் தெரியாது என்று தான் கூறவேண்டும். மாணவர்கள் பரந்த அறிவைப் பெற வேண்டும் என்ற எண்ணமுள்ளவர். ஒரு சிறு நிகழ்ச்சிக்குப் பல உதாரணங்களை எங்கெல்லாமோ இருந்து எடுத்துக் காட்டுவார். சில சமயங்களில் பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட இலக்கியங்களில் இருந்தும் சிறந்தவற்றை எடுத்துப் படிப்பிப்பார். அவர் தான் எங்களுக்கு சமய பாடமும் கற்பிப்பவர்.

அன்று சமய பாட நேரம் கிழமைப் பரீட்சை ஒன்றை நடத்திவிட்டு விடைத் தாள்களைப் பெற்றுக் கொண்டிருந்தவர், ஒரு பாடலைப் பாடிவிட்டு அதற்கு விளக்கம் தந்து கொண்டிருந் தார்.

இந்தப் பாடல் தான் எங்கள் உறவுக்குக் காரணமானது. உள்ளச் சேர்க்கைக்குக் காரணமானது. அதை என்னால் மறந்து விட முடியவில்லை. நினைக்கும் நேரமெல்லாம் அப்பாடலைப் பாடுவேன். அது என் மனதைவிட்டு அகலாமலே நின்று விட்டது.

அந்தப் பாடம் முடிந்ததும் பாடலில் ஓரடியைப் பற்றி கீதா வந்து விளக்கம் கேட்டாள். ''எனக்கும் தெரியாது, வாசிக சாலைக்குச் சென்று தமிழ் அகராதியைப் பார்ப்போம்'' என்று கூறி அவளையும் அழைத்துக் கொண்டு வந்தேன்.

நான் தான் வாசிகசாலைக்குப் பொறுப்பாக இருந்தேன். அந்தப் பேரகராதியை எடுத்து இருவரும் ஒன்றாகவே பார்த்தோம். பார்த்த பின் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்தேன். அவளுக்குச் சிரிப்பு வந்த போதும் அதை அடக்கிக் கொண்டு நாணியவாறு என்னைப் பார்த்தாள்.

எத்தனை வருடங்களாகப் பார்த்து வருகிறோம். ஆனால் அன்று பார்த்த பார்வை, அத்தனை வருடங்களும் பார்த்ததில் இருந்து வேறுபட்டது. அந்தப் பார்வைக்கு அர்த்தமே வேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஓடிவிட்டாள். நான் அகராதியை எடுத்து வைத்துவிட்டு வகுப்புக்கு வந்தேன்.

அதன் பிறகு கீதா என்னைப் பார்க்கவே வெட்கப்பட்டாள். ஆனால் அதை மறக்க வைத்தது கிழமைப் பரீட்சைக்குரிய விடைத்தாள்.

விடைத் தாள்களுக்குப் புள்ளி இட்டு வகுப்புக்குக் கொண்டு வந்த ஆசிரியர், எனது விடையைப் பாராட்டி அதை வகுப்பிலும் படித்துக் காட்டினார். எனக்குத் தான் அதிக புள்ளி கிடைத்திருந்தது.

அன்றைய வினா, ''பால் நினைந்தூட்டும் தாயினும் சால...'' என்னும் திருவாசகப் பாடலுக்கு நயவுரை எழுதுவதாகும்.

அன்றும் இடைவேளை வந்ததும் கீதா இன்னும் சில வகுப்புப் பெண்களுடன் என்னை நோக்கிப் படை எடுத்து வந்திருந்தாள்.

''கண்ணன் நீங்கள் எழுதிய விடை பிழையானது, அதை அவரும் (ஆசிரியரும்) ஆண் என்ற படியால்தான் உங்களுக்குக் கூடிய புள்ளியிட்டவர். பெண்கள் நிலையயை உங்களால் புரிந்து கொள்ள முடியாது''

அவள் இன்னும் என்ன வெல்லாமோ பேசிவிட்டுச் சென்றாள். அடிக்கடி இப்படி ஏதாவது சமயத்தில் அல்லது இலக்கியத்தில் விவாதிப்பது பழக்கமாகிவிட்ட ஒன்று. நான் சிலநேரம் அவளுடன் தேவை இல்லாததை எல்லாம் விவாதிப்பேன்.

''உங்களுக்கு இயலாத படியால் இதையெல்லாம் சொல்கிறீர்கள்'' என்பாள்.

''உங்களுக்குத் தான் வெற்றி'' என்று சில சமயங்களில் நானே ஒப்புக் கொள்ளும் போது அவள் முகம் பிரகாசிக்கும்.

பரீட்சை எழுதிவிட்டு நான் பாடசாலை செல்வதை நிறுத்தி விட்டேன். அவள் தொடர்ந்தும் படித்துக் கொண்டிருந்தாள். பரீட்சை முடிவுகள் வந்திருந்த போது எங்கள் வீட்டுக்கு வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தாள். அவள் தொடர்ந்து படிப்பதாகக் கூறினாள்.

''நீங்கள் ஏன் தொடர்ந்து படிக்காமல் நிற்கப் போகிறீர்கள்?'' என்றாள்.

''வீட்டு நிலமையில் எனக்குத் தொடர்ந்து படிக்க முடியாது கீதா. அண்ணன் டாக்டருக்குப் படிக்கிறார். அவருக்கே செலவழிக்க முடியாமல் அப்பா கஷ்டப்படும் போது, நானும் படித்தால்... நான் ஏதாவது வேலை பார்ப்பது தான் நல்லது என்று நினைக்கிறேன்''

''நீங்கள் இல்லாத வகுப்பில் என்னால் படிக்க முடியாது போல் இருக்கிறது. நீங்கள் இருந்தால் தான் எனக்குப் போட்டி போட்டுக் கொண்டு படிக்க முடியும்'' என்றாள்.

''அப்படிச் சொல்லாதே கீதா! படிக்கக் கிடைக்கும் சந்தர்ப் பத்தில் படிக்க வேண்டும். எனக்கும் படிக்க வேண்டும் என்று ஆசைதான். ஆனால் என்ன செய்வது?... ஏதாவது சந்தேகங்கள் விளக்கங்கள் தேவை என்றால் அடிக்கடி வந்து என்னிடம் கேள். வீடு கிட்டத் தானே இருக்கிறது. நான் இல்லை என்பதற்காக படிப்பை நிறுத்தி விடாதே!....''

இப்படி நான் கூறியது அவளுக்கு சந்தோசத்தைக் கொடுத்திருக்க வேண்டும். போகும் போது அவள் கண்கள் பனித்தன. நான் சோகமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளுடன் படிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று.

அப்படித்தான் இல்லை என்றாலும் அவள் தினமும் மாலை வேளையில் வந்து பாடசாலையில் நடந்த தெல்லாம் கூறுவாள். ஏதாவது கேட்பாள். சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டு வருகிறாள் என்பதை விட இலக்கிய விடயங்களைக் கேட்டு விவாதிக்கவும் கதைக்கவும் வருகிறாள் என்பதே மிகப் பொருத்தமாக இருந்தது.

ஒரு நாள் மாலை நான் கலித்தொகையில் ஒரு பாடல், ''கள்வன் மகன்'' என்பதைப் படித்துக் கொண்டிருந்தேன். கீதா வரும் நேரமாகிவிட்டது என்று எண்ணிக் கொண்டு புத்தகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடினேன். பின்னால் வந்து நின்றிருந்தவள். நான் மூடமுதல் அப்பக்கத்தைப் பிடித்து விட்டாள். நான் திடீரென அவள் கையைப் பிடித்தேன். அவள் அப்படியே சிரித்துக் கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் நான் அவளுடைய கையை விட்டு விட்டு ''ஏன் கீதா சத்தம் போடவில்லை?'' என்று கேட்டேன்.

''ஏன் சத்தம் போட வேண்டும்?'' என்றாள்.

''இந்தப் பாடலில் அப்படித்தான் இருக்கிறது. அது தான் கேட்டேன்'' என்றேன்.

''எப்படி...''

''இந்தக் காலத்தில் ஒரு பெண்ணை ஒருவன் காதலித்தால் அவளுடைய வீட்டுக்குச் செல்வதற்காக அவளுடைய அண்ணனையோ தம்பியையோ பழக்கம் பிடித்துக் கொண்டு, அவர்கள் இல்லாத நேரம் பார்த்து அவர்களைத் தேடி வீட்டுக்குச் செல்வார்கள். மற்றும் எந்த விடயத்துக்கும் அந்த வீட்டைத் தான் முதலில் நினைப்பது.

''இதே போல் ஒருவன் ஒரு பெண்ணை விரும்பியிருந்தான் அவளைக் காண்பதற்காக அவள் வீட்டிற்குச் செல்ல வேண்டும். ஆனால் காரணம் ஏதுமில்லை. ஒரு நாள் போய் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். அப்பெண்ணுடைய தாய் இவளிடம், ''யாரோ குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கிறார்கள் கொண்டு சென்று கொடுத்து விட்டு வா'' என்றாள். அவளும் தண்ணீர் கொண்டு சென்று கொடுத்தாள். அவன், அவள் கையை பிடித்து விட்டான். திடீரென அவள் ''அம்மா'' என்று அலறிவிட்டாள். இவளுடைய சத்தத்தைக் கேட்டு இவளுடைய தாய் பயந்து கலவரமடைந்தாள். ஓடி வந்து, ''என்ன?'' என்று கேட்டாள். இவனுடைய பரிதாபத்தைப் பார்த்த அந்தப் பெண் ''தண்ணீர் பொறுத்து விட்டது'' என்றாள் சந்தர்ப்பத்தைச் சமாளிக்க. அவளுடைய தாய் அவனை இதமாகத் தடவி விட்டாள். ஆனால் அவன் இப்போது அவளைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்தானாம் - இது தான் கவிதை கூறும் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்போதும் பல பெண்கள் ஏதாவது கொண்டு சென்று கொடுக்கும் போது ஏதோ தெரியாத் தனமாகப்பட்டது போல் பொருட்களுடன் கையையும் சேர்த்துப் பிடிப்பதில்லையா? அது தான் அன்றும் நடந்திருக்கிறது. இவள் போல் நீங்க சத்தம் போடவில்லையே அது தான் கேட்டேன்'' என்றேன்.

''அதுவா... அவர்களுடைய காதல் அப்போது தான் ஆரம்பித்திருக்கிறது. அப்பெண் அவனுடைய உள்ளத்தை முதலில் அறிந்திருக்கவில்லை. அதுதான் சத்தம் போட்டாள். முன்னமே தெரிந்திருந்தால் சத்தம் போட்டிருக்க மாட்டாள்...''

''உண்மைதான் அவர்களுடையது அப்போது தான் ஆரம்பமாகிறது என்றால்...?''

அவள் நாணித் தலை குனிந்தாள்.

*****

இப்படி எத்தனையோ நாட்கள் எத்தனையோ நிகழ்ச்சிகள். காலம் கடந்து கொண்டிருந்தது.

நான் ஒரு தொழிலில் சேர்ந்து கொண்டேன். அவள் பாடசாலைப் படிப்பு முடித்து வீட்டில் நின்று கொண்டாள். அதன் பிறகு முன்போல் இல்லாவிட்டாலும் அடிக்கடி வீட்டுக்கு வருவாள். அவள் படிக்க வருவது போல் வருவதால் எங்கள் காதல் ஊராரின் கண்ணுக்குத் தெரியவில்லை.

இந்த நிலையில் அவளுக்கும் அவளுடைய அண்ணனுக்கும் ஒரு மாற்றுச் சடங்குச் சம்பந்தம் பேசி வந்திருந்தனர். அதை அறிந்ததும் துடிதுடித்துப் போனாளாம்.

ஒரு நாள் வந்து என்னிடம் சொன்னாள், ''மணந்தால் உங்களைத் தான் மணப்பேன், இல்லாவிட்டால் மரணத்தை அணைப்பேன்'' என்று.

இறுதியாகத் தாய் தந்தையரிடம் மறுத்துக் கூறிவிட்டாள். என்னைத் தான் மணப்பேன் என்று. ''படிக்கப் போன நீயா அல்லது காதலிக்கப் போன நீயா?'' என்றெல்லாம் அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துத் துன்புறுத்தினார்கள். அவள் எதற்கும் அசையவே இல்லை. அதை இப்போது நினைக்கும் போதும் எனக்கு உடம்பு சிலிர்க்கிறது.

அவளுடைய அப்பா இன்னொருவருடன் இறுதியாக என்னிடம் வந்தார். ''தம்பி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுறன். நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும். இதற்கு உதவி செய் தம்பி. இவளுடைய நிலை தெரியாமல் நான் அவர்களுக்குச் சம்மதம் சொல்லிப் போட்டன் மாற்றுச் சடங்குக்கு. அவனும் (மகனும்) அங்க போய் வரத் தொடங்கி விட்டான். அதற்கு நீங்க தான் உதவி செய்ய வேணும்'' என்றார்.

என் கண்கள் கலங்கின. ''அவள் விரும்பாத ஒன்றை என்னால் எப்படிச் செய்து விட முடியும்? அவள் மனம் மாறினால் அல்லவோ கல்யாணம் செய்யலாம்? என்னால் என்ன உதவி செய்ய முடியும்?''

''தம்பி உங்களைத் தான் அவள் விரும்பியிருக்கிறாள். நீங்க ஒரு கடிதம் எழுதிக் கொடுங்க, நீங்க அவளை விரும்பவில்லை' என்று, பிறகு அவள் மனம் மாறிடுவாள்'' என்றார் கூட வந்தவர்.

''என்னை மணக்காவிட்டால் அவள் தான் இறப்பேன் என்றிருக்கிறாள். அதிலிருந்து நீங்கள் அவளைக் காப்பாற்ற முடியுமா?''

''அவள் சொன்னாப் போல அப்பிடி நடந்திடுவாளா? பேச்சுக்குத் தான் சொல்றது'' என்றார் கூட வந்தவர்.

இரண்டு மூன்று நாட்களாக இவர்கள் தொடர்ந்து வீட்டுக்கு வந்தார்கள். நான் அழுதழுது என் மனதைக் கல்லாக்கிக் கொண்டேன். எப்படியாவது அவள் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் கடிதத்தை எழுதிக் கொடுத்தேன்.

*அன்பின் கீதா,*

*நான் உன்னுடன் அன்பாகச் சிரித்துக் கதைத்துப் பழகியதெல்லாம் உன்னை மணந்து கொள்வதற்காகவல்ல. நீ என்னைத்தான் மணப்பேன் என்று அடம் பிடிப்பது வீணானது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அறிந்த பின்னாவது உன் தாய் தந்தையரின் விருப்பப் படி நடந்து உன் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்.

இப்படிக்கு

அன்புடன்

கண்ணன்.

இக் கடிதத்தை எழுதிக் கொடுத்த போது காதலைத் தியாகம் செய்கிறோம் என்ற பெருமை என்னுள் எழுந்தது. அந்தப் பெருமை எல்லாம் இப்போது கண்ணீரால் கரைந்து விட்டது.

கடிதத்தைப் படித்த சீதா ''கண்ணா'' என்ற அலறிக் கொண்டே கீழே விழுந்தாளாம். விழுந்தவள், விழுந்தவள் தான். அவளைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது.

அவளைக் கீறிப் பரிசோதித்தார்கள். பல நாட்களாகச் சாப்பிடாமல் அழுது கொண்டே இருந்ததால் இருதயம் பலவீனமடைந்து இருந்திருக்கிறது. இந்த அதிர்ச்சி அவளுடைய இரத்தக் குழாய் ஒன்றை வெடிக்க வைத்திருக்கிறதாம். ''இருதய அதிர்ச்சி காரணமாக ஏற்பட்ட மரணம்'' என்று திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்புக் கூறி விட்டார்.

ஆனால் உண்மை...

சாவுக்குக் காரணம்...

''நான் அநியாயமாக என் பிள்ளையைக் கொன்று போட்டேனே...'' என்று தலையிலடித்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார் அவளுடைய அப்பா.

''அவளுடைய சாவுக்குக் காரணம் நானல்லவா. அவளுடைய மன நிலை தெரிந்திருந்தும் நான் அவர்கள் கேட்டார்கள் என்பதற்காக இப்படி ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்திருக்கக் கூடாது'' என்று என் மனம் அழுது கொண்டிருக்கிறது.

உலகத்திலிருந்து அவள் மறைந்து விட்டாள். என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலிருந்து மறையவில்லை. எல்லோரும் அவளை மறந்து விட்டார்கள். என்னால் அவளை மறக்க முடியவில்லை. மறக்கத் தான் முயற்சிக்கிறேன். முடியவில்லை. என் மீது அவள் கொண்டிருந்த தூய காதலை எண்ணிப் பெருமைப்பட வேண்டிய நான் எப்படி அவளை மறக்க முடியும்? நினைக்கத் தெரிந்த மனதுக்கு மறக்கத் தெரியவில்லை. தெரியவே தெரியாது!

''உனது மனச் சாந்திக்காகப் பிரார்த்திக்கிறேன். உனக்கு எமனாக வந்த என்னை மன்னித்து விடு கீதா! உண்மையை அறியும் போது உன் மனம் சாந்தியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
ஆகஸ்ட் 1967

## 06 எனக்காக வாழண்ணா

சிட்டுக் குருவி போல் சில காலம் இவ்வுலகில் பறந்து திரிந்தேன். நானுண்டு எனது உழைப்புண்டு என்று வேண்டியபடி செலவு செய்து கொண்டிருந்தேன். ஆனால் அப்பா இறந்த பின் குடும்பப் பாரம் என் தலையில் ஏறிவிட்டது. இதனால் பொறுப்பு உள்ளவனாகி விட்டேன்.

அம்மாவும் திருமணத்தை எதிர்பார்த்து நிற்கும் தங்கை பூமலரும் நானும் தான் எங்கள் குடும்பம். தங்கைக்கு எத்தனையோ வரன்கள் பேசியும் அவையெல்லாம் சீதனம் போதாமை காரணமாகத் தடைப்பட்டு விட்டன. இருக்கும் வீடுவளவு போதாதென்று பணமும் கேட்கிறார்கள். எப்படிப் பட்ட மனிதர்கள்? 'கரும்பு தின்னக் கைக் கூலியா?' என்பது பழமொழி. ஆமாம் அது பழம் மொழி தான். அதன் பெயருக் கேற்ப அந்தக் காலத்துக்கே பொருந் துவதாக அமைந்து விட்டது. ஆனால் இப்போதைய ஆண்கள் கரும்பு தின்னக் கைக் கூலி கேட்கத்தான் செய்கிறார்கள். என் போன்ற ஒரு சிலர் வாழ்வதற் காவது இக் கண்மூடிப் பழக்கம் ஒழிந்து போக வேண்டி இருக்கிறது.

நான் சீதனம் ஏதும் இல்லாமல் திருமணம் முடிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் தங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தைக் கொண்டு நடத்த ஒருவன்...? நான் சீதனம் இல்லாமல் தான் மணம் முடிப்பேன் என்பதை அறிந்த சிலர் என்னைச் சீதனத்துடன் மணம் முடிக்க வைக்கும் நோக்குடன் எத்தனை பெண் பேசிப் பார்த்தார்கள். நான் வேண்டாம் என்று கூறும் போது அவர்கள் கூறும் காரணம் "இந்தச் சீதனத்தை எடுத்து உன் தங்கைக்கு கல்யாணம் முடித்து வைக்கலாமே" என்பதாக இருந்தது. ஆனால் நான் இதற்கும் சம்மதிக்கவில்லை.

இப்படி வருடங்கள் பல கடந்து கொண்டிருந்தன. தங்கையின் வாழ்வு மலராமலே இருந்தது. அவள் வாழ்வு மலரும் வரை - அவள் மலர்ந்த முகத்தை வாட வைக்காமல் இருக்க வேண்டும் என்று தான் நான் திருமணத்தை வெறுத்திருந்தேன்.

மூன்று மாதங்கள் வரை நான் ஊருக்குச் செல்லவில்லை. ஒரு நாள் தங்கை கடிதம் போட்டிருந்தாள். "உங்களைப் பார்க்க ஆசையாக இருக்கிறதண்ணா உடனே லீவெடுத்துக் கொண்டு வாருங்கள்" என்று. அவள் விருப்பம் தானே என் விருப்பம். உடனே புறப்பட்டு விட்டேன்.

அடுத்த நாள் காலையே போய்ச் சேர்ந்தேன். மாலை நேரம் நான் வீட்டில் இருந்த சமயம் மலர் என்னருகே வந்தமர்ந்து விட்டாள்.

"உங்களை வரச் சொன்ன காரணம் தெரியுமாண்ணா?" என்றாள்.

"ஏன் சும்மா வரச் சொல்லித்தானே எழுதியிருந்தது"

"சும்மா வரச் சொல்லல்ல-உங்களுக்குக் கல்யாணம்... கல்யாணம் என்று எழுதினால் நீங்க வரமாட்டீங்க... என்று தான் அப்படி எழுதின நான்..."

"மலர் உனக்கென்ன பைத்தியமா? உனக்குக் கல்யாணம் முடியும் வரை நான் கல்யாணம் முடிப்பதில்லை என்று தெரியாதா?" என்றேன்.

"அண்ணா இப்படிச் சொல்லிக் கொண்டு எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களண்ணா இருக்கப் போறீங்க?'' அவள் கண்கள் கலங்கியது.

''எத்தனை வருடமானாலும் என்ன மலர்? நீ கல்யாணம் முடித்த பிறகு தான் நான் முடிப்பது''

''அப்படியானால் இருவருக்குமே கல்யாணம் நடக்கப் போவதில்லை அண்ணா...''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்...?''

''சீதனம் இல்லாமல் என்னைக் கல்யாணம் முடிக்க யாரும் வரப் போவதில்லை - நானும் கல்யாணம் முடிக்கப் போவதில்லை. அந்தக் காலம் மலையேறி விட்டதண்ணா. அப்படிப்பட்ட ஆண்களும் இப்போது இல்லை...''

''ஏன் நான் இருக்கிறேனே...!''

''ஓ... அதனால் தான் உங்களுக்கு சீதனம் இல்லாத கல்யாணம் பேசி வைத்திருக்கிறேன். ஆனால் நீங்க தான் மாட்டேன் என்கிறீர்களே?''

''சீதனம் இல்லாத கல்யாணத்துக்காகவா நான் வேண்டாம் என்கிறேன். உனக்காக வாழ வேண்டியவனாக இருக்கிறேன். எனக்காக வாழ்பவனாக இருந்தால் தயங்க மாட்டேன்''

''உங்களைப் போலத் தான் அண்ணா எல்லோரும் பெரிய மேடையிலும் ஏறி நின்று பேசுவாங்க! 'சீதனம் வாங்கக் கூடாது. சீதனம் வாங்குவது கொடுமையிலும் கொடுமை. நானும் சீதனம் வாங்காமல் திருமணம் முடிப்பதற்குத் தான் தீர்மானித்து இருக்கிறேன். சீதனம் வாங்குவது நம்மை - நமது வாழ்வை பெண் பகுதிக்கு விலை கூறி விற்பதாகும். இது எமக்கு அவமானமாகும். உருவாகும் இளைஞர்கள் இந்நிலையை அழித்தொழிக்கப் பாடுபடவேண்டும்' என்று பேசுவாங்க. ஆனால் யாராவது போய்த் திருமணம் பேசினா ,

''எனக்கு எவ்வளவோ பொறுப்பு இருக்கிறது. தம்பி, தங்கை, அக்கா, அக்காவின் மகள் என்று இப்படி எல்லாம் நொண்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்குச் சொல்லி தப்பிக் கொள்ளப் பாக்கிறாங்க. இதை எல்லாம் சொல்லுவதுடன் நிறுத்திவிடக் கூடாதண்ணா. எத்தனை பொறுப்பிருந்தாலும் செயலிலை காட்ட முன்வர வேண்டும். அப்போது தான் மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்க முடியும். விஷப் பரீட்சையாக முடிந்தாலும் பரவாயில்லை. நீங்கள் இப்படிப் பொறுப்புக்களைத் துறந்து சீதனம் இல்லாமல் மணம் முடிப்பதால் உங்களைப் பார்த்து ஒருவர் உங்கள் தங்கையை மணம் முடிக்க வந்தாலும் வரலாம் அல்லவா அண்ணா?''

-என்று ஒரு மேடைப் பேச்சையே பேசி முடித்தாள் மலர்.

'எனது தங்கையா இப்படிப் பேசுகிறாள்' என்று வியந்து போய் நான் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் பேச வேண்டியதை எல்லாம் அவள் பேசிக் கொண்டிருந்தாள். என்னால் எதுவும் பேச முடியவில்லை. ஒரு பக்கம் வியப்பாகவும் மறுபக்கம் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

''என்னண்ணா பேசாமல் இருக்கிறீர்கள்?'' என்றாள்.

''நான் என்னத்தைப் பேச இருக்கிறது? எல்லாவற்றையும் தான் நீ பேசி விட்டாயே?''

''ஆமாம் அண்ணா திருமணமும் நான் தான் பேசினேன். வேறு யாருமல்ல... பெண் யார் தெரியுமாண்ணா?...'' என்று கூறிவிட்டு எனது ஆவலை பார்த்தாள்.

''யார்?'' என்றேன்.

''உங்களுக்குத் தெரியாத பெண்கள் இந்த ஊரில் யார் இருக்கப் போகிறார்கள்? அவள் தான் 'சரோஜா'. நீங்க அவளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அவளோட நான் நெடுகப் பழகி வந்திருக்கிறன்''

''இல்ல மலர், நீ பழகி வந்ததெல்லாம் அவள் மணம் முடிக்க முன்னர். ஆனால் பெண்கள் திருமணம் முடித்ததும் மாறிவிடுவார்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லண்ணா அவள் அப்படி மாற மாட்டாள். எனக்கு நல்லாத் தெரியும். சரோஜாவுக்கு முன்பிருந்தே உங்கள் மீது விருப்பம் போலத் தெரியுதண்ணா. ஒரு நாள் நான் சொன்னனான், 'எங்களுக்கு எல்லாம் அண்ணாதான். கல்யாணம் முடித்தாலும் நான் கல்யாணம் முடிக்குமட்டும் அண்ணாதான் எங்களையும் கவனிக்க வேண்டும்' என்றேன்.

அதுக்கு அவ, "எனக்குத் தெரியாதா மலர்? அப்பா இல்லாத குடும்பத்துக்கு வீட்டிலுள்ள மூத்த ஆண்பிள்ளை தானே தலைவன். இப்ப உங்களுக்கு அப்பா, அண்ணா எல்லாம் அவர் தானே. கல்யாணம் முடித்தாலும் அவர் தானே உங்களைப் பார்க்க வேணும். வேறு யார் வரப் போறாங்க?" என்றவ.

"இதனால் தானண்ணா அவவில எனக்கு நல்ல விருப்பம். உங்களுக்கு விருப்பமாண்ணா?" என்றாள்.

நான் அவளைப் பார்த்தேன்.

"உங்களுக்கு விருப்பம் இல்லாட்டிச் சொல்லுங்கண்ணா" என்றாள்.

நான் சிரித்தேன்.

"அம்மோவ் அண்ணாவுக்குச் சம்மதம்" என்று கத்திக் கொண்டே ஓடினாள்.

"உன் விருப்பப் படி நடக்கட்டும். ஆனால் இதில் யாருக்கும் துன்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு" என்றேன்.

ஒரு சில மாதங்களில் மலரின் விருப்பம் போல் திருமணம் நடந்தேறியது. தனக்கு மணம் முடித்து விட்டது போன்ற சந் தோஷத்தில் இருந்தாள் மலர். என்னைவிட அதில் அவளுக்குத் தான் உற்சாகம் காணப்பட்டது. சரோஜாவை சில நாட்களில் எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன்.

மலர் கூறியது போல் எங்கள் செய்கை ஊரெங்கும் பரபரப்பான ஒரு செய்தியாகத் தான் இருந்தது. அப்போது நானும் மகிழ்ச்சியடைந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுதல் பெற்று நான் ஊரோடு வந்து விட்டேன். மாதங்கள் உருண்டோடின. மாற்றங்கள் பல ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றை யெல்லாம் மிகச் சாதாரணமாக ஏற்றுக் கொண்டேன். - சமாளித்து விடலாம் என்று. இது நான் எதிர்பார்த்தது தானே! ஆனால் மலர் எதிர்பாராதது.

மலர் அவளை எவ்வளவு அன்பு ததும்ப 'அண்ணி' என்று அழைத்தாளோ அவ்வளவுக்கு அலட்சியம் செய்தாள் சரோஜா. நான் லீவு நாட்களில் நிற்கும் போதும் சரோஜா மலரை அடிமை போல் பாவிப்பதை என்னால் அறிய முடிந்தது. சமையல் கட்டுக்கே சரோஜா போகமாட்டாள். மலர் சாப்பாட்டு மேசைக்கும் வரமாட்டாள். இதைக் கண்ட போது என் உள்ளம் கொதித்தது. அடக்கிக் கொண்டேன்.

அம்மாவிடம் அவளைப் பற்றிக் கேட்ட போது அம்மா அழுது விட்டார். ''மலர் உன்னிட்ட எதையுமே சொல்ல வேண்டாம் என்று சென்னவள்'' என்றார். மலரை நினைத்ததும் எனக்கு அழுகை தான் வரும். எவ்வளவு தூரத்துக்குப் போகிறது என்று அறிய விட்டு விட்டேன்.

தொடர்ந்து மலர் கடைக்கு, கடற்கரைக்கு, சினிமாவுக்கு எங்களுடன் வருவதென்றால் சரோஜா தனக்குத் தலையிடி, அது - இது என்று ஏதாவது கூறி மறுத்து விடுவாள். அவளைத் தனியே அழைத்துச் செல்வதென்றால் சந்தோசமாக வருவாள். மலர் தானாக எங்கும் செல்ல வர மாட்டாள். இத்தனை வேலைகளையும் அடிமைபோல் செய்து கொண்டு வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறாளே என்று நான் தான் வலிந்து அழைத்துச் செல்வேன். அந்த நேரங்கள் பார்த்து இவள் தன்னால் முடியாது என்று கூறிவிடுவாள்.

ஒரு நாள் சரோஜாவை சினிமாவுக்குச் செல்ல புறப்படச் சொல்லி விட்டு அவள் அறியாமல் மலருக்கும் சொன்னேன். சரோஜா புறப்பட்டு வந்தவள், மலரும் ஆயத்தமாக இருப்பதைப் பார்த்து விட்டு பொய்ச் சாட்டுச் சொல்ல ஆரம்பித்தாள். முடிவாக ''அண்ணனும் தங்கையும் போயிட்டு வாங்க என்னால் முடியாது'' என்று மறுத்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நான் அடக்கி வைத்திருந்த கோபம் முழுவதும் பீறிட்டுக் கொண்டு வந்தது. சரோஜாவை தாறுமாறாக அடித்து விட்டேன். மலர் தடுத்துத் தானும் சில அடிகள் வாங்கிய பின்பு தான் என் கோபம் தணிந்தது.

''மனிதனாக இருந்த அண்ணாவா நீங்கள்...?'' என்றாள் மலர்.

''இல்லை மலர். உன் அண்ணனை அழித்து விட்டாள் உன் அண்ணி. இப்போது மிருகமாக மாறிக் கொண்டிருக்கும் மனிதன் நான்...''

''ஜீவகாருண்யம் என்று மிருகங்களையே வதைக்கக் கூடாது என்று தடை போட்டுக் கொண்டு வருகிறார்கள். நீங்கள் மனிதர்களாக இருந்து கொண்டு பெண்களை வதைக்கிறீர்கள்?''

''மனிதன் மிருகமாக மாறிவிட்டால் அவனுக்கு எந்தத் தடையும் போட முடியாது. என்னிடம் அதிகமாகக் கதைக்காதே மலர்... போ... போய் விடு...'' என்று சத்தமிட்டேன்.

அடுத்த நாள் காலை சரோஜாவை அழைத்துச் சென்று அவளுடைய வீட்டில் விட்டு வந்தேன்.

''மலருக்கு கல்யாணம் முடிந்த பிறகு தான் நம் வாழ்க்கை இனிமேல் தொடரும்'' என்று கூறி விட்டு வந்தேன்.

மலர் எவ்வளவோ சொல்லித் தடுத்தாள். நான் கேட்கவே இல்லை.

அன்று நான் வேலைக்குச் செல்லவில்லை. விடுமுறை கேட்டு எழுதிவிட்டு நின்று விட்டேன். மலர் அடிக்கடி வந்து என்னிடம் கதைத்தாள். இரவு முழுவதும் கதைத்துக் கொண்டே இருந்தாள்.

''இதற்குத் தானா அண்ணா நீங்க சீதனம் இல்லாமல் பெண் கேட்ட நீங்க? நினைத்த நேரம் அடித்து விரட்டி விடலாம் என்று. ஊர் என்னண்ணா பேசப் போகிறது உங்களைப் பற்றி? எது வந்த போதும் ஏற்றுக் கொள்ளத் தான் வேணுமண்ணா. அண்ணியைக் கூட்டிக் கொண்டு வாங்க'' என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முடியாது... மலர் முடியாது..." என்ற எனது பிடிவாதம் மாறாததாக இருந்தது. இரவு வெகு நேரத்துக்குப் பின் மலர் படுக்கைக்குச் சென்றாள்.

அடுத்த நாள் காலை அம்மா அவள் நேரமாகியும் எழும்பாததைப் பார்த்து எழுப்பச் சென்ற போது அலறி விட்டா. என்ன என்று பார்க்கச் சென்ற நான் சிலையானேன். அவளருகில் கடிதம் ஒன்று கிடந்தது.

*அண்ணா.*

*எனக்கு திருமணம் முடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள். அது நடக்காது என்று எனக்குத் தெரியும். அதுதான் உங்களுக்குத் திருமணம் முடித்துப் பார்த்தேன். அன்றே நானும் திருமணம் முடித்தது போன்ற உணர்வடைந்தேன். நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். என் மணக் கோலத்தை இப்போது பாருங்கள்.*

*எனக்காக வாழவேண்டும் என்று துடிக்கிறீர்கள். ஆமாம். உடல் இரண்டு இருப்பதால் தானே இந்தத் துடிப்பு. அந்த வேற்றுமை தரும் உடலை அழித்து விட்டு உங்கள் உயிருடன் உயிராய்க் கலந்து விட்டேன் அண்ணா. இனிமேல் நீங்கள் எனக்காக வாழ வேண்டும் அண்ணா.*

*அண்ணா அழாதே அண்ணா. நீ அழுதால் உன் தங்கையும் அழுவாள். நீ சிரித்தால் உன் தங்கையும் சிரிப்பாள். உன் தங்கை இன்பமாக இருக்க வேண்டும் என்று நீ கருதியது உண்மையாக இருந்தால் நீ இன்பமாக இரு அண்ணா. இதுவே உன் ஆசைத் தங்கையின் இறுதி வேண்டுகோள்.*

*இப்படிக்கு,*
*தங்கை,*
*மலர்.*

அழுதேன்; அழுகிறேன். இன்னும் அழுது கொண்டே இருக்கிறேன். தங்கையும் அழுவாளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
ஒக்டோபர் 1967

## 07 அவமானம்

பாடசாலை முன் மாணவ மாணவியர் கூட்டம் கூட்டமாக நின்று கலகலப்பாகக் கதைத்துக் கொண்டிருந்தனர். 'ஆகஸ்ட்' பரீட்சை நடந்து கொண்டிருந்தது. பரீட்சை நேரம் முடிய முன்னர் எழுந்து வந்த மாணவ மாணவியர் பாடசாலை முன் கூடி நின்று சந்தையையும் வென்று விடும் சப்தத்தில் கதைத்துக் கொண்டிருந்தனர். சிலர் தங்கள் திறமையை 'டம்பம்' அடித்துக் கொண்டனர். மற்றும் சிலர் தாங்கள் விட்ட பிழைகளுக்காக வருந்திக் கொண்டனர். பலர் ஓரளவு செய்து விட்ட திருப்தியில் நடக்கவிருக்கும் பாடங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் பாடம் முடிந்து விட்டதற்கு அறிகுறியாக மணியடி படவே அதிகமாக எழுதிக் கொண்டிருந்தவர்களும், எழுத முடியாமலும் எழும்பிவர முடியாமலும் விழித்துக் கொண்டிருந்தவர்களும் பேப்பரைக் கொடுத்து விட்டு வெளியே வந்தனர். பெரும் இரைச்சலுடன் வெளியேறியவர்கள் தங்கள் தங்கள் துணையுடன் சிறிது சிறிதாகக் கலைந்து கொண்டிருந்தனர்.

மகேந்திரனும் அவனது நண்பர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குச் சிறிது தூரத்தில் கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சாந்தி, கமலா, மலர், வசந்தி ஆகியோர் தங்கள் தோழிகளைப் பிரிந்து வரும்வரை காத்துக் கொண்டிருந்தனர். அவர்களை முன்னால் விட்டு பின்னால் கேலி பண்ணிச் செல்ல வேண்டும் என்பதே இவர்கள் நோக்கம். மகேந்திரனுக்கு மட்டும் தான் சாந்தி மீது 'இன்ரறஸ்ட்' தவிர வேறு யாருக்கும் ஒன்றுமில்லை. ஆனாலும் பெண்களிடம் கேலி பேசுவதிலே தனி இன்பமல்லவா? - அதிலும் இந்த ஊர்ப் பையன்களைக் கேட்கவே வேண்டாம்.

சாந்தியும் மகேந்திரனும் ஒரே தெருவில் இருப்பவர்கள். சாந்தி அடிக்கடி மகேந்திரனின் வீட்டைக் கடந்து போவது வழக்கம். மகேந்திரனைக் கண்டும் இருக்கிறாள். ஆனால் அவனது பார்வையோ செய்கையோ அவளுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ஆனால் சாந்தியைக் காணும் போதெல்லாம் மகேந்திரன் மனம் துடிப்பதை உணர்ந்திருக்கிறான். எப்படியா வது அவளைத் தான் கவர வேண்டும் என்பது அவன் எண்ணமாயிருந்தது. அந்த எண்ணத்தின் செயலெல்லாம் சாந்திக்கு வெறுப்பையே தந்தன. சுறுசுறுப்பும் உற்சாகமும் உள்ள சாந்தி அவனை மட்டுமல்ல எவரையும் கவருவதில் வியப்பொன்றுமில்லை.

சிறிது தூரம் சாந்தி குழுவினருக்குப் பின்னால் கேலி பேசி வந்தவர்கள் அவர்கள் வாயை அடைத்து விட்ட பெருமையில் தங்கள் தங்கள் சைசிக்களில் ஏறிச் சென்றனர். சாந்தியைக் கடக்கும் போது மகேந்திரனின் கையிலிருந்த பயிற்சிக் கொப்பியில் இருந்து அவனுடைய அறிமுக அட்டை கீழே விழுந்தது. அதை எடுக்க நினைத்தவன் ''சாந்தி எடுத்து வைத்துக் கொள்ளட்டும்'' என்ற எண்ணம் மின்னல் வேகத்தில் தோன்றவே தெரியாதவன் போல் சைசிக்களை மிதித்தான். இதை மற்றவர்களும் கவனிக்க வில்லை.

இதைக் கவனித்த வசந்தி அறிமுக அட்டையை எடுத்து எல்லாரிடமும் காட்டினாள். மகேந்திரன் நினைத்தது போல் எல்லோரும் பார்த்து முடிந்ததும் சாந்தி அதைப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டாள். ''வேண்டும் என்றே அவன் விட்டுச் சென்றதாக'' அவளுக்குப் பட்டது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நிலையத்தில் சாந்திக்கும் தனக்கும் பரீட்சை நடப்பது குறித்துப் பெருமைப் பட்டுக் கொண்டான் மகேந்திரன். அவன் சித்தி அடையாவிட்டாலும் அவளுடன் பரீட்சை எழுதக் கிடைத்ததே தன் பேறு என்று அடிக்கடி தன் நண்பர்களிடம் கூறிக் கொண்டான். இப்போது அறிமுக அட்டையை தவற விட்டதையும் பெருமையாகக் கூறிக் கொண்டான். ஏன் சாந்தி எடுத்துக் கொண்டு தருவாள் அல்லவா?

''நாளை மட்டும் ஒரு பாடம் இருக்கிறது. இல்லாவிட்டால் அந்தப் படத்தை அவளிடமே விட்டு விடுவேன்'' என்று கவலைப் பட்டான் மகேந்திரன்.

''அந்தக் கவலையை விடு நாளை உனக்குச் சாந்தியோடு கதைக்கச் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறதல்லவா? அதைப் பற்றிப் பெருமைப் படு'' என்றான் நண்பனொருவன்.

''பெருமைப் படலாம் தான், நாளை கதைப்பது உடனே முடிந்து விடும். படம் இருந்தால் எப்போதும் என் நினைவாகவே இருப்பாள் அல்லவா?'' என்று நண்பர்களிடம் கூறியவன் ''எப்படி ஒரு படத்தை அவளிடம் கொடுப்பது? என்று சிந்திக்க ஆரம்பித்தான்.

தன் நண்பர்களைப் பிரிந்து வீட்டுக்கு வந்தவன், அவள் தனித்து வருவதைக் காண ஆயத்தமாக இருந்தான். ''இப்போது அவள் என்னைக் கண்டு கதைத்தால் நண்பர்கள் நம்ப மாட்டார்கள்'' என்ற எண்ணம் வரவே அவளுக்குத் தெரியாதவாறு நின்றான். அவளோ இவனைப் பற்றிக் கவலைப் படாது விறு விறு என்று நடந்தாள்.

மகேந்திரனுக்கு அடுத்த நாளுக்குரிய பாடத்தைச் சரிவரப் படிக்க முடியவில்லை. சரியாக நித்திரையும் வரவில்லை. அவன் கண்முன் சாந்தியே தாண்டவமாடினாள். நாளை அவளுடன் என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகள் அவனைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தன. அவனால் இவற்றிற்கு ஒரு முடிவைக் காண முடியவில்லை. நினைப்பே அவனுக்கு இன்பம் தந்தது. அடிக்கடி அவளைப் பற்றி பலவிதமாக நினைத்துக் கொண்டே இருந்தான்.

அடுத்த நாள் அதிகாலையே எழுந்து நேரத்துக்கு முன்பே பாடசாலைக்குச் சென்று நண்பர்களுடன் சேர்ந்து கொண்டான். நண்பர்களிடம் நடந்ததைக் கூறி பெருமைப் பட்டுக் கொண்டான். அவளுடன் கதைக்கும் சந்தர்ப்பத்தை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மகேந்திரன். மற்ற நண்பர்களும் அதைப் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரையும் படம் எடுக்க எத்தனையோ கண்கள் காத்துக் கொண்டிருந்தன. பரீட்சை முடிவை எதிர்பார்ப்பது போல் மகேந்திரனின் மனம் மட்டும் துடித்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில். அவர்களும் வந்தார்கள். மகேந்திரன் சிறிது தூரம் வந்த தனித்து நின்றான். இவனுக்கு எதிர்ப்பக்கத்தில் வந்த சாந்தி இவனை நெருங்கியதும் பிரிந்து வந்து ஒரு கடித உறையைக் கொடுத்து விட்டு மீண்டும் தன் தோழிகளுடன் சேர்ந்து கொண்டாள். தனிமையில் நின்ற போது மகேந்திரனின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இப்போது மலர்ச்சியுடன் வந்தவன் நண்பர்கள் முன்னிலையில் கடித உறையைப் பிரிக்கப் பயந்தான். அவர்கள் தன்னைக் கேலி செய்வார்களே என்று.

அவனுக்குச் சாதகமாக மணியடிக்கவே எல்லோரும் மண்டபத்தினுள் நுழைந்தார்கள். பரீட்சை ஆரம்பமாக இன்னும் ஐந்து நிமிடங்களே இருந்தன. அவசர அவசரமாகக் கடித உறையைப் பிரித்தான். அவன் கண்களுக்குப் பகலிலும் வெள்ளிகள் தோன்றின. வெள்ளிப் புள்ளிகள் பளிச்சிட்டன. அப்படியே சிலையானான் மகேந்திரன். விடை எழுதும் தாள் தரப்பட்டதும் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு சுக்கு நூறாக இருந்த அறிமுக அட்டையை சரிப்படுத்த முயன்றான். எல்லாத் துண்டுகளும் சரியாகப் பொருத்த முடியவில்லை.

எல்லோருக்கும் கேள்வித் தாள்கள் கொடுக்கப்பட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. மகேந்திரனிடம் வந்த மேற்பார்வையாளர் கேள்வித் தாளைக் கொடுக்கும் போது கிழிந்திருக்கும் அறிமுக அட்டையைக் கண்டதும் அதிகாரியிடம் தெரிவித்தார். மகேந் திரன் மேடைக்கு அழைக்கப்பட்டான். எல்லாக் கண்களும் அவனை நோக்கியே இருந்தன. அவன் மட்டும் கீழே குனிந்து கொண்டிருந்தான்.

''ஐடென்ரிக் காட் எங்கே?'' என்றார் அதிகாரி

மகேந்திரன் எதுவுமே பேசவில்லை. இப்போது மகேந் திரனின் நண்பர்கள் சாந்தியைப் பார்த்தனர். சாந்தியின் தோழிகளுக்கும் அப்போது தான் விசயம் புரிந்தது. வியப்பு ஏற்பட்டது. சாந்தி அதைப் பெற்றுக் கொண்டதும் ஒவ்வொருவரும் ''சாந்திக்கும் மகேந்திரனுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக'' எண்ணிக் கொண்டனர். ஆனால் இப்போ...?

கடித உறையில் அவள் கடிதமும் அறிமுக அட்டையும் கொடுக்கிறாளாக்கும் என்று எண்ணிய நண்பர்களுக்கும் பெரும் வியப்பு ஏற்பட்டது. மீண்டும் அவர் தொடர்ந்து ''எப்படிக் கிழிந் தது? யார் கிழித்தது?'' என்ற பல கேள்விகளைக் கேட்ட போது தான் விசயம் புரிந்தது.

ஒரு பதிலும் கூறமுடியாமல் அவமானத்தால் தலை குனிந்து கொண்டிருந்த மகேந்திரனுக்கு அவர் கேள்விகள் அம்பாய்த் தைத்தன. ''எங்கே அதைப் பார்ப்போம்?'' என்று கூறிவிட்டு அவர் அவன் மேசையை நெருங்கிக் கொண்டிருந்த போது காற்றில் துண்டுகள் பறந்தன.

இந்த நிலையிலும் அவனைப் பரீட்சைக்கு அவர் அனுமதித்தாலும், அவனால் இருப்புக் கொள்ளவில்லை. எப்படி விடை எழுதுவான்? - வெளியே செல்ல அனுமதி கேட்டான். ''அரை மணித்தியாலத்துக்குப் பிறகு தான் வெளியே போகலாம்'' என்று கூறிவிட்டுப் பேசினார் அதிகாரி. மேலும் அவமானத்தால் தலை குனிந்தவன், அரை மணித்தியாலத்துக்கு அப்படியே மேசை மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டிருந் தவன் - எழுந்து வெளியே சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் முடிந்து மாணவ மாணவியர் வெளியேறினர். அன்று யாரும் நடந்த பாடத்தைப் பற்றிப் பேசவில்லை. அவனைப் பற்றியே பேசிக் கொண்டனர். பேசியவர்கள் ஒருவருக்கும் விசயம் தெரியாது. தெரிந்தவர்கள் மகேந்திரனின் நண்பர்களும் சாந்தி குழுவினரும் தான். மகேந்திரனுக்கு ஏற்பட்ட அவமானத்தில் தங்களுக்கும் பங்கு உண்டு என்பது போல் எதுவும் பேசாமல் அவனுடைய நண்பர்களும் வெளியேறினர்.

இதைப்பற்றிப் பேசப் பயந்த சாந்தியின் தோழிகள் வேறேதோவெல்லாம் பேசிக் கொண்டு சென்றனர். என்றாலும் முன்போல் கலகலப்பு அவர்களிடையே காணப்படவில்லை. பேசாவிட்டாலும் அவர்கள் உள்ளம் கூறியது ''சாந்தி இந்தளவுக்குப் போயிருக்கக் கூடாது'' என்பது தான்.

அவன் அவமானப் பட்டதைப் பார்த்தவர்கள் எல்லோரும் கூறிய ஒரே வார்த்தை ''பாவம் மகேந்திரன்'' என்பதுதான். நாமும் அதனையே அவனுக்குக் கூறுவோம். என்றாலும் மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையுமல்லவா? அதில் நமக்குப் பெருமை தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்திரன்
ஏப்ரல் 1971

## 08 சபதம்

தந்தை இறந்து விட்ட சோகம் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்க, அந்த இடத்தைத் தன் படிப்பைத் தொடர இனி வழியில்லையே என்ற கவலை ருத்ராவின் உள்ளத்தை நிறைக்கிறது. அவள் அக்கா சித்ராவும் தன் தங்கையின் படிப்புக்கு என்ன செய்யலாம்? என்ற சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள்...

ருத்ரா படிப்பில் கெட்டிக்காரி. ஆனபடியால் அவளை ஒரு பட்டதாரியாக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார் அவளது தந்தை. அவரது ஆசையை நிறைவேற்றவென்றோ என்னவோ திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. தந்தையின் ஆசையும் அக்காவின் ஊக்கமும் ருத்ராவின் முயற்சியுமாக அவளைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தது. அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

அவள் படிப்பின் தடையாக அவளுடைய தந்தை நோய்வாய்ப் பட்டார். ஆனாலும் அவளுடைய படிப்பு தடைப்படக் கூடாது என்று உழைப்பில்லாத போது வீட்டை அடகு வைத்துப் படிப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கவலைகளோடும் படித்து வந்தாள் ருத்ரா! ஆனால் இந்த நிலையில் திடீரென மறைந்து விட்டார் அவளுடைய தந்தை. ருத்ரா இப்போது இறுதி ஆண்டில் இருக்கிறாள்.

மாதம் ஒன்று மறைந்து விட்டது. பல்கலைக்கழகம் செல்வதை நிறுத்திவிட்டாள் ருத்ரா. தந்தை மறைந்த கவலையை விடுத்துத் தங்கையின் படிப்பைப் பற்றிய கவலையுடன் நின்றாள் சித்ரா. எப்படியாவது தங்கையைப் படிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுள் நிறைந்து நின்றது.

''ருத்ரா நீ நாளையில் இருந்து பல்கலைக்கழகம் செல். எப்படியாவது உன்னைப் படிப்பிக்க வைப்பது என் பொறுப்பு. நீ கவலைப் படாதே'' என்று சித்ரா அவள் நாடியை தாங்கினாள்.

''அக்கா அடுத்த மாதம் பணம் வேண்டுமே...''

''அடுத்த மாதம் தானே அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கவலைப் படாமல் படி..'' என்றாள்.

என்றாலும் அவள் உள்ளமும் வேதனையோடு வேலை செய்யத் தான் செய்தது. எப்படியாவது ஏதாவது தொழில் தேடிக் கொண்டால் தங்கையைப் படிப்பித்து விடலாம் என்ற எண்ணம் அவளுள் எழுந்தது.

'வேலை' அதை எங்குமே காணோம். ஒவ்வொரு நாளும் வீடு திரும்பும் போது சோர்வுடன் தான் வந்து சேர்வாள். அன்று அவள் வரும் போது ஒரு பத்திரிகையும் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். சோர்வினால் அதைப் படிக்க முடியவில்லை.

அடுத்த நாள் காலை பத்திரிகையைப் பிரித்த போது 'தேவை' விளம்பரம் தான் அவள் கண்களில் முதன் முதலில் பட்டது. உடனே பத்திரிகையை வீசி விட்டு புறப்பட்டாள். திருகோணமலையிலே உள்ள மிகப் பெரிய மாடிவீட்டு ஹொட்டலை நோக்கி. இராப் பகல் சேவை செய்யும் ஹொட்டல் அது. 'பெரியவர்கள்' வந்து தங்குவது என்றாலும் கெட்ட நடத்தைக்கும் உரியது என்ற பெயரையும் பெற்றிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அதையெல்லாம் பார்த்தால் தனக்கு வேலை கிடைக்காது. வேலை கிடைக்காவிட்டால் தங்கையைப் படிப்பிக்க முடியாது.

அவள் எண்ணமெல்லாம் எப்படியாவது எங்காவது ஒரு வேலையில் சேர்ந்து விட வேண்டும் என்பது தான்.

முதலாளியைச் சந்தித்த போது ''ஏற்கனவே தெரிந்தாகி விட்டது. வேறு இடம் இல்லை'' என்றார்.

''ஐயா நான் இந்தத் தொழிலைச் செய்து பிழைக்க வேண்டும் என்று வரவில்லை. என் தங்கை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். அவள் படிப்பை முடிப்பதற்கு நான் எப்படியும் ஏதாவது ஒரு தொழில் செய்ய வேண்டி இருக்கிறது. அதனால் தான் ஆவலுடன் இங்கு ஓடி வந்தேன். நீங்கள் கருணை வைத்தால் எங்களுக்கு உதவி புரியலாம்''

அவள் கண்கள் கலங்கின.

''பெண் என்றால் பேயும் இரங்குமாமே'' முதலாளி மட்டும் என்னவாம்? சிறிது சிந்தித்த பின்னர்...

''அப்படியானால்... நாளையிலிருந்து வேலைக்கு வா... இங்குள்ள நிபந்தனைப்படி நடந்து கொள்ள வேண்டும் தெரியுதா?'' என்றார்.

தலையாட்டி விட்டு வீட்டுக்கு வந்தவள் ருத்ராவிடம் ''எனக்கு வேலை கிடைத்துவிட்டது.. ருத்ரா இனி நமக்குக் கவலை இல்லை'' என்றாள்.

ருத்ராவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். எங்கே? என்ன வேலை? என்பதைப் பற்றி அவளும் விசாரிக்காதது நல்லதாகப் போய்விட்டது. ஆனால்...

பல்கலைக்கழக மாணவர்களின் கேலிப் பேச்சிலிருந்து தன் அக்கா வேலை செய்யும் ஹொட்டலை அறிந்த போது ருத்ராவுக்கு வேதனையாகத் தான் இருந்தது. என்றாலும் ''என் அக்கா அப்படி இல்லாமல் இருந்தால் போதும்'' என்ற எண்ணத்தில் பேசாமல் இருந்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை, சித்ரா வழமையாக வரும் நேரமும் கடந்து விட்டது, இன்னமும் காணோம். ருத்ராவுக்கு இருப்புக் கொள்ள வில்லை. எதுவுமே செய்ய முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந் தாள். விளக்கை ஏற்றிவிட்டு, கதவைப் பூட்டிவிட்டு கட்டிலில் விழுந்தாள். '' அக்கா அப்படிப்பட்டவளாக இருப்பாளோ? அது தானோ மாணவர்கள் அப்படிக் கதைக்கிறவர்கள்?''

அவளுக்கு நினைக்கவே பயங்கரமாக இருந்தது. கண்களில் நீர் வழிந்தது. 'என்னால் தன் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறாளோ அக்கா... அக்கா...'' அவளுக்கு வாய் விட்டு அழ வேண்டும் போல் இருந்தது.

அப்போது கதவு தட்டப் படும் சத்தம் கேட்டது. நேரத்தைப் பார்த்தாள். நேரம் இப்போது ஏழு மணியாகியிருந்தது. வந்து கதவைத் திறந்தாள்.

''இந்தா ருத்ரா உனது கட்டணத்துக்கான பணம். முதலாளி வரச் சுணங்கிவிட்டது. அது தான்...'' என்று கூறிக் கொண்டு சென்றாள். ருத்ரா பதிலேதும் கூறாமல் ஒரு மாதிரியாக நிற்பதைப் பார்த்ததும் , ''ஏன் ஒரு மாதிரியாக நிற்கிறாய்? ஏன் உடம்புக்கு ஏதுமா?'' என்று பதறினாள் சித்ரா.

மாணவிகள் கூறியது சரி என்பது போல் அவர்கள் வர்ணித்த சென்ட் வாசனை ருத்ராவின் மூக்கைத் துளைத்தது. சித்ரா சில நேரங்களில் நேரம் கழித்து வருவதும், இதனால் இருக்குமோ?'' என்ற எண்ணம் அவளை ஆட்கொண்டது.

''நீ இப்படிக் கேவலமாக உழைக்கும் பணத்தைக் கொண்டு நான் இனிப் படிக்கப் போவதில்லை. இனி நீ வேலைக்குப் போகவும் வேண்டாம். நேரம் கழித்து வரவும் வேண்டாம்'' என்று அவள் நீட்டிக் கொண்டிருந்த பணத்தை வாங்கி வீசி எறிந் தாள். அவள் கண்கள் பிழம்பாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

ஆடாமல் அசையாமல் இமைக்க மறந்து சிலையாக நின்றிருந்த சித்ரா, ருத்ராவையே பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு நாளும் இல்லாமல் இன்று ஏன் இந்தப் பேச்சு? என்பதுதான் அவளுக்கு விளங்கவில்லை. நீண்ட நேரப் பார்வைக்குப் பின்னர் தலை குனிந்த சித்ராவின் கண்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கண்ணீர் அருவியாக ஓடிக் கொண்டிருந்தது. வீட்டுக்குள் செல்லவே மனம் கூசி அப்படியே நின்று கொண்டிருந்தாள் சித்ரா.

நீண்ட நேரத்தின் பின்னர் அவள் வாயில் இருந்து நடுங்கிய படியே சில சொற்கள் வெளிவந்தன.

''ருத்ரா... நீயும் என்னை அப்படி நினைக்கிறாயா?... சொல் ருத்ரா... உன் அக்காவும் அப்படிப்பட்டவள் என்று நினைக்கிறாயா...? சொல் ருத்ரா...''

அவளுக்கு மீண்டும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அவளை உற்று நோக்கினாள் ருத்ரா...

''அக்கா என்னை மன்னித்து விடு பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் கதைக்கும் பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னால் இருக்க முடியவில்லை''

தங்கையை அணைத்துக் கொண்ட சித்ரா. நீண்ட பெருமூச் சொன்றை விட்டாள்.

''ருத்ரா உன் மீது பொறாமை கொண்டவர்கள் பேச்சு இதெல்லாம். நீ இதற்கெல்லாம் காது கொடுக்காதே..! உனது அக்கா நான். உனது மானம் தான் எனது மானமும். என் மானத்தையும் காப்பாற்றிக் கொண்டே உன்னை ஒரு பட்டதாரியாவே பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரச் செய்வேன். இது உறுதி. என்னை நம்பு ருத்ரா'' என்றவள், ''இந்தா ருத்ரா வரும் போது கடையில் ஒரு சென்ட் போத்தல் உனக்காக வாங்கி வந்தேன். மணத்தை அடித்தப் பார்த்துத் தான் வாங்கினேன் நன்றாக மணக்கிறது' என்றாள் சித்ரா.

அவளுக்குக் கயையடித்துக் கொடுத்தாள் சித்ரா. தன் சபதம் நிறைவேறி தங்கை பட்டம் பெற்று பல்லைக் கழகத்திலிருந்து வெளிவரும் நாளை சித்ரா கண்குளிரப் பார்க்கத் தான் போகிறாள்.

'இந்த அக்காவையா நான் சந்தேகப்பட்டேன்?' என்று கலங்கினாள் ருத்ரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
பெப்ரவரி 1968

## 09 பைத்தியம்

அவள் பைத்தியம் தான். ஆனால் அவளைக் கண்டு அனுதாபப் படுபவர்கள் யாரும் இல்லை. அவள் ஆடும் ஆட்டத்தையும் பாடும் பாட்டையும், அவளுடைய அழகையும் கண்டு களிக்கத் தான் மக்கள் கூடினர். அதுவும் அருகில் நெருங்குபவர் இல்லை. அவள் சில வேளைகளில் கற்களை எடுத்து வீசி எறிந்து விடுவதும் உண்டு. இதனால் பலர் காயப் பட்டும் இருக்கிறார்கள்.

அந்த ஜனவரிக்குத் தான் வேலையில் மாற்றம் பெற்று கல்முனைக்கு வந்திருந்தான் பத்மன் என்னும் பத்மராஜா. அன்று முதன் முதலாக தனது நண்பன் ஒருவனுடன் கடற்கரைக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு பைத்தியம் வீதி ஓரத்தில் நின்று பாடிக் கொண்டிருந்தது.

''அத்தான்... என்னத்தான்... அவர் என்னைத்தான... எப்படிச் சொல்வேனடி...?'' என்று பாடிய பாட்டை இடையில் நிறுத்திவிட்டு அவள் அழத் தொடங்கினாள்.

இதைக் கேட்ட பத்மன் ''என்னவென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம்'' என்று சென்றான். நண்பனோ பழக்கப் பட்டவன் என்பதால் அக்கறை காட்டவில்லை. ''அதொரு பைத்தியம் வா நாம் இந்தப் பக்கமாக கடற்கரைக்குச் செல்வோம்'' என்றான் நண்பன்.

''பார்த்து விட்டுப் போவேமே'' என்றான் பத்மன். அவனுக்கு புதினமாக இருந்தது.

''அதைப் பார்க்கப் போகாதே. அது கல்லால் எறிந்தாலும் எறிந்து விடும்'' என்றான் நண்பன்.

''அதையும் பார்த்து விட்டுத்தான் போவோமே'' என்ற பத்மன் முன்னால் சென்றான்.

அழுது கொண்டிருந்தவள் சிறிது நேரத்தின் பின் நிமிர்ந்தாள். நிமிர்ந்தவள் சிறிது நேரத்தில், நேரே நின்ற பத்மனைப் பார்த்து முறைத்தவாறு எழுந்தாள்.

பின்னர், ''என்னையா ஏமாற்றப் பார்க்கிறே...? எங்க போக இஞ்ச வந்தனீ...?'' என்ற கேள்விகளோடே கையில் இருந்த கல்லை விட்டெறிந்தாள். கூட்டம் உடனே கலைந்தது. கல் பத்மனின் நெற்றியில் பட்டு இரத்தம் கசிந்தது. அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் மெல்ல மெல்ல மாறி திரும்பவும் தான் நின்றிருந்த தென்னைமரத்தின் கீழ் அமர்ந்து கொண்டு அழத் தொடங்கினாள்.

பத்மனுக்கு ஏற்பட்ட காயத்தைப் பார்த்ததும் ''நான் சொன்னேனே கேட்டாயா? பைத்தியங்கள் இருக்கிற இடத்தில நமக்கு என்ன வேலை? வா போய் காயத்துக்கு மருந்து போடுவம்'' என்று கூறிக் கொண்டு அவனை அழைத்துச் சென்றான் நண்பன் ராமு.

''இல்ல ராமு... இதில் ஏதோ இருக்க வேண்டும்... இல்லாவிட்டால் இத்தனை பேருக்கும் இடையில் அவள் ஏன் என்னை முறைத்துப் பார்க்க வேண்டும்? கல்லெறிந்ததைத் தான் விடுவம். இத்தனை பேருக்கும் மத்தியில் என்னை அவள் கேட்ட கேள்வியும் எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்த வயதிலும் இப்படி ஒரு அழகான பெண்ணுக்கு இந்த நிலையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுக்கு ஊர் எது? உற்றார் உறவினர் இல்லையா? '' என்றான் பத்மன்.

''பத்மன் இன்று உனக்கு முதல் நாள் என்ற படியால் புதுமையாக இருக்கிறது. இங்கே கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்தாயே இவங்களுக்கெல்லாம் பழகிப் போச்சு...''

''இவளுக்கு யாரும் இல்லையா?...'' என்று இடைமறித்தான் பத்மன்.

''இல்லாமலென்ன?... இவளும் கல்முனைதான். எங்களுடைய தெருவுக்கு அடுத்த ஒழுங்கையில் அவளுடைய வீடும் இருக்கிறது. ஆனால் இப்போ அங்கே யாரும் இல்லை. இவள் அதே ஒழுங்கையில் இருந்த குமார் என்பவனைக் காதலித்து வந்தாள்.. ஆனால் அவனுக்கு வேலை கிடைத்து கொழும்புக்குப் போனதும் இவளை மறந்து விட்டான். அவன் ஒரு முறை லீவில் வந்த போது இவளுடைய வீட்டார் அவனை மணம் முடிக்கக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவன் இவளுக்கு தன்னை மறந்துவிடும்படி கடிதம் எழுதியிருக்கிறான். கடிதம் கிடைத்த அன்றிலிருந்தே அவள் யாருடனும் பேசாமலும், சாப்பிடாமலும் ஒரு மாதிரியாக இருந்தாளாம். ஆனால் அன்றிலிருந்தே படுத்த படுக்கையாகிவிட்ட அவளுடைய தாயும் இறந்த பிறகு இவளுக்கு பைத்தியம் பிடித்து விட்டது''

''தகப்பன் இல்லையா?''

''அந்தாள் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந் திருக்குமா? அவர் இவளை விட்டிருப்பாரா? தகப்பன் இல்லாத குடும்பங்களில் தானே இப்படியான சீர்கேடெல்லாம் நடக்கிறது.''

''யாரவன் குமார்?''

''அவனும் எனக்கு ஒரு காலத்தில நண்பனாக இருந்தவன் தான். சாயலும் உன்னைப் போலத்ததான். மெல்லிய நீண்ட சரீரம்...''

''அப்படியென்றால்.. இப்போ...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதெல்லாம் மறந்து போச்சு... முதல் அவனும் நானும் நட்பாக இருக்கும் போது தினமும் இப்படிக் கடற்கரைக்கு வருவது வழக்கம். சொந்த விசயம், ஊர் விசயம் எல்லாம் அலசி ஆராய்வது தான் எங்கள் வேலை. அப்போது அவன் இவள் வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தான். ஒரு நாள் நான் இவனுடைய திருமணத்தைப் பற்றிக் கேட்டேன்''

''அதைப் பற்றி இப்போ ஏன் கதைப்பான்? வேலை வந்ததும் பார்ப்போம்'' என்றான்.

''வேலை கிடைத்தாலும் இவளைத்தான் கட்டிக் கொள்வாயா? என்று தான் கேட்கிறேன்'' என்றேன்.

''யாரை ரதினியையா? அது கிடைக்கும் வேலையைப் பொறுத்தது...'' என்றான்.

''என்ன?'' என்றேன் வியப்புடன்.

இருவரும் கதைத்துக் கொண்டே வீட்டுக்கு வந்து மருந்து போட்டுக் கொண்டு மீண்டும் வெளியே புறப்பட்டனர்.

''அதற்கு என்ன சொன்னான்?'' என்றான் பத்மன் ஆவலுடன்.

''அவன் பதிலைக் கேட்டு நானும் அசந்து போனேன். ஆனால் உண்மையாகவும் சர்வ சாதாரணமாகவும் சொன்னான். 'வேலைக்குத் தகுந்த மாதிரி மனைவியும் அமைந்திருக்க வேண்டும். நான் இப்போது கூட நேர்முகப் பரீட்சைக்குச் சென்று வந்துள்ளேன். அந்த வேலை கிடைத்தால் ரதினியை நினைத்தும் பார்க்க முடியாது. ஏனென்றால் இந்த வேலை கிடைத்தால் நான் எப்போதும் கொழும்பில் தான் இருக்க வேண்டி நேரிடும்.. கொழும்பில் வாழ்க்கை நடத்த ரதினியால் முடியாது. இவளென்ன 5ஆம் வகுப்புத் தானே படித்தது இருக்கிறாள். இங்கிலீஷ் பேசத் தெரியாது. முறையாக, நாகரிகமான உடுப்பு உடுக்கத் தெரியாது. கொழும்பில் இருந் தால் சோசியலாகப் பழக வேண்டும். 'கொக்ரெயில்' பாட்டிக் கெல்லாம் போய்வர வேண்டியிருக்கும். மற்ற இடங்களுக்கும் ஹொட்டல்களுக்கும் போக வேணும். இவளோட என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மானம் தான் போகும்'' என்றானே பார்க்க வேண்டும் '' என்றான் ராமு.

''அப்படியென்றால் அதற்குத் தகுந்த மாதிரி நீ இவளை இப்போதிருந்தே பழக்கி எடுத்துக் கொள் என்றேன்''

''அதெல்லாம் நடக்காத விஷயம் பட்டிக் காடு எப்போதும் பட்டிக் காடாகத் தான் இருக்கும். ஒரு வேளை இந்த வேலை கிடைக்காமல் இருந்தால் நான் இவளைக் கைவிட மாட்டேன். இங்கே வேலை கிடைத்தால் இவளுடன் இருப்பேன்'' என்றான்

''இந்த எண்ணத்துடன் நீ அவளிடம் சென்று வருவது நல்லதில்லை அல்லவா?'' என்றேன்.

''என்ன செய்வது பழகிவிட்டது'' என்றான்.

''இதன் பின் அவன் எதிர்பார்த்தது போல் அவனுக்கு கொழும்பு வேலையே கிடைத்தும் விட்டது. அந்த நேரத்தில் நான் இவனுடன் வாதாடினேன். ''நீ ரதினியை மறந்து விடுவது தவறு என்று, அவன் என்னையும் மறந்து விட்டான். ஏன்? இந்த ஊரையும் மறந்து விட்டான். ஒரு வருஷத்துக்குப் பிறகு ஒரு நாள் அவன் வந்திருந்த போது ரதினியை மணக்கும் படி கேட்டார்கள். நானும் கூறினேன். ஆனால் அவன் ரதினியை பைத்தியமாக்கி விட்டுச் சென்று விட்டான்'' என்றான் ராமு.

''பாவம் ரதினி அவளுக்கு உற்றார் உறவினர் யாருமில்லையா?'' என்றான் நண்பன்.

''நெருங்கிய உறவினர் யாருமில்லை. என்றாலும் இருக்கும் தூரத்து உறவினர்களும் இவளைக் கவனிப்பதில்லை. பசி எடுக்கும் போது சில வீடுகளுக்குச் சென்று இருப்பாளாம். அந்த நேரத்தில் ஏதாவது அவர்கள் கொடுத்தால் சாப்பிட்டு விட்டுச் செல்வாளாம்... அவ்வளவுதான்''

பேசிக் கொண்டு வந்த ராமு, பத்மன் தனது பேச்சைக் கேட்காமல் வருவதைக் கவனித்து விட்டு ''என்ன பத்மன் ஏதோ சிந்தனையில் மூழ்கி விட்டாய் போல..'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்றுமில்லை நீ கூறிய குமாரைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டு வருகிறேன். எப்படிப்பட்ட மனிதர்கள்? வேலையில் லாமல் இருக்கும் போது ஒரு காதல் - அது எப்படி இருந்தாலும் பரவாயில்லை. வேலை கிடைத்தவுடன் தரமான பெண்ணைக் கட்டிக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் மனிதர்கள் இருக்கிறார்களே! சே... என்ன உலகம்?'' என்றான் பத்மன்.

''நடந்தது நடந்து முடிந்து விட்டது இனி அதைப் பற்றி நாம் கதைத்து என்ன பயன்?''

இவ்வாறு அவர்கள் கதை எங்கெல்லாமோ சென்றது. ஆனால் பத்மனின் உள்ளத்தில் ரதினியே வட்டமிட்டுக் கொண்டிருந்தாள். அவன் தனக்குள் ஏதோவெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தான். அதே வேளை ராமு சொன்னதையும் கேட்டுக் கொண்டிருந்தான் மாலையாகியதும் இருவரும் புறப்பட்டுச் சென்றனர். அன்று இரவு முழுவதும் பத்மனுக்கு சரிவரத் தூங்க முடியவில்லை என்று கூறலாம்.

அடுத்த நாள் எழுந்த போது திடமான முடிவுடன் தான் எழுந் திருந்தான். அன்றிருந்தே தனது திட்டங்களைச் செயற்படுத்தத் தொடங்கினான். அங்கொடை மருத்துவமனையில் தனக்குத் தெரிந்த வைத்தியர் ஒருவர் இருந்தார் அவருடன் கதைத்த போது அவர் ஒத்துழைப்புத் தருவதாகக் கூறினார். முதலில் ரதினியை அங்கு அனுப்புவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தான்.

அதில் வெற்றியும் கிடைத்தது. அவளை அங்கு கொண்டு சேர்த்து விட்டு வந்தான். அதில் தன்னையே பாதுகாவலனாய் பதிந்து. பார்ப்பதற்கும் ஒரு பெண்ணையும் நியமித்து விட்டு வந் தான். ஒவ்வொரு மாதமும் அவளைச் சென்று பார்த்து வரும் கடமையையும் மேற்கொண்டான்.

ரதினியைப் பார்க்கும் போது பத்மனுக்கு பரிதாபமாக இருக்கும். கண்கள் கலங்கும். ஆனால் அவளோ இவனை முறைத்துப் பார்த்துக் கொண்டே இருப்பாள். அவனுக்கு ஏசவும் செய்தாள். இதைப் பற்றி எல்லாம் அவன் கவலைப் பட்டதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதங்கள் செல்ல டாக்டர்களின் நம்பிக்கை பத்மன் முன்னே நீண்ட பரந்த பாதையைக் காட்டிற்று. சூரியன் உதயமாவது போன்றொரு பிரமை எப்போதும் அவனை ஆட் கொண்டிருந்தது. இப்போதெல்லாம் பத்மன் சென்றால், ரதினி முறைத்துப் பார்ப்பதில்லை. ஏசுவதும் இல்லை. சில நேரங்களில் மவுனமாக, அலட்சியமாகப் பார்ப்பாள். சில நேரங்களில் தலையைத் தூங்கப் போட்டுக் கொண்டு அழுவாள். அவன் ஆறுதல் கூறுவான்.

மாதங்கள் பல கடந்தன.

ரதினி குணமடைந்ததும் பத்மனின் கையில் ஒப்படைக்கப் பட்டாள். சுத்தப்படுத்தி வர்ணம் பூசி வைத்திருந்த அவளுடைய வீட்டிற்கே அவளை அழைத்து வந்தான். அவளை பைத்தியம் என்று ஏளனம் செய்த சனம் கூட்டம் கூட்டமாக இப்போது அவளைப் பார்க்க வந்து சென்று கொண்டிருந்தார்கள்.

அவள் அடிக்கடி அழுது கொண்டிருந்தாள்.

''ரதினி நீ இனிமேல் அழக் கூடாது. உன் வாழ்வை மலர வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இத்தனை முயற்சி யும் செய்தேன். உன் சம்மதத்தை எனக்கு தருவாயானால் நானே உன்னை மணந்து கொள்ளக் காத்திருக்கிறேன். உனக்கு விரைவில் மணம் முடித்து வைக்க வேண்டும் என்பது டாக்டர்களின் அபிப்பிராயமும் கூட''

''நீங்கள்...''

''நான் யாரோ...எவரோ... என்று தானே பயப்படுகிறாய்...''

''இல்லை... இல்லை... நீங்கள் என் தெய்வம்...'' என்று அவன் கால்களில் விழப்போன அவளைப் பிடித்து நிறுத்தினான்.

''நீங்கள்... இந்தப் பைத்தியத்தை மனதார விரும்புகிறீர்களா...?''

''ரதினி இனிமேல் நீ பைத்தியம் என்ற சொல்லையே பாவிக்கக் கூடாது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் பைத்தியம் எப்படியும் பைத்தியம் தானே...''

''ரதினி நான் உன்னை மணந்து கொள்ள விரும்புவது மட்டுமல்ல.. பெருமையுமடைகிறேன். உனக்கு ஒரு பாதுகாப்பும் தேவை... அதுதான்...''

''உண்மையாகவா?....''

''என்னை நம்பு ரதினி...''

''அத்தான் நான் பைத்தியம், பைத்தியம் தானே..'' என்று அவன் மார்பில் சாய்கிறாள். அவனும் அணைத்துக் கொள்கிறான். அவளுடைய கண்ணீர் அவன் நெஞ்சை நனைக்கிறது.

''போடி பைத்தியமே..'' என்று சொல்ல வந்ததை அப்படியே நிறுத்தினான் பத்மன். அவன் கண்களும் பனித்தன.

''அத்தான் உங்களைப் போல் ஆண்கள் பலர் தோன்றினால் சீரழிந்த பெண் சமூகத்தை இந்த உலகில் பார்க்கவே முடியாது'' என்றாள்.

''உண்மைதான். அந்தக் காலமும் வெகு தூரத்தில் இல்லை ரதினி''

அணைப்பு இறுகியது. அமைதி நீடிக்கிறது.

காலையில் செங்கதிரோன் விசேசமாக சிறப்பாக உதயமாகிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
ஏப்ரல்1969

# 10 ஏழையின் நெஞ்சம்

ஜெயந்தியும் ரதினியும் பாடசாலைத் தோழிகள். அவர்கள் ஒருவருக் கொருவர் நெருங்கிப் பழகித் தங்கள் அன்பை வளர்த்துக் கொண்டார்கள். ஜெயந்தி பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அதனால் அவளுடன் பிள்ளைகள் எல்லோரும் நெருங்கிப் பழகுவதில்லை. எப்படியோ ஜெயந்தி மட்டும் அவளுடன் நெருங்கிப் பழகினாள்.

ரதினியிடம் இருந்த அன்பும் நேர்மையும் அடக்கமும் அமைதியும் எவரையும் எளிதில் கவர்ந்துவிடும். அவள் ஏழை என்பதைத் தவிர வேறு எந்தக் குறையும் இல்லை. அழகும் நிறைந் தவள் ரதினி. உள்ள இரண்டு சட்டைகளை மாறி மாறிக் கழுவிப் போட்டுக் கொண்டு பாடசாலைக்கு சென்று வந்தாள். ஜெயந்தியும் ரதினியும் ஒரே வகுப்பில் படிப்பதுடன் ஒரே வீதியிலும் வசித்து வந்தனர். ஆனால் இருவர் வீட்டுக்கும் நீண்ட இடைவெளி இருந்தது.

ரதினியிடம் வீட்டில் விளையாடுவதற்கு என்று எதுவும் இல்லை ஆதலால் வீட்டு வேலைக்குத் தாயாருடன் ஒத்துழைத்து விட்டுப் படிப்பில் மூழ்கிவிடுவாள். ஜெயந்தியிடமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான விளையாட்டுச் சாமான்கள் இருந்தன. ஜெயந்தியின் வேண்டுகோளின் பேரில் ரதினி அவள் வீட்டுக்கு விடுதலை நாள்களில் சென்று விளையாடுவது வழக்கம். அவளிடம் ஓடும் பொம்மைக் கார், சிறிய பைசிக்கள் , பொம்மைகள், என்று ஏராளமான சாமான்கள் உண்டு. இரண்டு பேரும் சேர்ந்து விளையாடுவார்கள். மாலை இருட்ட முதல் 'அம்மா தேடுவா' என்று கூறிச் சென்று விடுவாள். அதுவும் தன் வீட்டில் வேலை இருக்கும் நாள்களில் வரமாட்டாள்.

அப்போது பாடசாலைகளுக்கு சித்திரை விடுமுறை கொடுத்திருந்த சமயம். ரதினி அதிகமாக விளையாடச் செல்லாமல் தோட்ட வேலையிலும், வீட்டு வேலையிலும் படிப்பிலும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தாள். எப்போதாவது ஒருநாள் ஜெயந்தியுடன் விளையாடச் செல்வாள்.

அன்று பக்கத்துக் கடையில் லாம்பெண்ணை இல்லாமல் போகவே ரதினி தொலைவிலுள்ள கடை நோக்கிப் போத்தலுடன் சென்று கொண்டிருந்தாள். ரதினி தங்கள் வீட்டைக் கடந்து செல்வதைக் கண்ட ஜெயந்தி ஓடி வந்து ''ரதினி'' என்று கூவினாள்.

ஆடம்பரமான உடையுடன் நின்றிருந்த ஜெயந்தியின் அருகே வந்தாள் ரதினி.

''என்ன ரதினி நீ இப்போதெல்லாம் விளையாட வருவதே இல்லை? இப்போது விடுமுறைதானே அடிக்கடி வரலாமே?'' என்றாள் ஜெயந்தி

''அம்மாவுக்குச் சுகமில்லை ஜெயந்தி. வீட்டு வேலைகளை நானே கவனிக்க வேண்டி இருக்கிறது'' என்றாள் ரதினி.

''பூ இவ பெரிய அம்மா. ... எங்கம்மவுக்குச் சுகமில்லாவிட்டால் நானா சமைக்கிறேன்... நானா வேலை செய்கிறேன்?'' என்றாள் ஜெயந்தி. அவளுடைய வீட்டில் எத்தனையோ வேலையாட்கள் இருக்கிறார்கள் அது போல் எண்ணி விட்டாள் ரதினியின் வீட்டையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயந்தியின் பேச்சைக் கேட்ட ரதினி பெரிய மனுஷி போல ஒரு அலட்சியச் சிரிப்புச் சிரித்துக் கொண்டாள்.

''ஆ.. மறந்தே போயிட்டேன் ரதினி.. சித்திரை வருஷம் வருகிறதல்லவா? அதற்கு எனக்கு எவ்வளவு அழகான உடுப்புகள் எடுத்திருக்கிறார்கள் தெரியுமா? உனக்குத் தான் உங்க அம்மா அப்பா ஒன்றும் எடுத்துத் தரமாட்டாங்களே... வா எண்ட உடுப்புகளைக் காட்டுகிறேன்'' என்றாள் ஜெயந்தி.

''கொஞ்சம் பொறு ஜெயந்தி... கடைக்குப் போய் லாம்பெண்ணை ஒரு போத்தல் வாங்கிட்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு நடந்தாள் ரதினி.

சித்திரை வருஷப் பிறப்பை நினைக்க அவளுக்கு துக்கமாகத் தான் இருந்தது. வழமையாக அவள் துக்கப்படுவது கிடையாது. அவளுடைய வீட்டு நிலவரம் அவளுக்குத் தெரியும். அவர்களுக்கு எல்லா நாளும் ஒரே மாதிரித்தான். அவளுக்குத் தெரியும் பள்ளிக் கூட 'யூனிபோம்' வாங்கித் தரவே தாய் தந் தையர் படும் கஷ்டம். ஜெயந்தி கூறியதைக் கேட்டதும் ஏற்பட்ட சலனம் இது. ஒரு கணம் தன்னை மறந்து விட்டாள். கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு கடைக்குச் சென்றாள்.

ரதினி கடைக்குச் சென்று திரும்பி வரும்வரை ஜெயந்தி வீட்டு வாசலிலே காத்திருந்தாள். எங்கே ரதினி வராமல் போய்விடுவாளோ. தன் உடுப்புக்களைக் காட்ட முடியாமல் போய்விடுமோ என்று தான் வழி மேல் விழி வைத்துக் காத்திருந் தாள்.

ரதினி வந்ததும் ஒரே ஓட்டமாக ஓடிச் சென்று தனது உடுப்புகளுடன் தனது அக்கா அண்ணா தம்பி தங்கை எல்லோருடைய உடுப்புக்களையும் அள்ளிக் கொணர்ந்து காட்டினாள். தனக்கு வாங்கியிருந்த இரு சட்டைகளையும் மாறி மாறிப் போட்டுக் காட்டினாள்.

ரதினி ''நல்லாயிருக்கிறது ஜெயந்தி'' என்றதும் அவளுடைய தலையில் பூ பூத்தது போன்றிருந்தது. அவள் உடுப்புக்களை அள்ளிக் கொண்டு வீட்டுக்குள் சென்று விட்டாள். ரதினியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை பெற்றுக் கொண்டு தன் வீட்டுக்கு திரும்பி விட்டாள்.

வருஷப் பிறப்பு எப்போது என்று ரதினிக்குத் தெரியாது. அது அவளுக்கு ஒரு விசேசமான நாள் என்றால்லல்லவோ தெரியும். அன்று அவள் தன் பாட்டில் தங்கள் வீட்டு முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது வாசலில் ஜெயந்தியும் அவளுடைய தாயாரும் வந்து நிற்க ரதினி ஓடிச் சென்று ''வா.. ஜெயந்தி வா... என்ன இன்று எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறாய்?'' என்றாள்.

அவள் கூறியது தான் தாமதம், ''வந்ததிருக்கட்டும் நீ எடுத்து வந்த ஜெயந்தியின் சட்டையைக் கொண்டு வா... நாங்க உங்கட வீட்டுக்கு விருந்துக்கு வரல்ல'' என்றார் ஜெயந்தியின் தாயார்

''ரதினி அண்டைக்கு உனக்குக் காட்டின சட்டையில் ஒண்டைக் காணல்ல... உனக்குத் தான் காட்டினன். அதுக்குப் பிறகு அந்தச் சட்டையைக் காணல்ல... நீதான் எடுத்து வந்திருக்க வேணும்... தந்துவிடு அம்மா அப்பா எல்லாம் எனக்குத் தான் அடிக்கிறாங்க...'' என்றாள் ஜெயந்தி.

''ஐயோ ஜெயந்தி எனக்குக் காட்டிவிட்டு நீதான் எடுத்துக் கொண்டு சென்றாயே... இப்போது என்னிடம் கேட்டால் எனக்கென்ன தெரியும்? சத்தியமாய்ச் சொல்லுறன் நான் எடுக்கவே இல்லை...''

''ஏனடி பொய் சொல்லுகிறாய்? போட்டுக்க சட்டை இல்லை என்றால் வீட்டுக்கா வந்து களவெடுக்கிறது? இதுக்குத் தான் சொல்லுற நான் இந்த ஏழைகளோட இவளைக் கூட்டு வைக்க வேணாம் என்று. இவள் கேட்டால் தானே. இப்பத் தான் தெரியுது அவட தோழியின் நடப்பு''

சத்தம் கேட்டு வெளியில் வந்த ரதினியின் தாய் வியந்து போய் நின்றாள். ஜெயந்தியின் தாயின் பேச்சைக் கேட்க அவளுக்கு பற்றி எரிந்தது. தனது மகளுக்கு இப்படி அபாண்டமாக பொய்சொல்லி கள்ளிப் பட்டம் கட்டுகிறார்களே என்று, பாய்ந்து வந்தவள் ரதினியைப் பிடித்து அடித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன்டி நீ களவெடுத்தது உண்மைதானா? இதற்குத் தானா அவங்கட வீட்ட போய் வாற நீ? நீ இப்படி எத்தனை இடத்தில களவெடுத்திருக்கிறாய்? எங்கே எடுத்து வா சட்டையை. கொண்டு வந்து கொடுத்து விடு...'' என்று ஆவேசம் கொண்டவளாய் ரதினியை அடித்தாள்.

''இல்லையம்மா... நான் எடுக்கவில்லையம்மா...'' என்று கேவிக் கேவி அழுதாள் ரதினி.

''ஓ... அவள் எடுத்து வந்த சட்டையை ஒளித்து வைச்சுப் போட்டு இப்ப எங்களுக்கு வேசம் போடுறாளுகள்... இனி யெங்க சட்டை கிடைக்கப் போகுது?.... இந்தக் கள்ளியோட நீ பேசிப் பார் உண்ட முதுகுத் தோலை உரிச்சுப் போடுவன்'' என்று கூறிக் கொண்டு தன் மகளை கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள் ரதினியின் தாயார்.

ரதினி தனக்கு ஏற்பட்ட கதியை நினைத்து நினைத்து அன்று நாள் முழுவதும் அழுதாள். அந்த ஏழை நெஞ்சத்தால் அதை மறந்து இருக்கவே முடியவில்லை. அன்று வருஷப்பிறப்பு என்பது கூட வீதியால் போனவர்களைக் கண்டு தான் தெரிந்து கொண்டாள். அடுத்த நாள் கடைக்குச் செல்லும் பொழுது ஜெயந்தியைக் கண்டு உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள். அடுத்த நாள் சென்று ஜெயந்தியின் வீட்டு வாசலில் நின்றாள்.

ரதினியைக் கண்டது தான் தாமதம் ஜெயந்தி ஓடிச் சென்று ''அம்மா.. அம்மா அந்தக் கள்ளி ரதினி வந்திருக்கிறாள்'' என்று கூறிவிட்டு ஓடிவந்து ரதினிக்கு அடித்தாள்.

''கள்ளி இன்னும் என்னத்துக்கு வந்திருக்கிறாய்? கள்ளி ஓடு... ஓடுடி..'' என்று விரட்டினாள்.

'கேற்' றடியில் நின்ற ரதினி ''ஜெயந்தி உண்மையாகச் சொல்லுறன்.. சத்தியமாக நான் உன்னுடைய சட்டையை எடுக்கல்ல. நீ வீட்டில தேடிப் பார். சட்டை இங்குதான் இருக்கும். என்னைக் கள்ளி என்று மட்டும் சொல்லாத...'' என்று அழுதாள் ரதினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரியான கள்ளி இவள்.. இப்படி இன்னும் என்னுடைய சாமான்கள் எதை எதை எடுத்துப் போனாளோ தெரியல்ல...'' என்றாள் ஜெயந்தி.

ஜெயந்தி என்றாவது உண்மையை உணர்ந்து கொள்வாள். அந்த நாளும் வரும். அப்போது எண்ணி வருந்துவாள் என்று எண்ணிக் கொண்டு சென்று விட்டாள் ரதினி. அந்த ஏழையின் நெஞ்சம் அமைதி பெறவில்லை. தான் செய்யாத ஒரு காரியத்துக்காக தன்னைக் கள்ளி என்று கூறுவதை அவள் எவ்வாறு பொறுத்துக் கொள்வாள்? தனக்கு நேர்ந்த கதியைக் கடவுளிடம் கூறி அழுதாள்.

நாள்கள் பல கடந்து இருந்தன. அன்று மீண்டும் ஜெயந்தியும் அவளுடைய தாயும் ரதினியின் வீட்டுக்கு முன்னால் வந்திருந் தனர். இவர்களைக் கண்ட ரதினி இன்னும் எதைக் காணவில்லை என்று கூறப் போகிறார்களோ என்று எண்ணிப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள்.

''ரதினி ரதினி இஞ்ச வாவன்... காணாமல் போன சட்டை கிடைத்திருக்கிறது... அது மாமாவுக்கு அனுப்பிய பார்சலுடன் தவறிப் போய் இருக்கிறது. மாமா இன்று தான் திருப்பி அனுப்பியிருந்தார். உன்னைக் கள்ளி என்றதுக்கு என்னை மன்னிச்சுக் கொள் ரதினி. இந்தா இந்தச் சட்டையை அம்மா உனக்குப் பரிசாகக் கொடுக்கச் சொன்னா'' என்று கூறிக் கொடுத்தாள் ஜெயந்தி.

''எனக்கு வேண்டாம் ஜெயந்தி நீ உண்மையை அறிந்ததே போதும். இப்போது தான் எனக்கு நிம்மதி. ஆராய்ந்து பாராமல் ஒன்றையும் சொல்லக் கூடாது ஜெயந்தி...'' என்றாள் ரதினி.

''இல்ல ரதினி நாங்க செய்த தவறுக்குத் தான் மன்னிப்புக் கேட்கிறோமே... கோபம் இல்லாமல் இதைப் பெற்றுக் கொள்ளம்மா... இதை மனசில வைச்சுக்காம வழமை போல் வந்து ஜெயந்தியோட விளையாடிப் போம்மா...'' என்றார் ஜெயந்தியின் தாயார்.

''வேண்டாம்மா... நீங்க இதைத் தர... நான் போட்டுப் போக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் நான் களவெடுத்த சட்டை என்று ஊரார் சொல்லு வாங்க...'' என்றாள் ரதினி.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ரதினியின் தாய், ''பெரிய வங்க சொல்லுறதைக் கேள் மகள். அவங்க தான் சொல்லு றாங்களே வாங்கிக்கோ'' என்றாள் ஆனந்தக் கண்ணீருடன். அவளுடைய களங்கம் தான் தீர்ந்து விட்டதே.

ரதினி அதை வாங்கியதும் தான் அவர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள். ரதினி - ஜெயந்தி உறவு மீண்டும் வலுவடைந்தது. நட்பு வளர்ந்தது.

தவறு செய்வது மனித இயல்பு, ஆனால் அதை அறியும் போது திருத்தி மன்னிப்புக் கோருவதே சிறந்த பண்பு.

உண்மையே பேசு! நன்மையே பெறுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
செப்டம்பர்1968

## 11 நீ இல்லாத உலகத்திலே

"என்ன மச்சாள் உண்ட மருமகள் மோசமாப் போறாப் போல...?"

" ஓம் மச்சாள் நானும் அதைத்தான் யோசிச்சித்து இருக்கிறன். என்ன மாதிரி இருந்தவள் எப்படி மாறிப் போயிட்டாள்? புலி பதுங்கிறது பாயிறதுக் குத்தானே?"

"எண்டாலும் நான் நினைக்கல்ல உன்ர மருமகள் இப்படி நடப்பாள் எண்டு. அவள் இருந்த இருப்பு இந்தப் பூனையும் பால்குடிக்குமா? என்றிருந்தது"

" நீ மட்டுமென்ன? ஆருதான் நினைச்சு இருப் பாங்க இப்படி நடக்கும் என்று?"

"ஆனா இப்ப போற போக்கப் பார்த்தா... எவனோ ஒருத்தனைக் கூட்டி வந்தாலும் வருவாள்... ஓ... சொல்லிப் போட்டன் கொஞ்சம் கவனமாக இருக்க வேணும் கண்டியோ...?

"நான் என்னத்தடி செய்யட்டும். நான் தானே அவளைச் சொல்லிச் சொல்லி பழுதாக்கிப் போட்டன்..."

"என்னத்தைச் செய்யிறதா? காலை முறிச்சு மூலைக்க போடு..."

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மேல் சரோஜாவால் அவர்களுடைய சம்பாசனையை செவிமடுக்க முடியவில்லை. அழுதாள் சரோஜா. அழுது கொண்டே இருந்தாள்.

''பெரியோர்களால்'' நிச்சயிக்கப் பட்டு முடிந்த திருமணம் தான் சரோஜா-சரவணன் சோடிகளின் திருமணம். சரியான சோடி - சாடிக்கேற்ற மூடி என்றுதான் ஊரே பேசிக் கொண்டது. அந்தளவுக்கு நிறைந்த ஒற்றுமையுடன் இன்பமான, அமைதியான வாழ்க்கை நடத்தினார்கள். அவர்கள் குடும்பம் நடத்துவதைப் பார்ப்பவர்களே இன்பம் அடைந்தார்கள் என்றால்...? அவர்களைச் சொல்லவும் வேண்டுமா?

இன்பமான அவர்கள் வாழ்விலும் துன்பம் என்னும் இருள் மெல்லவே சூழத் தொடங்கியது. ஆமாம்! பிள்ளையில்லாக் குறை அவர்களை வாட்டத் தொடங்கியது. வருடங்கள் செல்லச் செல்ல அதுவும் கூடியது. ஆனால் அன்பும் பண்பும் நிறைந்த சரோஜா தன் செய்கையாலும் பேச்சாலும் சரவணனை அந்தக் கவலையை மறக்கும் படி செய்து வந்தாள்.

சரவணன் இல்லாமல் அவள் எங்கும் வெளியே செல்வது கிடையாது. அவன் வரும்வரை சாப்பிடுவதும் கிடையாது. சரவணன் வந்ததும் சிரித்த முகத்துடன் வரவேற்பாள். எந்தப் பெரிய கவலையுடன் வந்தாலும் சரோஜாவைக் கண்டதும் சூரியன் முன் பனிபோல் அது மறைந்து விடும். பெண்களே அவள் அழகைப் பற்றிப் பெருமையுடன் பேசிக் கொள்வார்கள். சரவணன் அதற்கு விதிவிலக்கா?

சில வேளைகளில் சரவணன் அவள் அழகைப் பற்றிப் பேசினால் ''என்னத்தான் இல்லாததையெல்லாம் சொல்லி வீணாக வர்ணிக்கிறீர்கள்? இன்று நீங்கள் சுயநினைவில் இல்லையா?'' என்று கேலியாகவும் அர்த்தத்துடனும் பேசி அவனை மடக்கி விடுவாள்.

''ஏன் நான் என் பெண்டாட்டியின் அழகைப் பற்றி வர்ணிக்கக் கூடாதா?'' என்றதும் அவளுக்கு நாணம் வந்துவிடும்.

இப்படிப்பட்டவளை மருமகளாப் பெற்ற மாமியார் அடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்கு அளவே இல்லை. அவளை ஒரு இளவரசி போலத் தான் கவனித்து வந்தார். சரோஜா சும்மா வீட்டில் சந்தோச மாக நடமாடித் திரிந்தால் போதும் என்பதே மாமியாரின் விருப்பம். மற்றும் படி வேலைகள் எல்லாம் மாமியாரின் கைப்பொறுப்பு. மாமியார் எங்காவது சென்றிருக்கும் நேரத்தில் சரோஜா ஏதாவது வேலை செய்தால் தான் உண்டு. இல்லையென்று மாமியார் இருக்கும் நேரத்தில் சரோஜா வீடு வாசல் பெருக்கத் தொடங்கினால், ''ஏன்பிள்ள உனக்கு கையக்கால வைச்சுக் கொண்டு சும்மா இருக்க ஏலாதா? இஞ்ச கொண்டுவா தும்புத்தடியை'' என்று பிடுங்கி எடுத்திடுவா.

இவர்கள் இன்பத்துக்கு எல்லையாக அமையத்தான் போலும் சரவணனுக்கு நெருப்புக் காய்ச்சல் வந்தது. மூன்று மாதமாக பெரிய பெரிய வைத்தியர்களிடம் எல்லாம் கொண்டு வைத்தியம் செய்தார்கள். ஆனால் பலன் தான் பூச்சியம். காலனின் கட்டளைக்கு அடிபணிந்து அவன் உயிர் பிரிந்தது.

அப்போது சரோஜா நடந்து கொண்ட விதத்தில் அவளுக்கு அவனின் பிரிவால் சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டது என்றுதான் பலரும் எண்ணினர்.

''இந்த வயதில் உனக்கு இந்தக் கதியா?'' என்று வருந்தாதவர் இல்லை எனலாம்.

யாருடனும் பேசாமல் நேரகாலத்துக்கு உணவருந்தாமல், காலையில் எழுந்து குளித்துவிட்டு சரவணனின் படத்துக்கு மலர்கள் சாத்திவிட்டு, அதைப் பார்த்தபடியே இருந்தாள். நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தாள். எங்கிருந்து தான் அந்தளவு கண்ணீர் வருகிறது என்று பார்ப்பவர் வியப்பர். மூன்று மாதங்கள் மறைந்த பின்னர் தான் அவள் நிலையில் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்பட்டது.

எத்தனை பேர் எப்படி யெல்லாம் வாய் நோகச் சொல்லியி ருப்பார்கள்? ஆனால் அவள் யாருடைய சொல்லையும் இந்த விடயத்தில் மதிப்பதில்லை. மாமியார் கூட ''ஏன் பிள்ள நெடுகிலும் இப்படி அழுது கொண்டு இருக்கிறாய்? எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதித்தபடி தான் நடக்கும். அதுக்கு அழுது புலம்பி என்ன செய்யிறது? ஒரே இப்படி இராமல் பக்கத்து வீட்டுக் கென்றாலும் போய் கதைச்சித்து இரு பிள்ள. அதுகளோட கூடிக் கதைச்சா உண்ட துக்கமும் மாறும்'' என்று ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை மாமியார் சொல்லாமலில்லை. ஆனால் சரோஜா...?

பூச்சூடாமல் பொட்டிடாமல், வெண்ணிற ஆடையுடன் வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடந்தாள். ஒன்றிரண்டு மாதங்க ளல்ல ஒரு வருடம் இப்படி இருந்தாள்.

ஒரு வருடம் கடந்தது. அப்போது தான் தன் ஒருத்திக்காக அந்த ஊரே கவலைப்படுவதை அவளால் உணரமுடிந்தது. அதிலும் தன் மாமியாரும் அடுத்த வீட்டுச் சொந்தமும் அடிக்கடி அதையும் இதையும் கூறிக் கொண்டு தன்னைத் தொல்லைப் படுத்துவதை உணரத் தலைப்பட்டாள்.

இத்தனை பேரும் வருந்துவதற்கு தான் ஒருத்தி காரணமாக இருக்கக் கூடாது. அவர்கள் சந்தோசமாக இருப்பதற்காவது தான் மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்க வேண்டும். அல்லது இருப்பது போலாவது காட்டிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினாள்.

பக்கத்து வீட்டு பரிமளா சரோஜாவை அங்குமிங்கும் அழைத்துச் செல்ல முற்பட்டாள். ஆரம்பத்தில் கோவிலுக்கு மட்டும் செல்ல இணங்கினாள். எங்காவது செல்ல முன்னர் சரவணனின் படத்துக்கு முன்னால் நிற்பாள்.

''அத்தான் நீங்கள் இல்லாமல் இந்த உலகத்தில் எனக்கு வாழ்வில்லை என்றிருந்தேன். ஆனால் என் கோலத்தைப் பார்த்து வருந்தும் உள்ளங்களுக்காக மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்கிறேன். அத்தான் உங்கள் உருவம் மறைந்து விட்டாலும் உங்கள் உயிர் என்னை வட்டமிட்டுக் கொண்டிருப் பதாவே உணர்கிறேன். நீங்கள் எங்கிருந்தாலும் என்னைக் காப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. என் பெண்மைக்கு களங்கம் ஏற்படாமல் காப்பீர்கள் என்ற நம்பிக்கையில் தான் நான் வெளியிடங்களுக்குப் புறப்படுகின்றேன்'' என்ற கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரே புறப்படுவாள்.

நாள்கள் செல்லச் செல்ல தினமும் எங்காவது வெளியில் சென்று வருவது சரோஜாவுக்குப் பழக்கமாகிவிட்டது. பரிமளம் இல்லாவிட்டாலும் இப்போது புறப்பட்டு விடுவாள். மற்றவர்களுக்காகப் புறப்பட்டுப் பழகியவளுக்கு இப்போது எப்பிடியும் ஒரு தரம் வெளியில் சென்று வராவிட்டால் என்னவோ போல் இருந்தது. அவளையறியாமல் அவள் ஆண் பெண் இருபாலாருடனும் கலகலப்பாக - சகஜமாகப் பழகினாள். ஆனால் அது மற்றவர்களை இப்படியெல்லாம் விபரீதமாக எண்ணவைக்கும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

*****

அவர்கள் பேசிக் கொண்டே இருந்தனர், சரோஜா அழுது கொண்டே இருந்தாள். அவர்கள் கதைத்தது அவளுக்கு கேட்டுக் கொண்டு தான் இருந்தது.

''முந்தியெண்டா இவள் வீட்டு வேலைகளை ஓடியோடிச் செய்வாள். இப்பெங்க வீட்டில் இருந்தால் தானே?''

''எவனையும் பார்த்துக் கீத்து வைச்சிருக்கிறாளோ என்னவோ? இந்தக் காலத்துப் பிள்ளையள சொல்லிக் கிடக்கா?'''

''... ... ...'' காதை இறுகப் பொத்திக் கொண்டாள் சரோஜா. அவள் உள்ளத்தை அறியாமல் அவர்கள் பேசிக் கொண்டிருந் தார்கள். அவளுக்கு இதை நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

''அத்தான் நீங்கள் இல்லாத உலகத்தில் இனி ஒரு கணமும் என்னால் வாழ முடியாது. அத்தான் என்னையும் உங்களுடன் ஏற்றுக் கொள்ளுங்கள், வருகிறேன் ஆமாம் வருகிறேன். வாழ்ந் தால் உங்களுடன் தான் வாழ்வேன்'' சரோஜாவின் உள்ளம் அமைதியின்றி அலறியது.

அடுத்த நாள் சரோஜா பிணமாகக் கிடந்தாள். கண்ட, கேட்ட ஊரவர் வாயடைத்துப் போயிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் மீறி அவர்கள் உள்ளம் அழுதது. - ஏனென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

''எவனெவன் ஏமாத்தினானோ? இல்ல வாயில வைத்தில வாங்கித்தாளோ தெரியல்ல? இல்லாட்டி ஏன் சாக வேணும்?'' இப்படி எண்ணும் உள்ளங்களும் இருக்கத் தான் செய்தன.

உள்ளதை உள்ளபடி அறியாத உலுத்தர்களால் தான் இவ்வாறான நல்ல உயிர்கள் இந்த உலகை விட்டுப் பறந்து போய் விடுகின்றன. இப்படியான சந்தர்ப்பத்தில் அவர்களுடைய மகிழ்ச்சியும் வேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
டிசம்பர்1967

## 12 இனியும் ஏது இன்பம்?

"ஐயோ பாவம்! எப்படி இருந்த குடும்பம் எப்படி எல்லாம் ஆகிவிட்டது?"என்று தங்கள் அனுதாபத்தை வெளியிடாதவர்கள் அந்த ஊரில் யாரும் இல்லை எனலாம். அத்தனைக்கும் செல்லப்பர் சிறப்பாக வாழ்ந்தவர் தான்.

செல்லப்பர் அரசாங்க திணைக்களம் ஒன்றில் தச்சுத் தொழில் பார்த்து வந்தவர். விடுதலை நாட்களிலும் ஓய்வு நேரங்களிலும் வீட்டில் சிறு சிறு வேலைகள் செய்து தன் வருமானத்தைப் பெருப்பித்துக் கொண்டிருந்தார். அவருக்கு இருந்ததோ ஒரே ஒரு பெண் குழந்தை. அவர் மனைவி கொண்டு வந்திருந்த வீடு வளவும் சொந்தமாக இருந்தது. அது போதாதென்று இவரும் இராப் பகலாகத் தொழில் செய்து பணம் சம்பாதித்தார்.

"உள்ளது ஒரே ஒரு மகள் தானே, ஏன் இப்படிக் கஷ்டப் பட்டு உழைக்கிறாய்?" என்று பலர் நினைப்பதை சிலர் கேட்டும் விடுவதுண்டு.

"ஒரே மகள் என்றாலும் அவளை நல்லாப் படிப்பிச்சு நல்ல ஒருவனை கல்யாணம் கட்டிச் சந்தோசமாக இருக்க வேண்டுமே" என்று அவர் தன் உள்ளத்தை திறந்து காட்டுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் என்னும் புத்தகத்தில் ஒரு பக்கம் முடிந்து மறு பக்கம் புரட்டப் பட்டது.

1957 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தை வெள்ளம் முழுக்காட்டிக் கொண்டிருந்தது. ஊரெங்கும் மக்களின் கூக்குரல்கள் தான் கேட்டது. வீடிழந்தவர்கள், பொருளிழந் தவர்கள், பெற்ற பிள்ளைகளை இழந்தவர்கள் - இப்படிப் பலர் அழுதும் ஓலமிட்டுக் கொண்டும் இருந்தனர்.

செல்லப்பரின் வீட்டிலும் வெள்ளம் முழங்காலளவில் இருந் தது. வீட்டைக் காலி செய்து விட்டு எல்லோருடனும் அக் கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் அவரும் குடும்பத்துடன் தஞ்சம் புகுந்தார். ஆனந்தமாக ஆடிப்பாடித் திரிந்த மக்களின் அழுகுரலைக் கேட்டு ரசித்தது போதுமென்று வெள்ளம் வடிந்து விட்டது. மக்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர்.

செல்லப்பரின் வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்து கிடந்தது. ஊர் மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தான் பாக்கியவான் என்று எண்ணிச் சந்தோசப் பட்டுக் கொண்டார் செல்லப்பர். இருக்கும் பணத்தால் அதைச் சரிப்பண்ணி விடலாம் என்றிருந்தார்.

இப்படி இருக்கையில் இடிந்து விழுந்த வீட்டைத் துப்பரவு செய்யும் பொழுது வெள்ளத்தில் வந்து அடைபட்டுக் கிடந்த தகரப் பேணியொன்றைக் கண்டெடுத்தார். அதைத் திறந்து பார்த்த பொழுது நெடி அவர் மூக்கைத் துளைத்தது. ''கறுப்புத் திரவியம்'' அவர் கைக்குக் கிடைத்திருந்தது. அதை விற்றால் பல ஆயிரம் சேர்க்கலாம். வைத்திருந்தால் பொலீஸார் பிடிப்பார்கள் என்பதை எண்ணிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''விற்பது தான் நல்லது'' என்று அவர் மனைவியும் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

''சீ... விற்கக் கூடாது. இந்த நேரத்தில் விற்கப் போனால் 'என்னுடையது' 'என்னுடையது' என்று எத்தனை பேர் வருவார்கள். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடும். இது இரகசியமாய் நம்மிடம் இருக்கட்டும்'' என்று வைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கஷ்டப்பட்டு உழைக்கும் உடம்புக்கு இது நல்லது என்று யாரோ சொன்னபோது அவருக்கும் அதைச் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இரண்டு மூன்று நாள் முயற்சித்துப் பார்த்தார். நெடி அவரை விடவில்லை. இருந்தாலும் ஒரு கை பார்த்து விடுவது என்று மூக்கைப் பிடித்துக் கொண்டு சில நாட்கள் போட்டுப் பார்த்தார். பழக்கமாகிவிட்டது.

இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது. கொட்டைப் பாக்களவு இப்போது தேவைப்பட்டது. மனைவியைச் சமாதானப் படுத்திக் கொண்டே பேணியை முடித்து விட்டார். "எத்தனையோ ஆயிரம்" என்று மனைவி அழுதாள். 'இந்த உடம்பு இருந்தால் அதை விடக் கூட உழைத்துவிடலாம்' என்று மனைவியைச் சமாதானப் படுத்தினார்.

பேணி முடிந்து விட்டதென்று அவரால் சும்மா இருக்க முடியவில்லை. சம்பளம் எல்லாம் அந்த வழியிலே செலவிட்டார். அதுவும் போதாதென்று வீட்டில் ஒரே அடிபிடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. மனைவி என்ன செய்வாள்? திருத்த முயன்றும் முடியாது போனபோது அவர் போக்கிலே விட்டு விட்டாள்.

இப்போது எஸ்.எஸ்.சி படித்துக் கொண்டிருந்தாள் புவனா. செல்லப்பரின் உழைப்பு அவருக்குப் போதவில்லை ஆதலால் கடனில் இறங்கினார். மனைவி சாப்பாட்டுக்காக கடன் பட்டாள். கடன் தலைக்கு மேல் ஏறியது. வீடு ஈடு அடைவு வைக்கப் பட்டு அந்தக் கடன்கள் கொடுக்கப் பட்டன. ஆனால் செலவுக்குப் பணம் கையில் மிஞ்சவில்லை. மீண்டும் அதே பல்லவி.

எஸ்.எஸ்.சி சித்தியடைந்ததும் புவனா வீட்டில் நின்று விட்டாள். அப்பா கண்ட கனவுகளை அவள் அறிவாள். இந்த இனிய நினைப்பிலே திரண்டு வளர்ந்திருந்தாள். இயற்கை அன்னை அவள் எழிலில் எந்தக் குறையும் வைக்கவில்லை. அப்பாவின் போக்கை அறிந்து அவளும் மனம் குமைவதைத் தவிர எதுவும் செய்ய முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் எனில், ''அது'' இல்லாவிட்டால் இப்போது வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எப்படியாவது - சாப்பாடு இல்லாவிட்டாலும் அவருக்கு அது தேவைப்பட்டது. அதைச்சாப்பிட்டு விட்டு தூங்கி வழிவதைத் தவிர முன் போல் வேலை செய்ய முடிவதில்லை. சில நேரங்களில் கூப்பன் அரிசி (அரசு வழங்கும் இலவச அரிசி) யை விற்றும் அவருக்கு அது வாங்கிக் கொடுக்க வேண்டியிருந்தது.

வீடு வளவு விற்கப்பட்டது. சொந்த வீடு இப்போது வாடகை வீடாகியது. அவர்கள் நிலையைப் பார்த்து இப்போது ஊர் சிரித்தது. அதையெல்லாம் பற்றி அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

வேலையில் குற்றம் கண்டு அவர் வேலையில் இருந்து நீக்கப்பட்டார். தனியாகத் தொழிலை ஆரம்பித்தார். ஆனால் வருமானம் அவ்வளவாகக் கிடைக்கவில்லை. கவலை பல வருத்தங்களைக் கொண்டுவர படுத்த படுக்கையானார். தாயும் மகளும் கண்ணீரும் கம்பலையுமாக எப்போதும் காட்சியளித்தனர்.

காலன் ஆறுதலாக அப்பக்கத்தையும் படித்துவிட்டு மறு பக்கத்தைப் புரட்டினான்.

இப்போது விற்பனைக்காக இருந்தது புவனா மட்டும்தான். மற்றதெல்லாம் விற்று முடிந்து விட்டது. பணம் கொடுத்து மாப்பிள்ளை எடுக்க வேண்டியிருக்கும் வேளையில் பணம் கொடுத்து இந்தக் குடும்பப் பாரத்தை ஏற்றுக் கொள்ள எவன் ஒருவன் முன்வரப் போகிறான்? அப்படிப் பணம் கொடுத்தே எடுப்பதென்றாலும் அவர்கள் குடும்ப நிலையைப் பார்த்து யாருமே வரமாட்டார்கள். அப்படி இருக்க அவளை விற்று பணம் எடுப்பதென்றால்....?

தன்னைப் பார்க்க வந்தவர் ஒருவரிடம் கூறி வைத்தார். ''யாராவது ஒருவனைப் பார்த்துச் சொல்லப்பா. நான் இன்றோ நாளையோ என்றிருக்கிறேன். அதற்கிடையில் குடும்பத்தைப் பார்க்க ஒருத்தன் வேண்டாமா? யாரெண்டாலும் பரவாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இருக்கும் நிலையில் ஒருவன் கிடைச்சால் அதுவே பெரிய காரியம்'' என்றார்.

இப்படிப்பட்டவர்களுக்கு இப்படியான ஒரு எண்ணம் வருவதும் விந்தைதான். இதை அவர் எப்பவோ உணர்ந்திருந் தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?

சில நாட்களில் பக்கத்து நகரில் கடை வைத்திருக்கும் ''மலையாளத்தான்'' ஒருவன் வந்து பெண் பார்த்துச் சென்றான். சம்மதம் பரிமாறியாச்சு.

புவனா அழுகிறாள். அவள் கண்ணீர்த் திரையில் பாடசாலை வாழ்க்கை ஒரு கனவுபோல் தோன்றுகிறது. ஒரு என்ஜினியரையோ டாக்டரையோ எண்ணித் தோழிகள் செய்த கேலிகள் தோன்றி மறைகின்றன. அதே போல் அவளும் கனவுகள் பல கண்டு அடைந்த இன்பம் அடுத்த கணம் தோன்றி மறைகின்றது. அடுத்தது தற்போதைய குடும்ப நிலை. அதை எண்ணிப் பார்க்க முடியாது தவிக்கிறது அவள் மனம்.

படித்ததெல்லாம் அவள் மனதில் விவாதமாகத் தோன்றுகின்றன. பல பக்கத்திலிருந்தும் பலவிதமான கேள்விக் கணைகள் தொடுக்கப் படுகின்றன. எதற்கும் பதில் கூற அவளால் முடியவில்லை. இது தானா வாழ்க்கை? ஸ்தம்பித்து நிற்கிறாள்.

இப்போது இருக்கும் நிலையில் தன் ஒருத்தியால் தான் குடும்பத்தை காப்பாற்ற முடியும். அதற்கு ஒரே வழி தான் எண்ணி எண்ணி ஏங்கிய இன்பங்களைத் தியாகம் செய்துவது என்ற முடிவுடன் எழுகிறாள். கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். இந்தக் கற்பனை எல்லாம் இனி எனக்கு வேண்டாம். நிஜத்துக்கு வருவோம் என்று முடிவெடுக்கிறாள். ஆனால் அவள் முடிவை யாரும் அங்கே எதிர்பார்த்திருக்க வில்லை. அவளுக்குத் திருமணம் ஏற்பாடாகிவிடுகிறது.

திடீரெனத் திருமணமும் நடந்துவிடுகிறது.

இன்னுமொரு பக்கமும் பிரண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைக்காக அவள் வாழ்ந்தாள். உள்ளத்தால் அவளால் வாழ முடியவில்லை. உடலால் வாழ்ந்தாள். அவள் வாழ்க்கைதான் அவனுடைய குடும்பத்தின் உயிராக இருந்தது. எப்படியேனும் அவள் அவனுடன் வாழ்வதே அக்குடும்பத்துக்குச் சோறு போடும்.

இரவில் அவன் குடித்துவிட்டு வெறியுடன் வரும் போது எங்காவது ஆற்றிலோ குளத்திலோ வீழ்ந்து சாகவேண்டும் போல் தோன்றும் அவளுக்கு. அவன் கணவன் - அவள் மனைவி. அவன் விருப்பம் தானே இனி அவள் விருப்பம். அவளால் தான் விரும்பியபடி நடந்து கொள்ளமுடியாது.

ஒருநாள் ''கள்ளத்தோணி'' என்று அவன் பிடிபட்டு விட்டான் என்பது செல்லப்பரின் குடும்பத்துக்கு ஒரு இடியாக விழுந்தது. இச் செய்தி கேட்ட செல்லப்பர் ஒரேயடியாகக் கண்ணை மூடிவிட்டார். இடியேறு கேட்ட நாகம் போல் நடுங்கினாள் புவனா. அவள் கண் முன் இந்த உலகமே சுழன்றது. உணர்ச்சி களை உள்ளத்தின் இன்பங்களைத் தியாகம் செய்து உடலினால் இன்பமென்ற துன்பத்தை அனுபவித்தவள்... அதைக் கூட இறைவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே என்று எண்ணிக் கலங்கினாள். அவள் வாழ்வில் இனியுமேது இன்பம்?

தவழப் போகும் குழந்தை ஒரு இராட்சதன் போல் அவள் கண் முன் தோன்றியது. அதை நினைக்கும் போது அவள் நாடி நரம்பெல்லாம் நடுங்கும். ஆறெனக் கண்ணீர் ஓடும். ஆற்றுவார் யாரும் இல்லாத அவள் வாழ்வில் இனியுமேது இன்பம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்திரன்
டிசம்பர் 1970

# 13 இலட்சியப் பாதை

"அம்மாவுக்குக் கடுமையான வருத்தம் உடனே வரவும்" என்ற அந்தத் தந்தியைப் பெற்றதும் ஆனந்தன் ஒரு கணம் பதறிப் போனான்.

காரியாலயத்தில் உடனே விடுமுறைக்குக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்து வீடு செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அவனது மனம் மட்டும் அல்லாடியது. அம்மாவுக்கு திடீரென அப்படி என்ன வருத்தம்?. அதுவும் தன்னை வரச் சொல்லும் படியாக? அவனுக்கு என்ன எண்ணிப் பார்த்தும் விளங்கவில்லை.

அம்மாவுக்கு வருத்தம் என்றதும் அவனுக்கு தனது தங்கை ஆனந்தியின் நினைவே வந்தது. பாவம் அவள். அவளுக்கு ஒரு ஆனந்தமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்து விட்டால்...? கவலையே இல்லை. இப்போது அவளுக்கு கொழுகொம்பாக இருப்பது அம்மா தானே? அவளுக்கு பெயரளவில் மட்டும் தான் ஆனந்தம். ஆனால் அவள் ஊமை. ஊமையாகி விட்டவளுக்கு வேறு ஆனந்தம் ஏது? இவை அவன் மனதிலே எண்ணங்களாக இழையோடிற்று. அந்த எண்ணங்களினூடே அவள் ஊமையாகிய காட்சியும் தெரிந்தது.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மழைகாலம் திடீரென மழை பெய்வதும் விடுவதுமாக இருந்தது. பத்து வயதுச் சிறுமியாக இருந்த ஆனந்தி ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். முற்றத்தில் தேங்கி நின்ற தண்ணீரில் கடதாசியில் கப்பல் செய்து ஓடவிட்டு விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென ஏற்பட்ட மின்னல் இடி முழக்கத்திற்குப் பயந்து 'அம்மா' என்று வீறிட்டு அலறினாள். அத்துடன் மயங்கியும் விழுந்து விட்டாள். விறாந் தையில் இருந்த ஆனந்தன் ஓடிச் சென்று அவளைத் தூக்கி வந்து திண்ணையில் கிடத்தினான். மயக்கம் தெளிந்து எழுந்தவள் பேசவே இல்லை.

நாட்டு வைத்தியங்கள், நவீன வைத்தியங்கள் எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது. இன்னுமொரு திடீர் அதிர்ச்சியில் தான் ஒருவேளை அவள் பேசினால் பேசக்கூடும் என்ற கடைசி முடிவுடன் எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். ஊமை என்ற பட்டம் பாடசாலையில் கிடைத்ததும் பாடசாலைக்குச் செல்வதையே நிறுத்திவிட்டாள் ஆனந்தி.

இப்போது அவள்... அழகே உருவான தங்கச் சிலை. ஆனால் ஊமை. படிப்பறிவில்லாதவள் என்ற குறை. இந்தக் குறைகளுடன் அவளை ஏற்றுக் கொள்ள யார் வரப் போகிறார்கள்? இறைவா அவளுக்கு வாழ்வளித்து என்னை விடுவித்துவிடு என்று வேண்டிக் கொண்டான் ஆனந்தன்.

கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தான் ஆனந்தன்.

வீட்டு முற்றத்துக்கு வந்த ஆனந்தனுக்கு மேலும் அடி யெடுத்து வைத்து வீட்டுக்குள்ளே செல்ல முடியவில்லை. வீடு கலகலவென்று சந்தை போன்றிருந்தது. எல்லோரும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் இன்னும் அம்மாவைக் காணவில்லை. ஆனந்தி இவனைக் கண்டு விட்டாள். கண்கள் கங்கை போல் பெருக அவனை நெருங் கினாள்... ஆனந்தனுக்கும் கண்கள் கலங்கின. ஆனந்தியைப் பக்கவாட்டில் அணைத்துக் கொண்டே வீட்டுக்குள் சென்றான்.

தாயைக் கண்டவன் வியப்போடு பார்த்தான். தாயும் மவுனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாள். தங்கைக்குப் பேச முடியாது யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதென்றே தெரியவில்லை. அவன் மனம் துடித்தது.

இறுதியாகத் தாயே கூறினாள். ''ஆனந்திக்கு திருமண எழுத்து. மாற்றுச் சடங்காகப் பேசி ஒழுங்கு செய்திருக்கிறோம். நாளைக் காலையில் கல்யாணப் பதிவு. மாப்பிள்ளையும் பெண்ணும் காரைதீவு. பெண்ணைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை. அவளுக்கு ஒரு குறைச்சலும் இல்லை. மாப்பிள்ளை ஆனந்தியைக் கட்டிக் கொள்கிற படியால் அவளுக்குச் சீதனம் இல்லை. உண்ட ஊமைத் தங்கச்சியை நீ வாழவைக்க வேண்டும் என்றால் நீ இதைச் செய்யத்தான் வேணும். இல்லாட்டி அவளைக் கொண்டு போட்டு நீ விரும்பின மாதிரி நடந்து கொள்''

தங்கை இன்னும் அழுதவாறு நின்று கொண்டிருந்தாள். தாய் பேசிவிட்டு உள்ளே சென்று விட்டாள். ஆனந்தனுக்கு பாம்பு தீண்டியது போல் இருந்தது. விஷம் மெல்ல மெல்ல தலைக்கு ஏறுவது போல் இருந்தது. அப்படியே சென்று ஒரு கதிரையில் அமர்ந்த விட்டான். அவன் போன விடுமுறையில் வந்த போது நடந்தவை அவனது மனக்கண் முன் வந்து நின்றது.

ஒரு நாள் இரவு ஒன்பது மணியளவில் வீட்டுக்கு வந்திருந்தான் ஆனந்தன். அந்நேரம் உறக்கத்தில் இருக்கும் அவனுடைய தந்தை அன்று விழித்திருந்தார். படியேறியவனை ''ஆனந்தா'' என்று அழைத்தார் இன்னும் உறங்காமல் வெளியில் உலாவிக் கொண்டிருந்த தந்தை. அவர் முன்னே வந்து மவுனமாக நின்றான் ஆனந்தன்.

''எங்கேயிருந்து வருகிறாய்?''

''.............'' தந்தைக்குப் பதில் பேசிப் பழக்கமில்லாதவன்.

''ஆனந்தா என் மானமே காற்றில் பறக்குதடா...'' அவர் அழுவது போல் குரல் இருந்தது. இருளில் தெரியவில்லை.

''பாடசாலைப் படிப்பு முடிந்ததும் நண்பர்களுடன் திரியும் போதே நீ யாரோ ஒருத்தியை அதுவும் சாதியில் குறைந்தவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலிக்கிறாயாம் என்று கேள்விப்பட்டு சும்மா இருந்தேன். காரணம் நீ விளையாட்டுப் புத்தியில் நடந்து கொள்கிறாய் என்று. ஆனால் அவர்கள் உன்னைத் தங்கள் வசமாக்கி இருக்கிறார்கள் என்று அறிந்த போது ஒருமுறை உன்னைக் கண்டித்தேன்...''

''அவள் சாதியில் குறைந்தவள். ஆதனம் சீதனம் ஏதும் இல்லாதவள் அவளைக் கல்யாணம் முடித்தால் நாம் இந்த ஊரில் தலை நிமிர்ந்து நடக்க முடியாது. அப்படி முடித்தாலும் அவளிடம் என்ன சுகம் காணப்போகிறாய்? சும்மா இருந்து சாப்பிடச் சீதனம் ஏதாவது இருக்கிறதா? உனது அண்ணன் எவ்வளவு சீதனத்துடன் கல்யாணம் முடித்தவன் என்று தெரியும் தானே. நம்மைத் தான் அவன் கவனிக்காமல் விட்டாலும் அவனாவது நல்லா இருக்கிறான் தானே. இவளைக் கல்யாணம் முடித்து நீ என்ன செய்யப் போகிறாய்?''

''அதுமட்டுமா? - உனக்கென்று ஒரு கடமை இருக்கிறது. அதுவும் பெருஞ் சுமையாக இருக்கிறது. ஆனந்தியை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டுமே''

''வேலைக்குச் சென்ற பிறகாவது குடும்பக் கஷ்டங்களை அறிந்து திருந்தி விடுவாய் என்றிருந்தேன். ஆனால் நீ திருந்துவதாகக் காணவில்லை. அதுதான் இன்றும் சொல்கிறேன். ஊராரின் கதையைக் கேட்டுக் கொண்டு என்னால் வாழமுடியவில்லை. நீ எனக்குப் பிறந்த பிள்ளை என்றால் நான் சொல்றது போல் கேட்டு நடந்து கொள்''

''இன்றோடு அவளை மறந்து விடு. உனது தங்கைக்கு வாழ்வளிக்க வேண்டுமென்றால் நீ இதைச் செய்து தானாக வேண்டும். ஊமை படிப்பில்லாதவள் என்றிருக்கும் குறைகளுடன் குறைந்த சாதியில் பெண் எடுத்தவனின் தங்கை என்ற ஒன்றையும் சேர்த்து ஆனந்தியின் வாழ்வைக் கெடுத்து விடாதே! போ! போய் படுத்துக் கொள்''

ஆனந்தனின் தந்தை ஓர் ஆசிரியர். வெகு அழகாகவும் அமைதியாகவும் அவனுடைய உள்ளத்தில் பதியுமாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் அமைதியாக நின்று கேட்டுக் கொண்டிருந்தான். என்றாலும் அவன் உள்ளம் மட்டும் தனக்குள்ளே அதற்கெதிராப் பதில் கூறிக் கொண்டிருந்தது.

ஆனந்திக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பது அவன் அறியாதது அல்ல. ஆனந்தியின் திருமணத்துக்குப் பின்னர் தான் தன்னைப்பற்றிச் சிந்திப்பது என்றிருந்தான். எதற்கு மறுப்பும் தடையும் ஏற்படுகிறதோ அதையே எப்படியாவது-எப்பாடுபட்டாவது செய்வது என்ற உறுதி அதிலே தோன்றுவதுண்டு.

யாதொரு காரணமுமின்றித்தான் ஆனந்தனின் காதலும் உருவாகியது. அதை அப்படியே விட்டிருந்தால் சிலவேளை அவனே அவளைப் பற்றிச் சிந்திக்கும் போது இவளையா நான் மணம் முடிப்பது? எனது தகுதிக்கேற்ற ஒருத்தியை அல்லவா நான் முடிக்க வேண்டும் என்று எண்ணி அவளைத் தவிக்க விட்டிருப்பான். ஆனால் மற்றவர்களுடைய இழிவான பேச்சும் தாய் தந்தையரின் மறுப்புந்தான் மாற்ற முடியாத உறுதியைத் தந் தது எனலாம்.

ஆனால் இன்று நடந்திருக்கும் ஏற்பாடுகள் அவனை அப்படியே அதிரவைத்து அமர்த்தியிருக்கிறது. சிலையாக அமர்ந்திருந்தான் ஆனந்தன்.

பாண்டிருப்புக்கும் கல்முனைக்கும் வெகுதூரமில்லை. ஒன்றையொன்று அடுத்திருந்தது. ஆனந்தனின் வீட்டுக்கும் அவளுடைய வீட்டுக்கும் ஒரு மைல் தூரம் இருக்கும். அவள் வீடு கடற்கரை அருகே தான் அமைந்திருந்தது. இதனால் அதிகமான சந்திப்புகள் கடற்கரையிலேதான் அமைந்திருந்தன.

எதேச்சையாக கடற்கரையிலே தான் அவளைச் சந்தித்தான் ஆனந்தன். பார்வைகள் பேசிப் படிப்படியாக படர்ந்தது. பின்னர் சந்திப்புக்கென்று இருவரும் கடற்கரையை - ஒதுக்குப்புறமான, மறைவான, சனசந்தடியற்ற இடங்களை நாடினர்.

இதைவிட அவளை அவன் அவளுடைய வீட்டில் சந்தித்து அனுபவித்த புதுமையான இன்பங்களை அவனால் அப்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்தது. அவை ஒன்று சேர்ந்து அவனை திணறடித்துக் கொண்டிருந்தன

விடிந்தால் திருமணப் பதிவு.

''மாப்பிள்ளை படுக்கிறார் சத்தம் போடாதீங்க. காலை நாலு மணிக்கே - நேரத்தோட எழுப்ப வேணும்'' இப்படி ஒரு குரல். சிறிது நேரத்தில் பின் கதவு இழுத்துச் சாத்தப்படுகிறது.

நித்திரை வராத ஆனந்தன் எழுந்து கதவைச் சாத்திவிட்டு முற்றத்தில் உலாவுகிறான். சிந்தனை றொக்கட் வேகத்தில் பறந்து கொண்டிருக்கிறது.

'முடியாது இத்திருமணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இத்தனைக்குப் பிறகும் அவளைத் தவிக்க விடுவது நியாய மாகாது. சாதியில் குறைந்தவளாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அவளையே நான் மணக்க வேண்டும்' என்று உள்ளம் ஓலமிட்டுக் கொணடிருந்தது.

வீட்டு வீதியில் இப்போது உலாவிக் கொண்டிருந்தான்.

'பெண்கள் வாழ்வைப் பெரிது படுத்தாத இந்தச் சமூகமே அழிய வேண்டும். சாதியாம் சாதி. பிறப்பில், வாழ்வில், இறப்பில் என்ன வித்தியாசம்? ஏனிந்தச் சாதிப்பாகுபாடு? என்னையே தன் உயிர் - ஏன் - இந்த உலகே நான் தான் என்று எண்ணியிருக்கும் அவளின் நிலை? நாளைக் காலையில் எப்படி இருப்பாளோ? அவளுக்கு ஆறுதல் சொல்வது யார்? அவள் வாழத்தான் வேண்டும். எல்லோரையும் போல் காதலை விளையாட்டாக்கக் கூடாது. காதலித்தவள் தான் கடைசிவரை மனைவி. இதற்கும் சாதிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சாதி வேண்டுமானால் என்னையும் தள்ளி வைக்கட்டும். அவளுடனேயே வாழ்வேன்' என்று உள்ளம் உறுத்திக் கொண்டிருந்தது. சிந்தனைகள் கரைகடந்த வெள்ளம் போல் ஓடிக் கொண்டிருந்தது.

விடிந்தால் திருமணப் பதிவு.

இதை நான் முறியடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் ஆனந்தி,

'யாரது ஆனந்தியா? ஆம் தங்கை. இரவின் மறுபக்கம் விடியல். இன்பத்தின் மறுபக்கம் துன்பம். மேட்டின் மறுபக்கம் பள்ளம். சேற்றிலே தான் செந்தாமரை மலர்கிறது. பல இன்னல்கள் நடுவிலேதான் எத்தனையோ நல்ல செயல்கள் உருவாகியிருக்கின்றன. எத்தனையோ பேரின் சாவிலே தான் பல நல்ல இலட்சியங்கள் நிறைவேறியிருக்கின்றன. கோபுரம் போல் நிமிர்ந்து நிற்கின்றன. ஆம் தங்கையின் வாழ்க்கையில் என் வாழ்க்கை மலரட்டும். என் வாழ்க்கை சாதிப் பாகுபாட்டை ஒழிக்கட்டும். தங்கையே என்னை மன்னித்துவிடு. உனக்காக அழுகின்றேன். ஆனால் என்னால் உனக்கு உதவ முடியவில்லை.'

'அவள் ஒரு சாதாரணமான பெண்ணாக இருந்திருந்தால், எனது காதலை உனக்காக தியாகம் செய்திருப்பேன். அதில் பெருமையும் அடைந்திருப்பேன். ஆனால் சாதி வந்து கூறு போடும் போது என்னால் உனக்காகக் கூட விட்டுத் தரமுடியவில்லை. ஆம் அவளைத் தான் மணம் செய்யப் போகிறேன்.'

அழுதவாறே நடக்கிறான்.

விடிந்தால் திருமணப் பதிவு.

'றெஜிஸ்டார் ஆபிசுக்குப் போவதற்காக மாப்பிள்ளையும் பெண்ணும் பாண்டிருப்புக் கோவிலுக்கு வந்து விட்டார்களாம் என்றொரு செய்தி வருகிறது. எல்லோரும் பதறிப் பதறி ஓடியாடி வேலை செய்கிறார்கள். அவர்களை எதிர் கொண்டழைகச் சிலர் செல்கின்றனர்.

''எங்கட மாப்பிள்ளையையும் பெண்ணையும் எழுப்பி முழுகிக் குளிச்சு வெளிக்கிடச் சொல்லுங்க'' கட்டளை ஒன்று பிறக்கிறது. அடுத்த கணம் ஒரு விபரீதமான குரல் ஒலிக்கிறது.

''ஆனந்தனைக் காணவில்லை'' ''ஆனந்தனைக் காணவில்லை'' திரும்பத் திரும்ப ஒலிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆனந்தனைக் காணவில்லை'' எங்கும் இதே குரல் ஒலிக்கிறது. எல்லோரும் ஒரு கணம் ஸ்தம்பித்து விடுகிறார்கள். மறுகணம் நாலா பக்கமும் சைக்கிள்களும் ஆட்களும் ஆனந்தனைத் தேடிப் புறப்படுகிறார்கள். ஆனந்தி அழுது கொண்டிருக்க அவளுக்கு அலங்காரம் செய்கிறார்கள்.

''ஆனந்தனைக் காணவில்லை''

ஆனந்தனது காதலியின் வீட்டிற்குச் சிலர் செல்கிறார்கள். அவர்களை மிரட்டுகிறார்கள். ஆனந்தன் இங்கே தான் வந்திருக்க வேண்டும் என்று வீடு முழுக்க தேடுகிறார்கள். ஆனாலும் பயனில்லாமல் போய்விட்டது. அவனுடைய காதலி அழுது கொண்டு சுவாமி படத்துக்கு முன்னால் இருக்கிறாள். இதைக் கேட்ட அவளுக்கு அழுகை மறைந்து ஆனந்தமும் கலவரமும் குடிகொண்டது.

பதிவுக்காக புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது. எவருமே ஆனந்தனைக் காணவில்லை என்ற செய்தியுடன் ஒவ்வொருவராகத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

சிலையாக உட்கார்ந்து விட்டார் ஆனந்தனின் தந்தை. அவரை வெப்பிசாரம் பற்றிக் கொண்டது. தாயும் மகளும் அழுது கொண்டிருந்தனர்.

செய்தி தீ போல் பரவுகிறது. மாற்றுச் சம்பந்த வீட்டார் சிங்கமெனச் சீறுகிறார்கள். புலியெனப் பாய்கிறார்கள்.

சிலர் வசைப் பாட்டுப் பாடுகிறார்கள். ஏச்சும் பேச்சும் மழையெனப் பொழிகிறது. உள்ளமும் உடலும் நடுங்க ஆனந்தனின் பெற்றோர் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றனர். யாருக்கும் பேசத் துணிவு வரவில்லை. எதைப் பேசுவார்கள்?

தரகர் நின்ற இடத்துக்கும் தெரியாமல் நழுவி விட்டார்.

இறுதியில் சம்பந்திகள் கார்களில் ஏறிக் கொண்டு திரும்புகின்றனர்.

''ஐயோ மகளே...'' என்று அலறிக் கொண்டு கீழே விழுகிறாள் ஆனந்தியின் தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்..மா...'' என்று அலறிவிடுகிறாள் இதுவரை வாயடைத்துப் போயிருந்த ஆனந்தி.

''அம்...மா.. அம்மா''

இப்போது அவளால் பேச முடியும். ஆனால் அந்தக் குரலைக் கேட்கத் தாய் இந்த உலகத்தில் இல்லை. இந்த உலகை விட்டே பிரிந்து விட்டது உயிர்.

ஆனந்தியின் குரல் கேட்டு இந்தத் துன்பத்திலும் ஆனந்தத்தில் உள்ளம் துடிக்கிறார் அவள் தந்தை.

''ஆனந்தி'' ''ஆனந்தி'' அழுகின்றனர் எல்லோரும்.

ஆனந்தியின் அழு குரலையோ தாய் இறந்ததின் அழுகுரலையோ கேட்க ஆனந்தன் அங்கிருக்கவில்லை. தங்கையை இழந்து தனது இலட்சியத்தை நிறைவேற்றச் சென்று கொண்டிருக்கிறான்.

இரவோடு இரவாக இருபது மைல்களுக்கு அப்பால் தான் துணிந்து இறங்கிவிட்ட இலட்சியப் பாதையை அடைய நடந்து கொண்டிருந்தான். சலனமின்றி, சலிப்பின்றி, களைப்பின்றி நடந்து கொண்டிருந்தான் ஆனந்தன்.

நித்திரையின்றி நடந்து கொண்டிருக்கும் அவனது கண்களில் தங்கையின் அழுத முகம் தெரிவது போன்ற பிரமை.

ஆனாலும் கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதா
ஜனவரி 1967

# 14 புனர்வாழ்வு

எத்தனையோ நாள்களாக அவளைத் தினமும் சந்தித்து வருகின்றான் நந்தகுமார். அவளைப்பார்க்கும் போதெல்லாம் அவளை இன்னும் இன்னும் பார்க்க வேண்டும் போல் தோன்றுகின்றது நந்தகுமாருக்கு. அத்தனை கவர்ச்சியும் கட்டுக் கோப்பான - அளவான உடலும் அவளிடம் இருந்தன. அவளைப் பார்த்ததும் சிரிக்க வேண்டும் போல் தோன்றும். கதைக்க வேண்டும் என்று எண்ணுவான் நந்தகுமார்.

ஆனால் அவள் யார்? நான் யார்? என்ற எண்ணம் அவனுக்குள் தோன்றும் அப்படியே சென்றிடுவான். யாழ்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு மாறி வந்து இன்னும் ஒரு மாதமாகவில்லை நந்தகுமார் ஒரு ஆசிரியர். பி.ஏ. அன்று முதல் அவன் அவளைச் சந்தித்துக் கொண்டு தான் வருகின்றான்.

அவள் மட்டுமென்ன ஆசிரியை பி.எஸ்.சி யாக்கும். அவளும் அந்த ஜனவரியில் தான் மாற்றம் பெற்று வந்திருந்தாள். அவளும் அங்கு ஒரு பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள். அவள் சக ஆசிரியர்களுடன் நடந்து பாடசாலைக்குச் செல்லும் நேரம், நந்தகுமாரும் சைக்கிளில் பாடசாலைக்குச் செல்வான். இந்த நேரத்தில் வீதியில் எங்காவது சந்திப்பது வழக்கமாக இருந்தது.

இன்று ஏதோ எண்ணிச் சிரித்துக் கொண்டே வந்தவன் அவளைப் பார்த்ததும் சிரித்து விட்டான். அவளும் சிரித்தாள் அவள் முகத்தில் இருந்த கவர்ச்சிக்கும் அவளுடைய சிரிப்புக்கும் எத்தனையோ வித்தியாசம் இருந்தது. அவள் தானாகச் சிரிக்கவில்லை ஏதோ சிரிப்புக்குப் பதில் சிரிப்புச் சிரிக்க வேண்டும் என்பதற்காக முயற்சித்தாள். இது நந்தகுமாரின் உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

எதை எதையோவெல்லாம் எண்ணி இன்பமாக இருந்த நந்தகுமாருக்கு எல்லாம் துன்பமாக ஒரு விநாடியில் மாறிவிட்டது. அவன் பாரிய சிந்தனையுடன் பாடசாலைக்குச் சென்றான்.

இன்னும் சில நாட்களுக்கு அதே சிரிப்பாகத் தான் இருந்தது. உள்ளத்தில் ஆழமாக அடங்கிக் கிடக்கும் துன்பத்தின் அலைதான் அவள் சிரிப்பு என்பதை அறிந்த நந்தகுமாருக்கு உள்ளம் துடித்தது. அது என்ன என்று அறிந்து அதில் தானும் பங்கு கொள்ள வேண்டும் என்று உருகினான். ஆனால் எப்படிக் கதைப்பது?

அவள் சில நாள்களில் கடற்கரைக்கு வருவாள் தான். ஆனால் சக ஆசிரியைகளுடன் அல்லவா வருகிறாள். எப்படி அவளுடன் கதைப்பது? எப்படி அவள் துன்பத்தைப் பற்றி அறிவது? அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறுவது?

நந்தகுமாரின் உள்ளத்தில் அநாதையாக நின்ற கேள்விகள் இவை.

அன்று 'நெல்சன் தியேட்டரில்' ஒரு புதுப்படம் ஓடிக் கொண்டிருந்தது. அதைப் பார்ப்பதற்காக நேரத்தோடு சென்றிருந்தான் நந்தகுமார். ஆனால் அப்போதிருந்தே முதலாம் வகுப்புக்குக் கூட வரிசையாக இருந்தது. வரிசையில் நிற்பதை விரும்பாதவன் வரிசை முடியட்டும் என்று காத்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வசந்தி தனது வழமையான கூட்டத்துடன் வந்து கொண்டிருந்தாள் நந்தகுமாரின் உள்ளத்தில் சந்தோசம் தாண்டவமாடியது. அதே வேளை அவள் சிரிப்பைப் பார்த்ததும் பனிபோல் மறைந்துவிட்டது. பாலாடை போன்ற அவள் முகத்தில் ஏன் இந்தச் சிரிப்பு? இன்று எப்படியாவது கதைக்க வேண்டும் என்று உள்ளம் துடித்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணினான்.

''பிளீஸ் எனக்கொரு டிக்கட் எடுத்துத் தர முடியுமா?'' என்று கேட்டவாறே பணத்தை நீட்டினான்.

அவள் சிரித்தவாறே அதை வாங்கிக் கொண்டாள். இன்று எப்படியும் இவளருகில் சென்றிருந்து கதைக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

வசந்தி டிக்கட்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். மற்றவர்கள் முன்னே சென்று விட்டனர். ஒரு 'தாங்ஸ்' உடன் பெற்றுக் கொண்ட நந்தகுமார் வசந்தியின் பின்னால் சென்றான். அவன் எதிர்பார்த்தது போல் அவளுக்கு அருகில் அமரக் கதிரையும் காலியாக இருந்தது. அமர்ந்தும் கொண்டான்.

வசந்தியைக் கவனியாது அவளுடைய ஆசிரியைத் தோழிகள் தங்களுக்குள்ளே கதைத்துக் கொண்டிருந்தனர். வசந்தியும் நந்தகுமாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். 'கதைக்க வேண்டும்', 'கதைக்க வேண்டும்' என்று நந்தகுமாரின் உள்ளம் துடித்தது. எத்தனையோ பெட்டைகளுடன் கதைத்துச் சேட்டைகள் விட்டவனுக்கு, இன்று உள்ளூர நடுக்கம் ஏற்பட்டது புதுமைதான். சொற்கள் வெளிவரவில்லை.

அவளாகத் தான் வைத்திருந்த ரொபிகள் சிலவற்றைக் கொடுத்தாள் ''தாங்கியு'' என்றவாறே பெற்றுக் கொண்டான். அப்போது சிறிது தைரியம் ஏற்பட்டது.

''சே நான் வைத்திருக்கும் சொக்லேற்றைக் கொடுத்திருக்கலாம்'' என்று எண்ணியவன் பின்னர் 'கொடுக்கலாம்' என்றும் எண்ணிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா ஆரம்பமாகியதும் சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "உங்கள் பெயரை நான் அறியலாமா?" என்று கேட்டான்.

இருவரும் தங்கள் ஊர் பெயருடன் உள்ளத்தையும் பரிமாறிக் கொண்டனர். சிறிது நேரம் சென்றிருக்கும், நந்தகுமாருக்கு படத்தின் மேல் கவனம் செல்லவில்லை. கண் பார்த்துக் கொண்டிருந்தாலும் மனம் அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இவ்வளவு நெருங்கி வந்த பிறகும் கதைக்காமல் நேரத்தை வீணாக்கினால் எப்படி?

மெல்ல கதிரைக்கு மேல் இருந்த அவளுடைய கரத்தைப் பிடித்தான். கரத்திலென்ன அவள் உடலெங்குமே நடுக்கம் ஏற்பட்டது. பயந்து விட்டான் நந்தகுமார் எப்படித் திடீரென விடுவது என்று தெரியவில்லை. பிடித்துக் கொண்டிருந்தான் சற்று நேரத்தில் நடுக்கம் நின்றது. அவன் படம் பார்ப்பதை விட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அந்த இருட்டிலும் பழக்கப்பட்ட நந்தகுமாரின் கண்களுக்கு அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிவது தெரிந்தது.

"ஏன் வசந்தி என்னில் விருப்பமில்லையா?" எண்ணியதைக் கேட்டுவிட்டான்.

"............" மவுனமாக இருந்தாள்.

"ஏன் வசந்தி விருப்பமில்லாவிட்டால் சொல்லுங்க..." என்றான்

"உங்களை வெறுப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் நான் தான் வாடிவிட்ட மலர்... இனிமேல் வாழத் தகுதியற்றவள்..." என்றவள் கண்களிலிருந்து தாரையாக கண்ணீர் வழிந்தது.

"காதலில் தோல்வி ஏற்பட்டவுடன், நினைத்த ஒருவரை மணம் முடிக்க முடியாது போனவுடன் நமது பெண்கள் தங்கள் வாழ்க்கையே முடிந்த விட்டது என்று கருதுவது தவறு. எட்ட நின்று பழகினால் எத்தனை ஆண்களை வேண்டுமானாலும் காதலிக்கலாம் எத்தனையோ நினைக்கிறோம் அவை எல்லாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதில்லையே. அதற்காக அப்படியே அசந்து போய் உட்கார்ந்து விடுகிறோமா?'' என்றான் குமார்.

''நீங்கள் நினைப்பது போல் நான் நடந்து கொள்ள வில்லையே. நீங்கள் நினைப்பது வேறு எனக்கு நடந்தது வேறு'' என்றாள் வசந்தி.

''பரவாயில்லை இனிமேல் நீங்கள் கவலையை மறந்து சிரிக்க வேண்டும். இதுவே எனக்கு வேண்டும். உங்கள் அழகான முகத்தில் கவர்ச்சிகரமாக புன்னகையை நான் காண வேண்டும். இனிமேல் உங்கள் கவலை எல்லாவற்றையும் விட்டு விடுங்கள். உங்களுக்கு வாழ்வளிப்பது என் பொறுப்பு'' என்று கூறிய குமார் அவள் கைகளில் முத்தமிட்டான்.

படத்தில் இடைவேளை வந்ததும் அவர்களுக்குத் தெரியவில்லை. தோழிகளும் இடைஞ்சல் செய்யவில்லை. படம் முடிந்ததும் இருவரும் எழுந்து வெளியே சென்றனர். அன்றிரவு அவனால் படுத்துத் தூங்க முடியவில்லை. 'தாய் தந்தையர் எதிர்த்தாலும் இவளையே மணம் முடிப்பது. அவளும் உழைப்பாளி நானும் உழைக்கிறேன். அதுவே போதும் எவரது கையையும் நம்பி நாங்கள் வாழவேண்டியதில்லை. சே... இவளுக்கும் தீங்கு செய்ய ஒருவன் முன்வந்து இருக்கிறானே' என்று என்னவெல்லாமோ எண்ணிக் கொண்டு தூங்கியவன் அடுத்த நாள் எழுந்த போது புதிய மனிதனாக எழுந்தான். உள்ளம் துள்ளிக் குதித்தது.

வசந்தியால் தூங்கவே முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். அவன் உள்ளம் திறந்து கூறியது உண்மையா? பொய்யா? என்பதை அவளால் அறிய முடியவில்லை. இருண்டு கிடந்த தன் வாழ்வில் சூரியன் உதிக்கப் போவது நிச்சயம் தானா? இறைவா அப்படி ஆண்களைப் படைத்த நீ இப்படியும் ஆண்களைப் படைத்து இருக்கிறாயே. நன்றி இறைவா' என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

அடுத்த நாள் காலை சந்தித்த போது இருவரும் உள்ளம் மலரச் சிரித்தார்கள். நந்தகுமார் மன நிறைவோடு பாடசாலைக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான் சந்தோச மிகுதியால் அவனால் படிப்பில் கூடக் கவனம் செலுத்த முடியவில்லை.

காதல் வளர்ந்து கனியக் காத்திருந்தது.

இருவரும் கடற்கரையில் தனியே சந்தித்துப் பேசுவதும், விடுதலை நாட்களில் கோணேசர் கோவிலுக்குச் செல்வதும், கன்னியா சுடுநீர் கிணறுக்கு குளிக்கச் செல்வதும், சினிமாவுக்கு தோழிகளை விட்டுவிட்டு அவனுடன் செல்வதுமாக பழக்கம் பல்கிப் பெருகி வளர்ந்து விட்டது.

நந்தகுமாருக்குத் தாய் தந்தையர் சம்மதம் தர மறுத்து விட்டனர். ஆனால் அவன் முடிவெடுத்துக் கொண்டான். தாங்களாகவே கோவிலில் திருமணத்தை முடித்துக் கொண்டு, தனியே வீடெடுத்து தனியாகக் குடித்தனம் ஆரம்பிப்பதென்று.

ஒரு நாள் நந்தகுமார் பொது வாசிகசாலையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தவன் ''வசந்தி ஆசிரியை'' என்ற பெயர் அடிபடவே அப்படியே வேறு எதையோ கவனிப்பவன் போல் நின்றுவிட்டான். இவளைப்பற்றித்தான் இவர்கள் இப்படிக் கதைக்கிறார்கள் என்பதை அறிந்ததும் அவனது தலை சுற்றியது. பைசிக்களை எடுத்துக் கொண்டு நேரே வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்டு அழுதான். ''இவளையா நான் காதலித்தேன்?'' என்று அவனையே அவன் கேட்டுக் கொண்டான்.

அடுத்த நாள் மாலை அவள் அவனுடைய அறைக்கு வருவதாகச் சொல்லி இருந்தாள். தனிமையில் இன்பம் காண நினைத்தார்கள். ஆனால், இடையில் இயமன் போல் இவன் அறிந்த கதை வந்து வாளாக அறுத்துக் கொண்டிருந்தது. அடுத்த நாள் அவள் வரும்வரை அவனால் பொறுக்க முடியாது போல் இருந்தது. தணல் மேல்புழுப்போல் துடித்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் அவள் வந்த போது அவன் படுத்துக் கொண்டிருந்தான். அவள் வரவை எதிர் நோக்கிப் படபடத்துக் கொண்டிருந்தது இதயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன உங்களுக்கு ஏதும் சுகமில்லையா?'' என்று கேட்டவாறே அவன் முகத்தில் கையை வைத்தாள். கையைத் தட்டிவிட்டு துள்ளி எழுந்து அமர்ந்தான் கட்டிலில். அவள் பயந்து போய் விலகினாள்.

''வ... ச... ந்... தி'' என்றான் முறைத்துக் கொண்டே. அவள் உடல் இலேசாக ஆட்டம் கண்டது.

''நான் கேள்விப் பட்டது உண்மையா?'' என்றான்.

''என்ன...?'' என்றாள் தடுமாறிக் கொண்டே. இவன் என்ன கேள்விப்பட்டான் என்று அவளுக்கு எப்படித் தெரியும்?

''என்னவா...? ஐயோ வசந்தி உண்மையைக் கூறிவிடு என் வாழ்க்கையைப் பாலைவனமாக்கிவிடாதே...'' அவன் கண்கள் பனித்தன. ஆம், அவன் அழுதான்.

''இன்னொருவன் இச்சைக்கு ஆளாகி விட்டவளா நீ...? ஐயோ என் வாழ்வே பாழாகி விட்டதே'' என்று நிலை குலைந்து நின்றான் குமார்.

''ஆமாம். என்னை அடைய முயன்று அடைய முடியாமல் போன ஒரு காமுகனால் கசக்கி எறியப்பட்ட மலர் நான். வாழ்க்கை தான் இருண்டு விட்டாலும் நிம்மதியோடு வாழ வேண்டும் என்றுதான் மாறுதல் வாங்கி வந்தேன். ஆனால் எப்படியோ இங்கும் பலருக்கும் தெரிந்திருந்தது. உங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று தான் நினைத்தேன். எல்லோரும் என்னை இழிவாகப் பார்த்த போது நீங்கள் மட்டும் என்னை அன்பாகப் பார்த்தீர்கள். நான் பயந்தேன். இது எங்கே போய் முடியுமோ என்று. நீங்கள் தான் நெருங்கி வந்தீர்கள். ஆனால் அது நான் நினைத்தபடி முடிய வேண்டிய இடத்தில் முடிந்து விட்டது'' என்று அழுதழுது விக்கி விக்கி, நிறுத்தி நிறுத்திக் கூறி முடித்தாள்.

வசந்தியின் முதல் வசனத்திலே துள்ளி எழுந்த குமார். ''வசந்தி போய்விடு என் முன் நில்லாதே இங்கிருந்து போய்விடு'' என்று கூறித் தன் தலையைச் சுவரில் அடித்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போகிறேன் கனிய முதலே பறிக்கப்பட்ட கனி நான். இனிமேல் என்னை யாரும் கனிய வைக்க முடியாது என்று எண்ணியிருந்தேன். ஆனால் நீங்கள் எடுத்த முயற்சியில் கனிய வைப்பீர்கள் என்று எண்ணினேன். நீங்களும் தூக்கி எறிந்து விட்டீர்கள். இனிமேல் எந்த ஒரு ஆணுக்கும் இப்படி ஒரு நிலையைத் தரமாட்டேன். போகிறேன் என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறிவிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் சென்றாள் அவள். அவளுடைய அழுகைக்காகக் கட்டில் காத்துக் கிடந்தது.

வேதனையால் வெதும்பிக் கொண்டிருந்தான் நந்தகுமார். எங்கோ கோவிலில் மணி அடிப்பது போன்று சத்தம். மனம் சாந்தமாகக் கூர்ந்து கவனித்தது. அவன் உள்ளத்தில் ஒரு மூலையில் காந்திஜியின் குரல் கணீரென்று ஒலித்தது.

''சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் அனுதாபத்துக்குரியவர்கள். இவர்களைச் சமூகம் இருகரங்களையும் நீட்டி அணைத்துக் கொள்ள வேண்டும். புனர்வாழ்வு அளிக்க வேண்டும். பண்புள்ள ஆடவர்கள் இப்பேதைகளை மணந்து கொள்ள வேண்டும். இது தாய்க் குலத்தின் மீது நாம் காட்ட வேண்டிய கருணையும் கடமையு மாகும்.''

கோவில் மணிபோன்ற அந்தச் சத்தம் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் அலைகடல் போல் ஆர்ப்பரித்த அவனது உள்ளம் அமைதி கொண்டது. உடம்பு சில்லிட்டு வியர்த்தது. நான் அளித்தது புனர்வாழ்வா? என்ற கேள்வி அவனைச் சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது.

இரவாகிவிட்டது. பைசிக்களை எடுத்துக் கொண்டு ஓடினான் அவளை நோக்கி. அவள் அழுகைக்கு எல்லையைத் தேடிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்திரன்
மார்ச் 1971

## 15 உயர்ந்த உள்ளம்

இந்திரன் பைசிக்கலைத் தள்ளிக் கொண்டு படலையை நோக்கிச் சென்றான். குழந்தைகள் ரஞ்சினியும் ரஞ்சனும் ஓடி வந்து ''அப்பா டாட்டா'' என்று கூறி வழி அனுப்பி வைத்தார்கள்.

அவனும் பதிலுக்கு கையைக் காட்டிய பின்னர் பைசிக்களில் ஏறிக் கந்தோருக்குச் சென்றான்

பிள்ளைகள் இருவரையும் பாடசாலைக்கு அனுப்ப ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த ஜமுனா கண்கள் கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் இடம் பெறும் நிகழ்ச்சி தான் என்றாலும், பார்க்கும் போதெல்லாம் கண் கலங்கவே செய்தாள். அன்றும் அப்படித்தான்.

பிள்ளைகளைப் புறப்படுத்திக் கொண்டு 'கொண்வென்டு'க்குச் செல்லும் பிள்ளைகளுடன் அனுப்பிவிட்டு அமர்ந்த ஜமுனா, 'நானும் ஒரு பெண்தான் என்பதை அத்தான் எப்போது தான் உணரப் போகிறாரோ?' என்று பெருமூச்சுடன் எண்ணிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனின் முடிவில் தான் தங்கியிருக்கிறது அவள் வாழ்க்கை. இருள்வதும் விடிவதும் அவன் கையில் தான் தங்கி இருக்கிறது.

ஆனாலும் அவன் அவளை அலட்சியம் செய்வது ஜமுனாவுக்குப் பெரும் கவலையாக இருந்தது.

பிள்ளைகளின் வாழ்க்கையை எண்ணி அவள் மேற்கொண்ட முடிவு சரி என்பதே அவள் எண்ணம். இருந்தும் எப்போதும் இப்படியே இருந்து விட முடியுமா? என்ற கேள்வியும் வருடங் கள் வளர வளர பூதாகாரமாக வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் இந்திரன் இதைப் பொருட்படுத்தவே இல்லை. இல்லை பொருட்படுத்தியதாகக் காட்டிக் கொள்ளவே இல்லை.

கமலா, ஜமுனாவின் அக்கா மூன்றாவது பிரவசத்துக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

பிள்ளை பிறந்த போது அவளும் பிள்ளையும் இவ்வுலகத்தை மறந்து சென்றுவிட்டனர். பெண்களைப் போல் அலறிப் புடைத்து அழுதான் இந்திரன். தன் மனைவி மேல் அவன் வைத்திருந்த அன்புக்கும் உவமை உண்டோ?

அப்போது நாலு வயதும், இரண்டு வயதுமாக இருந்த ரஞ்சினிக்கும், ரஞ்சனுக்கும் எதுவும் தெரியாது.

கமலா, இந்திரனின் மனைவி இறந்து இப்போது மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

குழந்தைகளை வளர்க்கப் பெரும் கஷ்டப்பட்ட இந்திரனுக் குத் துணையானாள் ஜமுனா. இந்த மூன்று வருடங்களும் அவர்களை வளர்த்தெடுத்தவள் ஜமுனாதான்.

ரஞ்சினிக்கும் ரஞ்சனுக்கும் அம்மாவாக மாறிவிட்டாள் ஜமுனா. ஆனால் இந்திரனுக்கு...?

ஜமுனாவுக்கு மாப்பிள்ளை பேசப்பட்டிருந்தது. அவனும் அடிக்கடி அங்கு வந்து சென்று கொண்டிருந்தான். விரைவில் திருமணம் நடக்குமென எதிர்பார்த்திருந்தனர். ஆனால் கமலாவின் மறைவு ஜமுனாவின் திருமணத்தை எப்போது என்றின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திப்போட வைத்தது. என்றிருந்தாலும் நடக்குமென்று எதிர்பார்த்து இருந்தான் மாப்பிள்ளை.

இந்த நிலையில் குழந்தை ரஞ்சனுக்கு நோய் வந்ததில் அவனுக்குச் சேவை செய்வதில் தன்னை அம்மாவாக்கிக் கொண்ட ஜமுனா திடீரென செய்து கொண்ட முடிவு மாப்பிள்ளையை அதிர்ச்சி அடைய வைத்தது.

''நீங்கள் இங்கே வருவதை இனிமேல் நிறுத்திக் கொள்ளுங் கள். முடிந்தால் என்னை மறந்து விடுங்கள். இதைக் கூறுவதற்கு என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள் ஜமுனா.

''ஏன்?'' என்பது போல் அவளை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

''அக்காவின் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பை நான் இப்போது மேற்கொண்டிருக்கிறேன். அதற்காக நான் என் காதலைத் தியாகம் செய்யத் துணிந்து விட்டேன். உங்களுக்குத் துன்பம் தருவதாக இருக்கலாம். ஆனால் இந்த நிலையில் இதைவிட வேறு எதையும் நான் செய்யக் கூடிய நிலையில் இல்லை'' என்றாள் ஜமுனா.

உணர்வற்ற ஜடம் போல் எழுந்தவன் பேசக்கூடத் சக்தி யற்றவனாக 'வருகிறேன் ஜமுனா' என்று தாழ்ந்த குரலில் கூறிவிட்டு தளர் நடையுடன் வெளியேறினான். அவனுக்காக அழுதது அவன் உள்ளம்.

ஒரு வருடம் கடந்த போது ஜமுனாவின் திருமணப் பேச்சு அடிபட்டது. ஜமுனா தன் காதலை தியாகம் செய்து விட்டதை அப்போது தான் கூறினாள். ஜமுனா தன் வாழ்வைத் தன் குழந்தைகளுக்காகத் தியாகம் செய்ததை இந்திரனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

அவன் உள்ளம் துடித்தது. 'ஜமுனா வாழ வேண்டியவள். எனக்காகவோ எனது பிள்ளைகளுக்காகவோ அவள் தன் வாழ்வைப் பாழாக்கக் கூடாது' என்று எண்ணினான் இந்திரன். இதையே தன் மாமனாரிடமும் உறுதியாகக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமுனாவிடமும் இது பற்றி வாதாடினான்.

ஆனால் யார் என்ன சொன்ன போதும் ஜமுனாவின் முடிவை மாற்ற முடியவில்லை.

''ஜமுனா நீ என் குழந்தைகளுக்காக எடுத்திருக்கும் முடிவு வினோதமானது மட்டுமல்ல விபரீதமானதும் கூட. வேறொருவரை மணந்த பின்னும் அவர்களை நீ பார்த்துக் கொள்ளலாம் தானே. அவர்கள் மீது நீ கொண்டிருக்கும் அன்பை நான் அறிவேன். ஆனால், அதற்காக உன் வாழ்க்கையை பாழ்படுத்தாதே. நீ படித்த பெண். நான் சொல்லித்தான் நீ தெரிந்து கொள்ள வேண்டியது இல்லை'' இப்படி ஒரு நாள் அவளின் எதிரிலேயே கூறினான் இந்திரன்.

''அத்தான் என் முடிவை இனிமேல் யாராலும் மாற்ற முடியாது. குழந்தைகள் மீது நான் கொண்டிருக்கும் அன்புதான் இந்த முடிவை எடுக்க வைத்தது என்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்கள். அந்த அன்பைப் புரிந்து கொண்டீர்கள் ஆனால்...''

''ஆனால்... என்ன ஜமுனா?''

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. அவள் உள்ளே சென்றுவிட்டாள்.

இப்போது இரண்டு வருடங்கள் கடந்து விட்டது. ஜமுனா இந்திரனுக்கு தன்னை அர்ப்பணித்து விட்டதை தன் செய்கையால் வெளிப்படுத்தி வந்தாள். அவனின் மனைவி என்றே தன்னைப் பாவித்துக் கொண்டாள். படுக்கை அறை ஒன்றே வேறுபட்டிருந்தது. இதை அறிந்தும் அறியாதவன் போல் இந்திரன் அவளைப் பொருட்படுத்தாமல் நடந்தான்.

ஜமுனாவுக்கு அவ்வப்போது ஏமாற்றமும் கவலையும் எழும். ஆனால் அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டாள். தனது குறிக்கோள் என்றாவது ஒருநாள் நிறைவேறும் என்பதில் அவளுக்கு திடமான நம்பிக்கை இருந்தது.

வருடங்கள் மூன்றும் கடந்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது குழந்தைகள் இருவரும் பாடசாலைக்குச் செல்கிறார்கள். தன் நம்பிக்கை தளர்வதாக அவள் எண்ணம் அவளை வாட்டுகின்றது. காலம் தனக்குச் சதி செய்து விட்டதாக அவள் இப்போது உணர்கிறாள். தான் ஏமாற்றப்பட்டு விட்டதாக நினைக்கிறாள். அழுகை தினமும் அவளை ஆட்கொள்கிறது.

*****

பாடசாலை விட்டு வந்த குழந்தைகள் பிரமித்துப் போய் நிற்கிறார்கள். திடுக்கிட்டவள், கண்களைத் துடைத்துக் கொள்ள முயற்சிக்கிறாள். அவளுடைய கால்களைக் கட்டிப் பிடித்துக் கொள்கின்றனர் அவளது தியாகத்தின் கர்த்தாக்கள்.

''ஏனம்மா அழுத நீங்க?'' கண்கலங்கக் கேட்கிறான் ரஞ்சன்.

அவனைப் பார்க்கவே அவள் உள்ளம் பாகாய் உருகுகிறது. அந்தப் பிஞ்சுக் குழந்தையை தன்மீது இத்தனை பாசம் வைத்திருப்பவனை பொய் சொல்லி ஏமாற்ற அவள் மனம் மறுக்கிறது.

''வாங்க உடுப்பை மாற்றிவிட்டுத் தேத்தண்ணி குடிப்பம்'' என்று கதையை மாற்றுகிறாள்.

பிள்ளைகள் தேனீர் குடித்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்திரன் காரியாலயம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந் தான். படலையால் தந்தை வருவதைக் கண்டதும் ரஞ்சன் தேனீர்க் கோப்பையையும் வைத்துவிட்டு முற்றத்துக்கு ஓடுகிறான். பதட்டத்துடன் ஓடிவந்த தன்மகனை பைசிக்களில் தூக்கி வைத்துக் கொண்டு தள்ளி வருகிறான் இந்திரன்.

''அப்பா... அப்பா... அம்மா... அழுதவ...'' ஓடிய களைப்பு நீங்கவில்லை, ரஞ்சன் கூறி முடித்து விட்டான். அவன் கூறியது விறாந்தையில் நின்ற ஜமுனாவுக்கும் கேட்கிறது. அவள் உள்ளே சென்று விடுகிறாள்.

இதயத்தை யாரோ சுண்டிவிட்டது போல் உணர்கிறான் இந்திரன். ரஞ்சனுடன் ஜமுனாவைப் பார்க்கக் குசினிக்குள் (சமையலறைக்குள்) செல்கிறான் இந்திரன். ஜமுனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனுக்கு தேனீர் ஊற்றுகிறாள். அழுததை அவள் கண்கள் காட்டிக் கொடுத்து விடுகின்றன.

''என்ன ஜமுனா இது? இப்படி அழுது இருக்கிறாய்? ஏன்? என்ன நடந்தது?''

''ஒன்றுமில்லை அத்தான். மனசு ஒரு மாதிரியாக இருக்கிறது. அதுதான் அழுதால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது''

''ஜமுனா நான் உனக்கு ஏதாவது குறை வைத்திருக்கிறேனா?''

''இல்லையத்தான் யார் சொன்னது அப்படியென்று? உங்களுக்கென்ன பைத்தியமா?'' தன்னையும் மாற்றி பேச்சையும் மாற்றிவிடுகிறாள். ''ஏன் இன்று நேரத்தோடு வந்து விட்டீர்கள்?''

''ஜமுனா எனக்கு திருகோணமலைக்கு மாற்றம் கிடைத்திருக் கிறது. அதனால் கந்தோரில் இருக்க முடியவில்லை. அது தான் வந்த நான்...'' என்றான்.

''ஏனத்தான் திருகோணமலை கஷ்டமான இடமா?''

''அதற்கில்லை ஜமுனா எப்படிப் போவதென்று தான்... யோசித்துக் கொண்டிருந்தேன்...''

''ஏன் எல்லோரும் அங்கே போய்விட்டால் சரிதானே? பிள்ளைகளையும் அங்கே பாடசாலையில் சேர்த்து விட்டால் சரிதானே?'' என்றாள் அவள்.

''ஜமுனா உனக்குத் திருமணத்தை முடித்துவிட்டுப் போகலாம் என்றிருக்கிறேன். நீ எனக்கும் எனது குழந்தைகளுக்கும் செய்த சேவைக்குப் பரிசு தரவேண்டாமா?'' என்றான்

''அத்தான்...'' என்றாள் சத்தம் அடித் தொண்டையில் இருந்து வந்தது. தானே நேரடியாகக் கதைக்க வேண்டிய வேளை வந்து விட்டதை உணர்ந்தாள். அதனால் கதைத்தாள்.

''எனக்கா திருமணம்? என்னை நீங்கள் புரிந்து கொண்டது இவ்வளவு தானா? ஆனால் நானாகவே சொல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை வந்து விட்டது அத்தான்'' என்றவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முகத்தை நோக்கினாள்.

''அத்தான் என்னை நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள் அத்தான்''

'ஜமுனா...!''

''என் இலட்சியம் நிறைவேற வேண்டுமானால்... தியாகம் வெற்றி பெற வேண்டுமானால் அதுதான் வழி. இல்லை என்றால் நான் இனி யாரையும் மணக்கப் போதில்லை, மணக்கவும் முடியாது.''

''ஜமுனா நான் கமலாவை மறந்து வாழ முடியாத நிலையில் இருக்கிறேன்...''

''அத்தான் அதைவிட நீ ஏற்கனவே ஒருவனால் காதலிக்கப் பட்டவள், அதனால் ஏற்க முடியாதவனாக இருக்கிறேன் என்று கூறுங்கள். அந்தக் காரணத்தினால் தான் நீங்கள் என்னைக் கழிக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். பரவாயில்லை குழந்தைகளை என்னிடம் இருந்து பிரித்துவிடாதீர்கள்...''

''இல்லை ஜமுனா அப்படி நான் ஒருபோதும் எண்ணிய தில்லை. உன்னை நீ விரும்பியவனிடத்தில் சேர்த்துவிடவே துடிக்கிறேன்''

''அது இனி முடியாத காரியம். ஊரார் என்ன பேசிக் கொள்கிறார்கள் தெரியுமா? அதை அறிந்தால் நீங்கள் இப்படி எண்ணியும் இருக்க மாட்டீர்கள்... நாங்கள் ஊரறிய மணம் முடிக்காவிட்டாலும் கணவன்-மனைவியாக வாழ்கிறோம் என்று தான் பேசிக் கொள்கிறார்கள். இந்த நிலையில் தான் நான் என்னை உங்களுக்கு அர்ப்பணித்தேன். நீங்களும் என்னை ஏற்க மறுப்பது...''

''என்னை மன்னித்து விடு ஜமுனா உன் உள்ளத்தை ஓரளவு அறிந்ததும் அதை மாற்றத்தான் முயற்சித்தேன்..'' என்றவனை மறித்த ஜமுனா

''அந்தக் காலம் கடந்து விட்டது. நான் பிள்ளைகளுடனும் உங்களுடனும் ஒரே வீட்டில் வாழ்ந்து வருவது ஊருக்கே தெரியும். ஒரு நாள் பிள்ளைகளுடன் கோவிலுக்குப் போய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த போது அவரைக் கண்டேன் இப்போது அவர் என்ன கேட்டார் தெரியுமா? 'ஏன் இன்னும் இப்படி வாழ்கிறாய்? உன்னுடைய அத்தானை மணந்து கொள்ளச் சொல்' என்றார்...''

''உண்மையாகவா? நான் ஊரார் பேச்சை அறிந்திருக்க வில்லை. என்னால் என் குழந்தைகளால் நீ இந்த வயதில் இப்படி ஒரு பெயர் எடுக்க வேண்டுமா? இதற்கு நான் காரணமாக இருந்திருக்கிறேன் என்பது தான் என் கவலை. எப்படி நீ இதையெல்லாம் தாங்கிக் கொண்டாய்?''

''நான் உன்னை எப்போதாவது கெட்ட நோக்கத்துடன் பார்த்தாவது இருக்கிறேனா? உன்னைத் தொட்டு இருக்கிறேனா? இப்படியிருந்தும் நீ இதையெல்லாம் எப்படிப் பொறுத்துக் கொண்டாய்? உனக்கு வேதனை தந்த என்னை மன்னித்துவிடு ஜமுனா...''

''அத்தான் நீங்கள் சொல்வது உண்மையானால் நீங்கள் தான் என்னை ஏற்றக் கொள்ள வேண்டும் இனி அதைவிட வேறு வழியில்லை...''

''ஜமுனா இன்னும் உன்னைத் தவிக்க விடுவேனா? இனி நீ தான் என்றும் என் குழந்தைகளுக்கு அம்மா. எனக்கு மனைவி'' என்றான் இந்திரன்.

அவன் அவளை அணைத்துக் கொள்கிறான். பின்னர் இருவரும் மலர்ச்சியுடன் குழந்தைகளை அணைத்துக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இரு சிறுகதைத் தொகுதிகளையும் படித்த வாசகர்களுக்கு இத்தொகுதி சற்று வித்தியாசமாகத் தோன்றலாம். இதன் மூலம் எனது ஆரம்பகால எழுத்துநடை எவ்வாறு இருந்தது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். எனது ஆரம்பகால எழுத்துக்களை ஆவணப்படுத்தவும் இச்சிறுகதைத் தொகுதி உதவும் என்று கருதுகின்றேன்.

சிறுகதைகள் மட்டுமல்ல நாவலும் எழுதுவதற்கு நிறைய மனிதர்களுடன் பழகி அவர்களுடைய குணங்களைப் புரிந்து கொள்ள வேண்டி இருந்தது. இதற்கு எனது வேலை பெரும் உதவி செய்தது எனலாம். நான் இலங்கையின் பல பாகங்களிலும் வேலை செய்திருக்கிறேன். சிங்களவர்களுடனும் அதிகம் பழகி இருக்கிறேன். அவர்கள் பற்றியும் நிறையக் கதைகள் எழுதி இருக்கிறேன். அவை அடுத்த தொகுதியில் அதிகமாக இடம் பெறுகின்றன. நான் பழகுபவர்களிடம் காணப்படும் விசேஷ குணங்கள் ஏதாவது ஒரு கதையில் இடம் பெற்றிருக்கும்.

இக்கதைகளில் வரும் முடிவு ஒரே மாதிரியாக சில கதைகளில் இருப்பதை நீங்கள் காணலாம். ஆனால் கரு வித்தியாசமாக இருப்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

முகில்வண்ணன்
கலாபூசணம் வே.சண்முகநாதன்

ISBN 978-955-54011-9-7
9 789555 401197 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org